1176
24 FEB 1933

ஏழாம் புஸ்தகம்

# ஜனாபிமானி வாசகம்

அன்னபூரணி தேவசகாயம்
எழுதியது

சென்னை:
ஸி. குமாரசாமி நாயுடு அண்டு ஸன்ஸ்
1932

ஜ

# முகவுரை

இந்தப் புஸ்தகம் இரண்டாம்பாரம் அல்லது ஏழாம் வகுப்புக்கு ஏற்றதாய் எழுதப்பட்டுள்ளது. மாணவர் பல விஷயங்களிலும் பொது அறிவு அடைவதுடன் வாசிப்பிலும் அறிவிலும் பிரீதியுடையவர் ஆகுமாறு இனிய நடையில் எழுத முயன்றிருக்கிறேன்:

போக்குவரத்து சாதனம் மிக மலிந்த இக்காலங் களில் இந்து தேசத்தின் அழகிய ஸ்தலங்களை எவரும் பார்த்துப் பயனடைய ஏவும் கருத்துடன் பல சிறந்த இடங்களின் மாட்சிமை ஜனுபிமானி வாசகப் புஸ்தகங் களில் வெளியிட்டிருக்கிறேன். உலகின் நலத்திற்காய்த் தன்னலம் கருதாது உழைத்த உத்தமர் சரித்திரங்கள் வாசிக்கும் மாணவர் தாமும் குணநலம் பெறுவாரென நம்புகிறேன். இதில் சேர்க்கப்பெற்ற லீலாவதி என்ற நாடகம் மாணவர் தாமே நடித்துப் பயன் அடைவதோடு, மதுவின் மூலமாய் வரக்கூடிய தீங்குகளை எடுத்துக் காட்டக் கூடியவர் ஆவார்.

உபாத்திமார் பலவிதத் தொழில் துறைகள், ஆறுகள், ஏரிகள், மலைகள், வனப்பில் பேர்பெற்ற காடுகள், நீர்வீழ்ச்சிகள் பார்த்துவரச் சிறுவரை ஏவுவார் என்று நம்புகிறேன்.

சேலம்,
24-1-'33

அ. தேவசகாயம்.

63 N33 B

# பொருள் அடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | பக்ஷிகளின் பரதேச வாழ்க்கை | 1 |
| 2. | பிருதிவிராஜ் | 6 |
| 3. | கல்வியும் கைத்தொழிலும் | 11 |
| 4. | அம்ருதாகண்ட தரிசனம் - I | 15 |
| 5. | இலக்கணப் பாடம் - I | 23 |
| 6. | ஜலம் - ஜலஸூத்திரங்கள் | 24 |
| 7. | அம்ருதாகண்ட தரிசனம் - II | 29 |
| 8. | புருவின் ஊழியம் | 35 |
| 9. | காலத்தின் அருமை | 38 |
| 10. | இலக்கணப் பாடம் - II | 41 |
| 11. | ஆகாய மண்டலம் | 43 |
| 12. | பிரான்சு தேசத்தில் குடியரசு ஏற்பட்ட வரலாறு | 49 |
| 13. | சத்தியம் தலைகாக்கும் | 52 |
| 14. | கோயம்புத்தூர் விவசாய சாஸ்திரக் கலாசாலை | 55 |
| 15. | இலக்கணப் பாடம் - III | 60 |
| 16. | தமிழ் | 61 |
| 17. | புத்தர் - I | 64 |
| 13. | நீலகிரி மலைகளைப் பார்த்துவந்த வரலாறு | 70 |
| 19. | நாவுக்கும் சரீர உறுப்புக்களுக்கும் நடந்த விவாதம் | 75 |
| 20. | கோலார் - பொற்கேணிகள் | 79 |
| 21. | கடவுள் வணக்கம் | 83 |
| 22. | புத்தர் மதம் - II | 86 |
| 23. | கான்பூர் | 89 |
| 24. | இன்சொல் கூறல் | 92 |
| 25. | பண்டிதை ராமாபாய் - I | 96 |
| 26. | மண் எண்ணெய் அல்லது கெரோஸின் எண்ணெய் | 100 |
| 27. | பண்டிதை ராமாபாய் - II | 103 |
| 28. | லீலாவதி | 109 |
| 29. | திருவள்ளுவநாயனார் | 122 |
| 30. | இலக்கணப் பாடம் - IV | 128 |


## செய்யுள் பாடம்


| | | |
|---|---|---|
| I. | நீதிநெறி விளக்கம் | 129 |
| II. | அறப்பளீசுர சதகம் | 131 |
| III. | கடவுள் வாழ்த்து | 134 |
| IV. | கௌசலையார் தாலாட்டு | 135 |
| V. | இனியது நாற்பது | 13[illegible] |
| VI. | அறநெறிச் சாரம் | 13[illegible] |

# ஜனபிமானி வாசகம்

## ஏழாம் புத்தகம்

---

### 1. பக்ஷிகளின் பரதேச வாழ்க்கை

"வெயில் காலம் வந்துவிட்டது. வெயில் நேரம் வெளியே தலை காட்ட முடியவில்லை. இரவில் ஒரு இலை தானும் அசைகிறதில்லை."

"நாம் சீக்கிரம், இன்னும் பத்து தினத்தில் குளிர்ந்த இடம் எதற்காவது போவோம்."

"நாம்தானு வெயில் காலம் புது இடங்கள் பார்த்து இன்பமாய்ப் போது போக்குகிறோம்! மிருகங்கள் பக்ஷிகளுக்குக்கூட இந்த வழியெல்லாம் தெரிகின்றதே"

"அம்மா அது எப்படி? பக்ஷிகள் தேசம் விட்டு தேசம் போகப் பயப்படாதோ?"

"அவைகளுக்கா பயம்? பக்ஷிகளுக்குள்ள தைரியம். மிருகங்களுக்கு இருக்கிற மனோதிடன், மனிதனுக்கு வந்தால் போதாதா!"

"அது எப்படி அம்மா?"

"திருஷ்டாந்தம் சொல்லுகின்றேன் கேள். சில தேசங்களில் மழை நாளில் புல் வளர்ந்து அதை நம்பி ஜீவிக்கும் பிராணிகளுக்கு அறுசுவை உணவு கொடுத்து வேனிற்காலம் பயிர் பச்சை அடையாளமின்றித் தீய்ந்து கிடக்கின்றன. அப்போது மிருகங்கள் அத்தியந்த ஞானத்துடன் ஏற்ற காலத்திலேயே இடம் பெயர்ந்து தமக்கேற்ற மனோகரமான ஆறுகளை யடுத்த பூமிகளுக்குப் போய் விசாரமின்றி உலாவித் திரிகின்றன. பின்பு தாம் விட்டுவந்த நாடுகளில், நூற்றுக்கணக்கான மைல்களுக்கு அப்பால், மழை பெய்து நாடு செழித்து நற்காலம் பிறந்தசெய்தி எந்தத் தபால்காரன் வந்து சொல்வானோ, அறியோம். சற்றும் தாமதமின்றிப் பயணங் கூட்டித் திரும்பிப் போய் விடுகின்றன.

உறைபனி தேசத்து மனிதர் குளிர்காலம் பனிக் கட்டியால் கட்டின குகைபோன்ற இடுக்கமான வீடுகளிலும், வெயில்காலம் இன்பமான கூடாரங்களிலும் வசிக்கிறார்கள். வனாந்தர வாசிகள் பலர் கொடிய வெயில் காலம் மலைகளுக்குப் போய்விடுகிறார்கள்.

இதிலும் பக்ஷிகளின் சமர்த்து மகா விசேஷமானது. இந்தியா மலரும் காயும் கனியும் பன்னிரு மாதமும் கொடுத்து உதவும் தேசம். ஊன் உண்டு உடலைப் பேணும் பக்ஷிகளும் உணவு தேட இடம்விட்டு வெகு தூரம் போக அவசியம் நேரிடுவதில்லை. அப்படியன்றிக் குளிர் மிகுந்த தேசங்களில் குளிர்காலம் கஷ்டகாலம். அப்போது தரை பனிக்கட்டி மூடி, ஆறுகள் நீர்நிலைகள் யாவும் ஈயார் நெஞ்சம்போல் உறைந்து பயனற்று

விளங்கும். அப்போது பக்ஷிகள் ஆயிரக்கணக்காய்ப் புறப்பட்டு நாடுகள், மலைகள், கடல்கள் வீரமாய்க் கடந்து சென்று தமது மனதுக்கு உகந்ததும் கண்ணுக்கு இனியதுமான இடங்களில் சுகித்து இருக்கின்றன.

இன்பமான குளிர்காலம் ஆரம்பித்தவுடனே மறுபடி தாம் விட்டுவந்த தேசம் நாடி, சொல்ல அரிதான தேசாபிமானத்துடன் விரைந்துபோய்ச் சேர்கின்றன, முதலாவது கூடுகட்டிப் பின் முட்டையிட்டுச் சேமமாக வாழ்கின்றன. இதற்குச் சிற்சில திருஷ்டாந்தம் சொல்லுவோம் :



தீபஸ்தம்பம்

இங்கிலாந்து தேசத்தின் பக்ஷிகள் எகிப்து தென் ஆபிரிக்காவரை போவதாய் ரூபகாரம் உண்டு. பக்ஷிகள் குடி போகுங்காலம் தீபஸ்தம்பங்களில் விழித்திருக்கும்

காவலாளர் அவைகள் ஆயிரம் பதினுயிரம் தீபத்தைச் சுற்றிவந்து விளையாடுவதை வருஷந் தவருமல் கவனித்து இருக்கிருர்கள்.

வேறு பல பக்ஷி அபிமானிகள் அவைகளைக் கவனிக்கும்படி மிக நுட்பமான அலுமினிய மோதிரம் காலில் போட்டுவிட்டதில் பல காரியங்கள் கண்டறிந்தார். சில பறவைகள் எங்குமே இடம் மாற்றிப் போகவில்லை. சொற்பதூரம் போய்த் திரும்பி வந்தவை வேறு பல. வெகுதூரத்தில் தமது விடுமுறை நாள் வாசஸ்தானம் ஏற்படுத்திக்கொள்கின்றன இன்னுமொரு சார்பார். இங்கிலாந்தின் பக்ஷிகள் ஸ்காட்லாந்திலும், ஸ்காட்லாந்தின் வாசிகள் ஐயர்லாந்திலும், ஜெர்மனியின் பறவைகள் அதை அடுத்த பின்லாந்திலும், ஸ்பெயின் அஸீரியா பிரான்ஸ் தேசங்களிலும் ஆப்பிரிக்காக் கண்டத்தின் சகல பாகங்களிலும் காணப்பட்டிருக்கின்றன.

பிரயாண பக்ஷிகளில் பெரும்பாலானவை குளிர் காலம் தொடங்க முன்னமே புறப்பட்டு விடுகின்றன. அதிலும் முன் ஒருக்காலும்போய் அனுபோகமில்லாத சிறுவர்தான் எல்லாருக்கும் முந்தி வெளியேறுவது. இவர்களுக்குப் பாதை காட்டுவது யார்? வழி தப்பி அலைந்து மோசம் போகாமல் குறிப்பாய் நாடின தேசம் போய்ச் சேருகின்றன.

பிரயாண காலம் இரவு வழியில் தீபஸ்தம்பங்களில் அதிகநேரம் போவதில்லை. வேகமோ அதை என்ன சொல்ல! மணிக்கு 50 மைல். கடிதம் எடுத்துச் செல்லும் புரு மணிக்கு 55 மைல் செல்லுகின்றன. ஆனுல் இதிலும் இருமடங்கு மும்மடங்கு வேகமாய்ச் செல்லச் சக்தியுடையன. மழைக்கும் இடிக்கும் பெருங் காற்

றுக்கும் பயந்து பிரயாணம் நிறுத்துவதில்லை. அதனால் வழியில் அநேகம் மாண்டு மண்ணுலக வாழ்வை அசட்டைசெய்து முடிக்கின்றன. பிரயாணம் நிறுத்தினால் ஜாதியார் என்ன சொல்லுவாரோ?

பிரயாணக்காரப் பக்ஷிகளில் துருவங்களில் வசிக்கும் கடல்சிட்டு விசேஷித்தது என்று சொல்லலாம். அவைகள் வடதுருவங்களில் சூரிய ஒளி மங்கும்காலம் வந்தவுடனே தென்துருவத்திற்கும், தென்துருவத்தில் வெயில் நாள் போனவுடனே வட துருவத்திற்கும் போய்விடுவதால் ஏறக்குறைய சதாகாலமும் சூரிய வெளிச்சத்தில் வசிப்பதாக மதிக்கலாம். ஆனால் இந்த சுகம் அடைவதற்காக அவைகள் செய்யும் பிரயாணத்தைக் கவனியுங்கள். போகப் பதினோராயிரம் மைல் திரும்பிவரப் பதினோராயிரம் மைல்! இங்கிலாந்திலிருந்து ஆப்பிரிக்காக் கண்டத்துக்குப் போகும் பறவைகள் ஐந்து அல்லது ஆறு ஆயிரம் மைல் போய்வருகின்றன.

“முயற்சியுடையார் இகழ்ச்சி அடையார்” என்பது அவைகளின் கருத்து போலும்.

“அப்படியானல் நாம் இந்த வருஷம் வெயிற்காலம் முடியும்வரை சிம்லாவில் இருப்போம். அடுத்த வருஷம் பிழைத்திருந்தால் சிபேரியாவுக்கும், அதற்கடுத்த வருஷம் நீயூசிலன்டுக்கும் போகலாம். ஓர் பெரிய ஆகாயக் கப்பலில் போகலாம். பக்ஷிகளைவிட நாம் சமர்த்து என்று உலகோர் அறியட்டும்.”

## 2. பிருதிவிராஜ்

சுமார் ஒன்பது நூற்றாண்டுகளுக்குமுன் வட இந்தியாவில் நான்கு விசேஷித்த ராஜ்யங்கள் இருந்தன. அவற்றின் தலைநகர்களாகிய டில்லி, ஆஜ்மீர், குஜராத் நகர்கள் இன்றைக்கும் இருக்கின்றன. குஜராத்துக்குத் தற்காலத்தில் ஆமதபாத் என்ற பெயர் வழங்கி வருகிறது. நான்கு இந்து அரசர் இந்த ராஜ்யங்களை ஆண்டு வந்தார்கள். அவர் பந்துக்களானபடியால் கொள்வன கொடுப்பனையால் சம்பந்தப்பட்டிருந்தார்கள். அவர்களுக்குள் பொறாமை பகையால் விளையும் சண்டைகளும் சச்சரவுகளும் சாதாரணமாய் இருந்தது.

அக்காலங்களில் குஜராத் மன்னன் ஆண் சந்ததியின்றி இறந்துபோகவே, அவனுடைய மகள் புதல்வனும் டில்லி அரசனுமான பிருதிவி மன்னன் இரு நாடுகளுக்கும் பார்த்திபனானான். கனோஜ் அரசன் மரித்துப்போன அரசனுக்குச் சகோதரி குமாரன். ஆகையால் அவன் பிருதிவி அரசனை வீணே பகைத்துப் பொல்லாப்புச் செய்யும் தருணம் தேடிக் காத்திருந்தான். அவனுக்கு அழகும் அருளும் சரிவரப் பொருந்திய ஒரு செல்வி இருந்தாள். பிருதிவி வேந்தன் அவள் புகழைக் குறித்துக் கேள்வியுற்று அவளையே மணம் செய்யும் ஆவல் கொண்டான்; ஆகிலும் அது ஆகக்கூடிய காரியமாகத் தோன்றவில்லை.

ஒருநாள் ராஜா மேற்கண்ட விஷயங்களைக் குறித்து எண்ணமிட்டுக்கொண்டு இருந்தார். அவரைக் குழந்தைப் பருவமுதல் பாதுகாத்த கிழவி ஒருத்தி இதையெல்லாம் கவனித்து மன்னனிடம் போய், "வேந்தே,

உமது திவ்யரூபம் ஒளிமங்கி, முகநாடி வேறுபட்டுக் காணப்படுவது ஏன்?'' என்ருள்.

“அதை எப்படிச் சொல்லுவது பாட்டி?''

“ஹா, நான் மார்பில் போட்டு வளர்த்த பிள்ளை. எனக்குத் தெரிவிக்காத இரகசியமா!''

“அது உண்மைதான். இந்தக் காரியம் உன்னுல் ஆகாது''.

“என் அப்பனே சொல்லும் அப்புறம் பேசலாம்.''

“கனூஜ் நாட்டு மன்னனுக்கு ஒரு பெண் இருக்கிருள்......''

“இருக்கிருள்.''

“அவள் அழகிலும் அன்பிலும் சிறந்தவள்.''

“சிறந்தவள். அழகு வஞ்சனையுள்ளது. அவள் பிதா உம்மை ஜென்மபகையாய்ப் பகைக்கிருனே.''

“நான் முதலாவதே சொன்னேன். உன்னுல் இந்தக் காரியத்தில் ஒன்றும் செய்யமுடியாது.''

கிழவிக்கு ரோசம் ஒருபாலிருக்க, அரசன் கவலை எவ்விதமும் தீர்க்கவேண்டுமென்ற ஆவலும் அவளை வருத்தியது. அரசனிடம் சஞ்சோகதா என்னும் அரசகுமாரியின் படமும் சொற்பத் தொகையான பணமும் பெற்றுக்கொண்டு கனேசி நாடுபோய்ச் சேர்ந்தாள். அரமனையில் தாதி உத்தியோகம் எப்படியோ சம்பாதித்துக்கொண்டாள். அரச குமாரத்திக்கு ஊழியம் செய்யும் பதவியும் வெகு சீக்கிரம் அவளுக்குக் கிடைத்தது.

கிழவி பிருதிவி மன்னனுடைய படத்தை ராஜாவின் அரும்புதல்விக்குக் காட்டி இரவுபகலாய் அவனுடைய வீரச்செயல்களைப்பற்றிப் பேசினாள். அவனுடைய காதலைப்பற்றியும் தெளிவாய்க் கூறினாள். இளவரசி டில்லி மன்னனையன்றி வேறு எவரையும் தான் மணந்து கொள்வதில்லை என்று தீர்மானம் செய்து கொண்டாள். கனோசி அரசனுக்கு இந்தப் பெரிய ரகசிய வரலாறு சிறிதளவும் தெரியாது. தன் குமாரத்திக்கு அதிசீக்கிரம் விவாகம் நிறைவேற்ற விரும்பினான்.

அக்கால அரசகுல வழக்கப்படி பெண் தனக்குகந்த வரனைத் தெரிந்தெடுக்கும்படியாகத் தேசத்திலுள்ள பல வேந்தருக்கும் சுயம்வரம் அறிவிக்க ஓலை அனுப்பினான். அரசன் தூது கேட்ட அரசர் யாவரும் அதிசீக்கிரம் விரைந்து சென்று சுயம்வர மண்டபத்தில் கூடினார்கள். அவரை நல்வரவு கூறி வரவேற்பதும் அதிதிகளுக்குச் செய்யவேண்டிய உபசரணைகள் நடத்துவதும் அரமனை ஆட்களுக்குப் பெரிய வேலையாய் இருந்தது. டில்லி அரசனுக்குத் தூது போகவில்லை. இது அரசகுமாரிக்கு மகா மனநோவை உண்டாக்கியது.

குறித்த நாளில் சிங்கார மண்டபம் ஒன்றில் சகல அரசரும் பிரபுக்களும் பெரியோரும் வெகு சல்லாபமாய் வீற்றிருந்தார்கள். பிருதிவி அரசன் வராதபடியால் அவனுக்குப் பதிலாக அலங்கோலமாய் அமைக்கப் பெற்ற சிலை ஒன்றை வாசலில் நாட்டி வைத்தார்கள்.

சஞ்சோகதாவுக்கு தன் பிதா டில்லிமன்னனை இவ்வளவு வெறுப்போடும் விரோதத்தோடும் நடத்துவது நியாயமில்லை, தருமமில்லை என்பதாய்ப் புலப்பட்டது.


BUTTERWORTH

மிருந்த கலக்கத்துடன் மேகங்களால் மறைக்கப்பட்ட பூரண சந்திரன்போல் தோழியர் சூழ்ந்துவர முக்காட்டை இழுத்துத் தன் இனிய முகத்தின் திவ்ய சொருபம் சிறிதளவும் தெரியாதபடி மூடிக்கொண்டு சபைக்குள் சென்றாள். சுயம்வரமாலை அவள் கரத்தில் மின்னல் கொடிபோல் தொங்கினது. விழி தட்டாமல் அவளைப் பார்த்திருந்த அரசர் அவள் பாதங்களில் கிடந்து முறையிட்ட சிலம்பின் ஓசை கேட்டாரே ஒழிய அவளுடைய தீங்குரல் கேட்டாரில்லை. அங்கு வீற்றிருந்த வீரருடைய புகழும் பெருந்தகையும் தோழிசொல்ல கவனித்துக்கேட்டுக் கடந்து சென்றாள். மண்டபத்தில் வீற்றிருந்த முடிமன்னரில் ஒருவரையும் கன்னியானவள் சன்மானிக்கவில்லை! மாலை அவள் கையில் இன்னும் தொங்குகிறது! அரசருக்குள் இருந்த குதுகலம் நீங்கி, கண்கள் சிவந்து, 'செந்தாமரை முகங்கள் வெண்தாமரைகளாய் வெளுத்தன.

தன்மனக் குறைபோல் உண்டோ என்று வருந்தின இளங்குமாரி மண்டபம் விட்டு வெளிப்பட்டுப் போகும்போது வாசலில் பரிகாசத்துக்காய் வைக்கப்பட்ட சிலையை உற்று நோக்கிச் சிறிதும் ஆலோசிக்காமல் மாலையை அதன் கழுத்தில் பேரன்போடு சூட்டினாள். அவள் மலர்ந்த முகம் அப்போது எல்லாரும் பார்த்தார்கள். "மன்னர்திலகமே, நீயே மணமாலைக்கு உகந்தவன்'' என்று கன்னி வாய்திறந்து இன்பமாய்க் கூற, கண்டோர் இது என்ன என்று பிரமித்து நிற்க, வெளியேயிருந்து ஒரு யௌவனவீரன் விரைந்துவந்து பெண்ணைச் சட்டென்று தூக்கிச்சென்று வெளியே அருகில் நின்ற தன் குதிரைமேல் ஏற்றிச் சென்றான்.

மன்னரது கோபாவேசம் பற்றி எரிந்தபோதிலும் அவர்களால் ஒன்றும் செய்பக்கூடவில்லை.

பிருதிவி மன்னன் அரசகன்னிகையை மணஞ் செய்து ஒருவருஷக்காலம் இன்பமாய்க் காலம் போக்கினான். கன்னோசி நாட்டரசன் தன் கோபத்துக்கு அடிமையாகிக் குற்றேவல் செய்கிறவனாய் கஜினி மகம்மது என்னும் மகமதிய அரசனை டில்லிமீது படையெடுக்கக் கேட்டுக்கொண்டான். அவன் அப்படியே வந்ததில் பிருதிவிராஜன் அவனோடு போராடிப் போர்க்களத்தில் மாண்டான்.

"ஆறுவது சினம்". கோபத்திற்கு இடம் கொடுத்தால் "தீராக்கோபம் போராய் முடியும்."

## 3. கல்வியும் கைத்தொழிலும்

தீபாவளிப் பண்டிகை அன்று கூடிவந்த ஜனங்களுக்குச் சுந்தரேசன் செய்த பிரசங்கம்

**அன்பார்ந்த சகோதரர்காள் :**

உங்களெல்லாரையும் ஒருமிக்க சந்திப்பது எனக்கு மிகுந்த சந்தோஷம். நீங்கள் பிரயாசப்பட்டு உழைத்து மண்ணிலிருந்து ஆகாரம் எடுக்கிற வேலைக்காரர். நியாயப்படி இந்திய மக்கள் எல்லோரும் உங்கள் வேலையைக் கற்றுக்கொள்ளவேண்டும். உங்களுக்கும் போதிக்க வேண்டும். அப்போது எல்லோரும் க்ஷேமமாய் இருப்போம்."

வெள்ளைச்சாமி : "அது எப்படி ? நாங்கள் கலப்பை பிடித்து உழுகிற கீழ்சாதி உங்கள் மாதிரி கல்விகற்றுக் கொள்ளுகிறது ! நீங்கள் மனம் வைத்தால் என்னவேலை முடிக்கமாட்டீர்கள் ! எங்களுக்குக் கல்வி வருமா சாமி?"

"எந்த ஜாதியாரானாலும் கல்வி கற்றுக்கொள்ள யாதொரு தடையும் இல்லை. இதை நம்பு ; முயற்சி யுடையார் இகழ்ச்சியடையார்."

"புத்திமான் பலவான்"

"கைப்பொருடன்னின் மெய்ப்பொருள் கல்வி ?"

"கற்றோர்க்கு கண் இரண்டு, கல்லாதார்க்கு
முகத்தில் இரண்டு புண்"

என்பதாய் முதியோர் சொல்லுகிறார்கள். கல்வியானது சூரிய சந்திரரைப்போல் சகல ஜாதிகளுக்கும் பொது வான ஆஸ்தி. அதை எல்லா ஜனங்களும் பெற்று அநுபவிக்கலாம்.

மாடப்பன் : "ஸ்வாமி, நாங்கள் கணக்கெழுதப் போகிறோமா ? நாற்று விடவும், நெற்பயிருக்குத் தண் ணீர் இறைக்கவும் கவலையடிக்கவும் கல்வியறிவு என்ன உதவி செய்யும் ?

சுந்தரேசன் : அதைத்தான் இப்பொழுது உங் களுக்குச் சொல்லப்போகிறேன். இங்கிலாந்து ஜெர் மனி, கனடா, பிரான்ஸ், ஆப்பிரிக்கா, ஆஸ்த்ரேலியா, அமெரிக்க ஐக்ய மாகாணங்கள் போன்ற தேசங்களில் குடியானவர்கள் பலர் கோடீஸ்வரராய் வாழுகிறார்கள். காரணம் அவர்களின் கல்வியறிவே. பதினான்கு வயது வரையில் பாடசாலையில் கட்டாயமாய்க் கல்வி பயின்று,

பிறகு அவர்கள் சிறிதுகாலம் கிருஷிகசாஸ்திரம் அப்பியசித்து அதன்பின் அந்தவேலை செய்கிறார்கள். மேலும் சாஸ்திரப் பண்டிதர்கள் செய்கிறவேலை அற்புதமானது. சிறந்த மாதிரிகளாய் எல்லா ஆயுதங்களும் செய்து கொடுக்கிறார்கள். கலப்பை, போர் அடிப்பதற்கும் வேளாண்மைக்கும் வேண்டிய கருவிகள், எல்லாம் அதிக பிரயாசையின்றிச் சிறிது நேரத்தில் குறைவில்லாதபடி வேலைகளை முடிக்க ஏற்பட்டவைகளாம்.

மேலும் மாடு வளர்க்கவும் பால் கறக்கவும் பாலிலிருந்து வெண்ணெய் எடுக்கவும் பாலைக் கட்டியாக்கிப் பத்திரம் பண்ணவும், இன்னும் பலவேலைகள் செய்யவும் கற்றுக்கொண்டு சமர்த்தாய்க் காரியம் முடித்துச் சுகமாய் ஜீவிக்கிறார்கள்.

குப்பன் "சாமி, பணம் இல்லாதவன் நடை பிணத்துக்கு ஒப்பாயிருக்கிறான். நீங்கள் மஹாராஜா என்ன நினைத்தாலும் முடிப்பீர்கள். எங்களுக்கு என்ன இருக்கிறது?"

சுந்தரேசன் : பூலோகமே ஒரு பெரிய களஞ்சியம். கல்வியின் உதவியால் அந்தக் களஞ்சியத்தைத் திறக்க வேண்டும். கல்விதான் செல்வத்துக்கு ஆதாரம். செல்வம் கல்விக்குக் காரணமாகாது. ஒரு திருஷ்டாந்தம் கேள். பண்டிதை ராமாபாய் சரஸ்வதி அம்மை தன் கையில் ஏதுமற்றவள் பூலோகத்தைச் சுற்றி வந்திருக்கிறாள். ஆயிரக்கணக்கான ஏழைகளை ஆதரித்தாள்.

2. அமெரிக்காவில் தற்காலம் உள்ள கோடீஸ்வரர் பலர் சாதாரண கூலிக்காரப் பையன்களாய் இருந்தவர்கள்.

பணம் இன்றைக்கு ஒருவன் கையிலும் நாளைக்கு மற்றொருவன் கையில் இருக்கும். காலத்தை ஆதாயம் பண்ணி உழைக்கிறவன் கையில் வந்துசேர ஆசைப் படும்.

மாடப்பன்: அப்படியானால் நாங்கள் இனி இரவுப் பள்ளிக்கூடத்திற்குக் கிரமமாய்ப் போவோம்.

சுந்தரேசன்: அது மிகவும் நல்லயோசனை தான். அப்போது கிருஷிக சாஸ்திர நூல்கள் வாசித்து நல்ல முறைப்படி பயிர் செய்வீர்கள். நாலுமடங்கு பலன் கிடைக்கும்.

மேலும் நீங்கள் காட்டில் பயிர் இல்லாத காலங் களில் நூல்நூற்கவும் துணி நெய்யவும் கற்றுக்கொள்ள வேண்டும். கூடாரங்களில் வாசஞ்செய்கிற அராபிய பெண்கள் முதலாய்த் துணி நெய்கிறார்கள் என்று சொல்லிச் சுந்தரேசன் உட்கார்ந்தான்.

இதன்பின்பு வந்திருந்த பெரியோர் பலர் தாங் களும் பலவிதத் தொழில்களையும் விசேஷமாய் கிருஷிக வேலையும் நெசவு வேலையும் கற்றுக்கொள்ளவேண்டு மெனப் பேசினார்கள்.

---

வினாக்கள்:

1. கல்வியின் பயன் என்ன?
2. பணமில்லாதவன் கல்வி கற்க முடியுமா?
3. இந்தியாவில் உழவன் ஏழையாயிருப்பது ஏன்?

# 4. அம்ருதாகண்ட தரிசனம் - I

## இந்தியாவின் தற்கால நிலையும் வருங்கால நிலையும் :

நான் கண்டதோர் இனிய கனவை எடுத்துரைக்கு முன் எனது குடிப்பிறப்பைக் குறித்து சற்று கூறுகிறேன். என் பிறப்பிடமாகிய குக்கிராமம் பல குன்றுகள் மத்தியில் இருக்கிறது. அதற்கு ரெயில் பாதையாவது தந்தித்தபால் முதலிய நாகரீகமான தொல்லைகளாவது கிடையாது. இரவில் மின்மினிகள் வீதி விளக்குகளோடு போட்டிபோட்டுப் பிரகாசிக்கும்.

எனது கிராமத்துக்கும் அடுத்த மூன்று கிராமங்களுக்கும் பொதுவான பாடசாலை ஒன்று ஒரு சாவடியில் நடைபெறும். அதில் நூறுவரை பையன்களும் பத்துச் சிறுமிகளும் வாசித்து வருகிறார்கள். எங்களுக்குப் போதிக்க ஒரு நல்ல உபாத்தியாயர் உண்டு. இன்னும் ஒருவர் வரப்போகிறார். தற்காலம் நான்கு கிராமங்களிலும் நடக்கும் வியாச்சியங்கள் எதையும் தீர்மானிக்க எம் குரு அவசியம் போய் ஆகவேண்டும். கல்யாண காரியங்கள், மாரியம்மன், காளியம்மன் திருவிழா ஒழுங்காக அவரின்றி ஆகாது. மேற்கண்ட பல விவகாரங்கள் திருவிழாக்கள் இல்லாதபோது எங்களுக்குப் பாடம் வெகு அவசரமாய் நடக்கும். அவர் தூரத்தில் வரும்பொழுதே மாணுக்கர் தமது கதைகள் ஆடல்பாடல்கள் சில்லரைத் தர்க்கங்கள் யாவும் ஒழித்து பாடத்தில் உள்ள அபிலாசையை உரக்கக் கூவித் தெரிவிப்போம்.

கடந்த வைகாசி மாதம் முதல் வாரத்தில் அண்ணவியார் தம்முடைய வயலுக்குப் போடக் குளேக்கட்டு

கொண்டுவரும்படி என்னையும் இன்னும் நாலு பெரிய பையன்களையும் அனுப்பினர். எங்களுக்கு இருந்த சந்தோஷம் வரையற்றது. நானும் என் தோழன் சோமுவும் அதிவேகமாய்க் காட்டுக்கு ஓடினேம். அங்கே மலைகளுக்கிடையில் சதா ஓடிக்கொண்டிருக்கும் சிற்ருறு ஒன்றின் ஓரமாய் நடந்து அங்கிருந்த பாரை மீது உட்கார்ந்துகொண்டோம். சோமு என்னருகில் இருந்து தன் புல்லாங்குழலை வாசிக்க ஆரம்பித்தான். அயலில் இருந்த இருண்ட அடவியில் வண்டுகள் சுருதி கூட்டப் பக்ஷிகள் பாடின இன்பகீதங்களைக்கூட நாங்கள் கவனிக்கவில்லை.

நான் திடீரெனத் தவறி ஜலத்தில் விழுந்து விட்டேன். அப்புறம் நான் கண்திறந்து பார்த்த போது மகா இன்பமான ஓர் இடத்தில் உடல் பூரித்து நின்ற பல வாலிபரைக் கண்டேன். நான் வெட்கித் தலைகுனிந்து கொண்டேன். அவர்கள் எல்லாரும் என்னிலும் சிறக்க உடையணிந்து, கல்விக் கேள்விகளின் பெருமையால் மேன்மக்களாய் விளங்கினர், ஆகிலும் அவர்களில் சிறந்தவனுகிய அம்ருதா என்னிடம் வந்து, கைபற்றி இழுத்து, "வீட்டுக்குப் போகலாம் வா" என்றுன். அவ்விடம் ஒரு புது உலகம்போல் காணப்பட்டபோதிலும் அம்ருதா மாத்திரம் எனக்குப் பழைய சிம்நகிதனுகவே காணப்பட்டான். அவனும் என்னிடம் பிரியமாய்ப் பேசினுன்.

அங்கு நடந்தவை யாவும் நூதனமாகக் காணப்பட்டன. பாஷை, உடை, நடை, காலநிலை, விளைபொருள், ஜனங்கள் யாவும் இந்தியாவிற்குரியனவே. இது என்ன விபரீதமெனத் திகைத்தேன்.

அம்ருதா என்னை அழைத்துச் செல்ல, நாங்கள் முதலாவது சிறுவர் சிறுமியர் விளையாட்டு ஸ்தலங்களைக் கடந்து சென்றோம். பின்பு பாலர், தாய்மார், தாதிமார் உலாவி இளைப்பாறும் இடம் கடந்தோம். அவைகளை யடுத்தே கடைத்தெருக்கள், அவற்றையும் கடந்து சென்றோம். நான் அங்கே பிச்சை எடுக்கிறவர்களைக் காணவில்லை. கடைகளில் இரண்டாவது விலை கேட்கிற வழக்கம் இல்லை. கிழிந்த உடை தரித்தவர்களையும் காண்பதரிதா யிருந்தது.

என் கிராமத்தில் எனக்குச் சொந்தமான கமுகுத் தோப்பும், ஒரு கொடிக்காலும் உண்டு. ஆதலின் இவ்வூரில் வெற்றிலை பாக்கு கடைகள் உண்டோ என்று கவனித்துக்கொண் டிருந்தேன். சுருட்டுப் புகையிலை "மணத்திலும் காரத்திலும் நிகரற்ற பொடி" முதலிய சரக்குகள் அவ்வூரில் பார்க்கவே முடியாது; வெற்றிலை பாக்கு கண்ணிலும் காண்பதரிது, என அறிந்து சந்தேகித்து மெதுவாய் அம்ருதாவைக் கேட்டேன். அவன் சற்று யோசித்து, தலையை அசைத்துக் கொண்டு, "அண்ணா அதெல்லாம் பூர்வ காலங்களில் உபயோகிப் பார்களாம்..." என்பதற்குள் நான் அந்தப் பேச்சை மாற்றிவிட்டேன். ஊரிலுள்ள வீதிகளும் வீடுகளும் சுத்தமாயும் அழகாயும் இருந்தது. எனது நண்பனிடம் பல காரியங்களையும்பற்றி வினவினேன். அவனும் அவற்றிற்கேற்ற விடைகள் பகர்ந்தான்.

"அம்ருதா, இவ்வூரில் அமங்கிலிகளே இல்லையோ?"

அவனுக்கு நான் என்ன கேட்டேன் என்றே தெரியவில்லை. அந்தக் கேள்வியையும் அகலவிட்டு, "இவ்

ஆரில் எந்த வருணத்தார் விசேஷமாய் இருக்கிறார்கள்? ஒருவர் நெற்றியிலும் நாமம் திலகம் விபூதி ஒன்றும் இல்லையே'' என்றேன்.

“திலகம், விபூதி, நாமமெல்லாம் என்ன பயன் தரும்?''

“இன்ன வருணம் என்று காண வேறுவழி ஏது?''

“இன்ன வருணம் என்று வித்தியாசப்படுத்துவ தால் பலன் என்ன? சகோதர சிநேகம் நீங்கித் தற்சிந் தனையும் மேட்டிமையும் அதிகரிக்கும். இவ்வூரில் அம் மாதிரித் துயர்கள் நீங்கி வெகுகாலமாயிற்று. பழைய நூல்களில் அவற்றைக் குறித்து வாசித்தேன்.''

“நீ சொல்லுவதே சரி. என் கிராமத்தில் ஜாதிக்கு ஜாதிக்குள்ள சண்டையும், குத்துப்பழி வெட்டுப் பழியும் எப்படி நான் எடுத்துரைப்பேன்! அம்ருதா, இது ஒரு பாக்கிய பூமி.''

“ஏன்?''

“பெண்கள் எவ்வளவு நாகரீகமாய்க் காணப் படு கிறார்கள்! எல்லாரும் வாசித்தவர்களோ?''

“ஆஹா. ஸ்திரீகள் வாசிக்காவிட்டால் தேசம் என்னத்திற்காகும்! வீட்டில் சுகமேது! வா, வீட்டில் அம்மை, அக்கா, அப்பா எல்லாரும் உன்னைக் காண விரும்புவர்.''

அம்ருதாவின் வீடு ஒரு குன்றின்மேல் இருக் கிறது. நாங்கள் பேசிக்கொண்டே குன்றின்மேல் ஏறி னோம். வீட்டை அணுகும் பாதையின் இருபாலும் உள்ள மரங்கள் நிழலுடன் கனியுதவி, நிலத்தைச் சிறப்

பித்து நிற்க, வீட்டின் முன்பக்கம் இருந்த பல பாத்தி களில் செடி கொடிகள் வெண்மை, ஊதா, இளஞ் சிவப்பு, கறுஞ் சிவப்பு, மஞ்சள் முதலிய நிறங்களோடு கூடிய பல தினுசு மலர்களை ஏந்தியும், மறைத்தும், சிந் தியும் நறுமணம் வீசி நின்றன. சாய்கறிப் பாத்திகள் ஒருபால் அமைந்திருந்தன.

அம்ருதாவின் பிதா இடுப்பில் வேஷ்டியை வரிந்து கட்டிக்கொண்டு அங்கே ஏதோ வேலையா யிருந்தார். வீட்டில் அவன் தாயார் ஒரு பெரிய ஆலவிருக்ஷத்தின் நிழலில் உட்கார்ந்து துணி நெய்து கொண்டிருந்தாள். அவன் தங்கை காந்திமதி நூல் நூற்றுக்கொண் டிருந் தாள். அவர்களுடைய ஆயுதங்கள் மகா அருமையான வைகள். வெகு விரைவில் வேலையானது. சிறுவர்கூட வாள் உளி கோடாலி வைத்து வேலைசெய்து விளை யாடினார்கள். எங்களைக் கண்டதும் அவர்கள் ஓடிவந்து காலைக்கட்டிப் பிடித்துக்கொண்டார்கள். குகன் என் னும் நாய்கூட ஓடி வந்து பணிந்துகொண்டு கையை நக்கி வாலாட்டினது. அவனுடைய தாயார் விரைந்து வந்து என்னை அருமை பெருமையாய் ஏற்றுக்கொண்டு உள்ளே அழைத்துச் சென்றாள்.

வீட்டின் சகல சாமான்களும் ஒழுங்காய் அத னதன் இடத்தில் இருந்தன. புஸ்தகங்கள் அடங்கிய அலமாரிகள் வரிசையா யிருந்தன. அவைகள் தமிழ், தெலுங்கு, கனடம், ஹிந்தி, இங்கிலீஷ் பாஷைகளில் எழுதப்பட்டவை என்று நண்பன் சொன்னான். எனக் குத் தமிழ்ப்பாஷை மட்டும் அரைகுறையாய்த் தெரி யும். அதனால் பெருமூச் செரிந்து அவற்றைத் திறந்து பார்க்கவும் துணியாதிருந்தேன்.

“மரகதவல்லியைப் பார்ப்போம் வா” என்று சொல்லி, என்னைச் சமையல் அறைக்கு அழைத்துச் சென்றான். சமையல் அறை நமது படுக்கை அறை போல் சுத்தமாய் இருந்தது. அது இருளடைந் திருக்க வில்லை. அடுப்பில் புகை வரவில்லை. ஒரே தடவையில் ஆறுவகைப் பதார்த்தங்கள் ஆகிக் கொண்டிருந்தன. பருப்பு, சாதம், கூட்டு, ரசம், பாயசம், பச்சடி எல்லாம் ஏககாலத்தில் ஆயின. “இவ் வடுப்பு யார் செய்தார்” என்று அளவற்ற ஆச்சரியத்துடன் கேட்டேன். அவன் “நமது ஊரில் எத்தனை வேண்டுமானாலும் வாங்கலாம்” என்றான்.

இத்தருணம் அவனுடைய பிதா ஒரு பழக்கூடையைச் சுமந்துகொண்டு வீட்டிற்குள் வந்தார். அண்ணன் அதிகத் தொலையில் வேலை செய்துவிட்டு சைக்கில் வண்டியில் வந்து சேர்ந்தான். ஒரு மணி சத்தம் கேட்டது. எல்லாரும் கல்யாண விருந்துக்கு உட்காருவதுபோல் பந்தியில் அமர்ந்தோம். சாப்பாடு பெரிய பாத்திரங்களில் நடுவில் வைக்கப்பட்டது. ஒவ்வொருவரும் தமக்கு வேண்டிய அளவு எடுத்துக் கொண்டார்கள். ஸ்திரீகள் ஆடவரோடு சரி சமானமாய் உட்கார்ந்துகொண்டார்கள். வீட்டுத் தலைவனும் தலைவியும் எனது அந்தரங்கத்தை உணர்ந்தவர்போல் என் முகம் பார்த்துப் புன்னகை கொண்டனர். சாப்பிட்டான பின்பு எல்லாரும் காய்கனிகள் அதிகமாய்ப் புசித்தனர். மாலையில் தலைவன் கொணர்ந்த கூடையிலிருந்த கனி யாவும் அப்பொழுதே முடிந்தது.

சாப்பாடான பின்பு வெளியே நிலவு ஒளியில் சில நிமிஷமாய் உலாவி உரையாடி நிற்கும்பொழுது மணி

ஓசை கேட்டு எல்லாரும் உள்ளே போனோம். உணவு உண்ட பின்புதானா இறைவனைத் தொழுவது என்று மனதில் எண்ணமிட்டுக்கொண்டே நின்றேன். அம்ருதாவும் அவன் சகோதர சகோதரிகளும் வீணை, பிடில், புல்லாங்குழல் வாத்தியங்களை முறையாய் வாசித்தும் பலவிதக் கீதங்கள் பாடியும் பகவானைத் தோத்திரம் செய்தார்கள். பிதா அவர்களுக்கு நற்போதனை பலவும் எடுத்துக் கூறினர். ஆராதனையின் ஒவ்வொரு காரியத்தின் கருத்தும் எனக்குத் தெளிவாய்க் காணப்பட்டது. கர்ப்பூரம், புஷ்பம் முதலியவை ஒன்றும் அவ்வாராதனையில் நான் காணவில்லை.

ஆராதனை முடிந்ததும், எல்லரும் அவரவர் சோலியாய்ப் போய்விட்டார்கள். பெரும்பாலார் வாசிப்பில் அமர்ந்தார்கள். அண்ணா மாத்திரம் இரவுப் பாடசாலை நடத்த ஊருக்குள் போய்விட்டார்.

நானும் அம்ருதாவும் வெளியில் உலாவினோம்.

"அம்ருதா, உங்கள் வேலையாட்கள் எங்கே?"

"நாங்கள் வேலையாட்கள் இல்லையா?"

"கூலியாட்கள், உங்களுக்கு வேலை செய்வோர் எங்கே?"

"இல்லை, இங்கே கூலிவேலைக்காரரே கிடையாது."

"எப்படி விதைப்பு அறுப்புக்காலம் வேலை முடிப்பீர்கள்."

"ஒத்துழைப்பதால் வேலை முடியும், ஒருவருக்காக ஒருவர் உழைத்து அயலகத்தார் சகாயம் பெறுவோம்."

"நிலம் இல்லாதவரே இல்லையா?"

"இல்லை."

"உத்தியோகஸ்தர் என்ன செய்வார்?"

"அவர்களும் பாதி நேரமாவது வேலை செய்வார்கள். பொதுவாய் ஒருவராவது பகல் முழுவதும் வேலை செய்யமாட்டார்கள்.

"கடைக்காரரும், இரும்பு வேலை, மர வேலை போன்ற தொழிலாளரும் என்ன செய்வார்கள்?"

"அவர்களுக்கு வேறு வேலை இருப்பதால் நிலம் வைத்துக்கொள்ளமாட்டார்கள்."

இவ்விதம் நாங்கள் பேசிக்கொண்டே குதிரை லாயத்தண்டை போனோம்.

"அம்ருதா இத்தனை குதிரைகளும் உங்களுடையதா?"

"ஆம், பதினைந்து வீட்டுக்காரருக்குப் பொதுவானவைகள்."

அவர்களுடைய கலப்பைகளும், விதைக்க, வெட்ட, அறுக்க, போர் அடிக்க வைத்திருந்த ஆயுதங்களும் மிகவும் விசேஷமானவைகள். அவற்றால் வேலை வெகு துரிதமாய் ஆகும். மாடு கட்டி வேலை செய்கிற வழக்கம் அங்கே இல்லை.

என் தோழன் போனபின்பு நான் திறந்த வெளியில் நின்று நகரை அலங்கரித்துப் பிரகாசித்த பல மின்சாரத் தீபங்களையும், தாராகணங்களையும் மாறிமாறிப் பார்த்துக்கொண்டிருந்தேன். என் எண்ணங்கள் என்னுடைய குக்கிராமத்திற்குத் திரும்பின.

தோட்டத்தில் கிடந்த ஆசனக்கல்லின்மீது உட்கார்ந்தேன். தூக்கத்தால் என் இமைகளை மூடினேன். கண் திறந்து பார்த்தபோது என் தோழன் சோமு அத்தியந்த கவலையுடன் என் முகத்தைப் பார்க்கக் கண்டு புன்னகையுடன் எழுந்து உட்கார்ந்தேன். அவன் மிகுந்த பிரயாசையுடன் என்னை இழுத்து ஜலத்தினின்று வெளியேற்றினதாய்ச் சொன்னான்.

"அடாபாவி, நீ செத்துப்போனாய் என்றே நினைத்தேன்" எனச் சொல்லி உரக்கச் சிரித்தான். பின்பு அண்ணாவிக்காகக் குழைக்கட்டுத் தயார்செய்து எடுத்துக்கொண்டு பாடசாலையை அடுத்திருக்கிற அவரது இல்லம் சேர்ந்தோம். அண்ணாவி சந்தோஷப்பட்டார்.

---

**வினாக்கள் :**

1. அம்ருதாகண்ட புது இந்தியாவில் காணப்பட்ட விசேஷங்கள் எவை ?
2. நமது ஊர் அப்படி ஆக முடியுமா ? உனக்குப் பிரியமா ? என் ?
3. நமது ஊரில் தற்காலம் உள்ள குறைகள் யாவை ?

## 5. இலக்கணப் பாடம் - I

**மகரவொற்றுப் பெயர்ப் பதங்களோடு கூடும் விதம் :**

மகர ஈற்றுப் பெயர்கள் வல்லினம் வரப் பொருந்தும் விதங்கள்.

1. மரம் + கால் = மரக்கால்
   பணம் + பெட்டி = பணப்பெட்டி
   தானியம் + தட்டு = தானியத்தட்டு.

2. மஞ்சம் + செய் = மஞ்சஞ்செய்
கனம் + கொடு = கனங்கொடு
மணம் + தூயது = மணந்தூயது
நலம் + பெற்ருன் = நலம்பெற்ருன்.

மகர ஈற்றுப் பெயர்கள், வல்லினம் வர மகரம் கெட்டு உயிர் ஈற்றுப் புணர்ச்சிபோல் வல்லினம் இரட்டும். அல்லது மகரஒற்று கெட்டு இனஎழுத்துத் தோன்றும்.

குறிப்பு : க-வுக்கு இன எழுத்து ங
ச ,, ,, ஞ
த ,, ,, ந
ப ,, ,, ம

## 6. ஜலம் — ஜலஸூத்திரங்கள்

இவ்வுலகினை நிரப்பிப் பரப்பிமூடிக்கிடக்கும் வஸ்துக்களைக் கனபதார்த்தம், ஜலபதார்த்தம், வாயுபதார்த்தமென முப்பிரிவாய் மூதறிஞர் வகுத்தார். அவற்றுள் ஒவ்வொரு வகுப்புப் பதார்த்தங்களும் மற்ற இரண்டு நிலையையும் அடையக்கூடியன. ஜலம் அவற்றுள் அதிலகுவாய் மூன்று நிலையையும் அடையக் கூடியது. மனுஷனுக்கு மிகவும் பயன்படக் கூடியது. நிலபாகம் ஒன்ருனல் ஜலம் அதைப்போல் மூன்றுமடங்கு விஸ்தீரண பூமியை மூடியிருப்பது மிக்க அநுகூலமாயிருக்கிறது. சுவரை வைத்தல்லோ சித்திரம் எழுதவேண்டுமென்ருற்போல், ஜலசௌக்யத்தை முன்னிட்டே நாடு அபிவிருத்தியடைகிறது.

ஜலமானது உயரத்திலிருந்து கீழே விழும்போது கல்லையும் உடைக்கக் கூடிய வலிமை பொருந்தியதாய் இருக்கிறது. அந்த வன்மையைக் கொண்டு மனிதன் மாவரைக்கும் யந்திரங்களை இயங்கச் செய்கிறான். மின்சாரம் உண்டாகும்படி பக்குவமாய் ஒழுங்குபடுத்தப் பட்ட ஸூத்திரங்களைச் சுற்றவைத்து அதனால் மின்சாரம் உண்டாக்குகிறான். அம்மின்சாரம் ஆயிரங்கை ராக்ஷதனைப்போல் விளக்குப்போடவும், சமையல் பண்ணவும், வண்டியிழுக்கவும், பங்காப்போடவும், லோகங்களை உருக்கவும், பிரமாண்டமான சம்மட்டிகளைத்தூக்கி அடிக்கவும் கப்பலில் சாமான் ஏற்றவும் இறக்கவும் உழைக்கிறது. பஞ்சு வெட்டவும் நூல் நூற்கவும், நெய்யவும், தையல் தைக்கவும் தூர இடங்களுக்குச் செய்திகொண்டோடவும் அது சலிக்கிறதில்லை. சுருங்கச் சொல்லின் அவ்வேலையை மதிப்பிடவே முடியாது.

ஜலத்தை நீராவியாக்கி விட்டாலும் ஏவின எந்த வேலையும் தட்டாது செய்யும். மின்சாரத்தைப்போல் நீராவி மகா மகா வல்லவனாயிராவிடினும், மின்சாரம் உண்டாக்க ஏதுவான ஸூத்திரங்களை இயங்கப் பயன் படுகிறது. நீராவியந்திரமும் புகைவண்டித் தொடர்களும் ஏற்பட்டதனால் பூலோக குடிகளின் ஜீவியமே அளவிடக்கூடாத வேறுபாடுகளை யடைந்துவிட்டது.

இக்குறிப்புகளை நாம் அகலவிட்டு ஜலம் தான் தானாய் இருந்து, வேற்றுமைப்படாமலே யாதுகிரியைகள் முடிக்கக்கூடுமெனக் கவனிப்போம்.

ஜலத்திற்குக் கனதி உண்டு. வேண்டிய அளவு ஜலத்தை ஓரிடத்தில் ஆழமாய்க் குவியச்செய்தால் அபாரமான வேலைகளையும் அது முடிக்கக் கூடும்.

இதற்கு ஒரு திருஷ்டாந்தம் சொல்வோம். ஆழ்கடல் களில் ஜலத்தின் பாரத்தைப் பரிசோதிக்க விரும்பிய ஒருவர் ஒரு கண்ணுடி சீசாவை எடுத்து அதைக் குழாய்களில் பொதிந்து சமுத்திரத்தின் ஆழத்திற்கு ஒருகம்பியில் கட்டி இறங்கவிட்டார். பின்பு அதை மேலே இழுத்துப் பார்த்தபோது குழாய் உடைந்து மெதுவான மாவுபோன்ற தூள் இருந்தது. அதாவது மேலே குவிந்திருந்த ஜலம் அதனடியில் அகப்பட்ட சீசாவை நசித்து மாவாக்கிவிட்டது. ஆகவே ஜலம் மிகுந்துள்ள இடங்களில் அதைத் தகுந்த உபாயமாய்த் திரட்டி உயரத்திலிருந்து விழச்செய்து பக்குவமாய் வேலை முடிக்கிருர்கள். எப்படியெனில் ஒரு பெரிய கல்லைத் தூக்கக் கடப்பாரையால் அதை உயர்த்துகிறோம் அல்லவா. கடப்பாரையின் கூர் நுனியைக் கல்லின் கீழ் சொருகி, சற்று தூரத்தில் கடப்




பாரையின் அடியில் ஒரு கல்லைவைத்து அதின் அடுத்த நுனியில் நமது கைவைத்து பலமாய் அழுத்துவோம். அப்போது கல் மேலே கிளம்பும் அல்லவா. ஆனல் கையால் அமுக்காமல் அதற்குப் பதில் தண்ணீர் உயரத்திலிருந்து கடப்பாரை நுனிமேல் விழுந்து, அது அமுங்குவதால் கல் கிளம்பலாம் அல்லவா? அப்படிப் பட்ட ஒழுங்கே வெகுவாய் ஜல ஸூத்திரங்களில்

இருக்கிறது. ஜலப்பிரவாகம் நிறைந்த இடங்களில் அதை வேலை வாங்க மனமுள்ளோர் யாவரும் சுகம் அடைகிறார்கள்.

ஜலம் வாயு ரூபமடையாமல் தனது சுயரூபமாய் இருக்கும்பொழுது அதின் கனமாகிய சக்தி ஒன்றையே மூல ஆதாரமாகக்கொண்டு முடிக்கும் வேலைகள் இன்ன வென்று சிறிது கூறுவோம். வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம். அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் உலகின் வேறு பாகங்களிலும் கப்பல்கள் படகுகள் போகக் கூடிய கால்வாய்கள் பல இருக்கின்றன. அவைகள் எக்காலும் சம நிலத்தில் அமைவது கடினம். அப்படி ஏற்றத்தாழ்வாய் இருக்கும் இடங்களில் ஜல ஸூத்தி ரங்கள் இருந்து, படகை அல்லது கப்பலை அதின் ஜனத் தோடு சாமான் சரக்குகளோடு தூக்கி ஒரு நிமிஷத்தில் வைத்துவிடுகின்றன.

வேறு இடங்களில் கப்பல் பாதையில் இருக்கும் இருப்புப் பாலங்களை உயர்த்தவும் பழையபடி தாழ்த்த வும் உதவுகின்றன. திருஷ்டாந்தமாக,

மேற்கண்ட மாதிரி பிரமாண்டமான பாலங்களை, இரும்புக் கதவுகளைத் தூக்கும் நளினத்தைப் பார்த்தால் நாம்கூட ஒரு கையால் அவற்றைத் தூக்கலாம்போல் தோன்றுகிறது. அப்படியே அம்மாதிரிக் கால்வாய் களில் படகுகளை மேடேறச் செய்யவும், மேட்டினின்று இறங்கச் செய்யவும் "லாக்" என்று ஒரு உபாயம் வைத்திருக்கிறார்கள். அதாவது கால்வாயில் இடையில் கதவுகள் ஏற்படுத்தி, ஜலம் அதில் வேண்டிய உயரம் சேரவிட்டு அதனால் கப்பலை உயர்த்துவது, இறக்கி விடுவது; இந்தச் சோலிக்கான பெரிய இருப்புக் கதவு

களைத் திறக்கவும் அடைக்கவும் ஜல ஸூத்திரங்களை உபயோகிக்கிறார்கள். கனடாவிலும் ஐக்கிய மாகாணங்களிலும் மேற்சொன்ன மாதிரி கால்கள் இருக்கின்றன.



மேலும் உலோகங்களில் நடக்கவேண்டிய கடினமான சோலி பலவற்றை ஜல ஸூத்திரம் முடிக்கிறது.

கனத்த செங்கல் கட்டிகளைப்போல் இருக்கும் இரும்பு பித்தளைக் கட்டிகளை நசுக்கி வேண்டிய அளவு கனதியான தகடுகளாக்குகிறது. உலக்கைபோல் தடிப்பான இரும்பு பித்தளைத் தூலங்களை வேண்டிய விதமாய் வளைக்கிறது, கம்பிகளாக்குகிறது.

நீர்வீழ்ச்சியினல் வேலைக்கு வேண்டிய மின்சாரம் உண்டாக்க உலகத்தார் கற்றுக்கொண்டது முதல் கைத்தொழில்கள் முன்னிலும் பன்மடங்கு நடைபெறுகிறது.

நீராவியாலும் எண்ணெயாலும் யந்திரம் ஓட்ட நிலக்கரி வேண்டுமல்லவா? விறகு இன்றிச் சமையல் ஆகுமா? முற்காலங்களில் நிலக்கரி இல்லாத தேசங்களில் கைத்தொழில் செய்து பொருள் தேட வகையின்றி வருந்தினார்கள். தற்காலங்களில் நீர்வீழ்ச்சிக்கிடமுள்ள நாட்டுக் குடிகள் பலர் அதின் சகாயத்தால் முதல்தரமான வேலை முடிக்கிறார். மற்றவர்களும் சொற்ப செலவுள்ளதும், நேர்த்தியான, பாரமான வேலை செய்யக்கூடியதுமான ஜல ஸூத்திரத்தை அதிக மதிகமாய் அபிவிருத்தி செய்கிறார்கள். ஜெர்மனி, பிரான்ஸ், சுவிட்சர்லாந்து, இத்தாலியா, ஸ்வீடன், ஜப்பான் முதலிய தேசங்களில் ஜல ஸூத்திர வேலைகள் வருஷந்தோறும் அதிகரிக்கின்றன.

## V. அம்ருதாகண்ட தரிசனம் - II

என்னுடைய கிராமம் உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். சில நாட்களாய் மழை அதிகம் பெய்துகொண்டிருந்தது. ஊரெங்கும் பாதைகளெல்லாம் சேறாய் இருந்தபடியால் வெளியேபோய் வருவது சங்கடமாயிருந்தது. ஊரில் விதைப்புவேலை முடிந்து களை பறிக்கும் வேலை நடைபெற்றது.

ஒருநாள் நான் முன்பார்த்துவந்த நல்ல தேசத்தையும், இன்னுயிர்த்தோழன் அம்ருதாவையும் இனி எப்போகாணலாம் என்னும் ஏக்கத்துடன் மாலை வேளையில் சிற்றூற்றங்கரையோரம் உலாவப்போனேன். என் தங்கை மங்களவல்லி காட்டு கனிகள் சேகரிக்கச் சிறு கூடை ஒன்று எடுத்துக்கொண்டு என்னோடு வந்தாள்.

அவள் வண்டுகளின் தோழி. காட்டுக்குள் ஓடிப்போய் விட்டாள். எனக்கு ஒரு காரியமும் செய்யமனதில்லா மல் தரையில் பசும்புல்லின்மேல் படுத்துக்கொண்டேன்.

கண்ணை மூடினவுடனே அம்ருதா வந்து என் கையைப் பிடித்தாள். நாங்கள் இருவரும் ஒரு பெரிய கரும்புத்தோட்டத்தின் அருகில் நின்றோம்.

"நீ வருவாய் என்று எண்ணி என் வேலையைச் சீக்கிரமாய் முடித்தேன்."

"அம்ருதா, இன்று என்ன வேலை செய்தாய்? எப் படி உனக்கு நான் வருவேனென்று தெரியும்? என்னை நீ நினைப்பதுண்டோ?

"மூன்று கேள்வி ஒரே நேரத்தில் கேட்டால் நான் எதற்கு விடை பகருவது? இது நெல் நாற்று நடும் காலம். காலையில் ஆறு மணிக்கு வந்தால் மாலை ஆறு மணிக்குத்தான் வீட்டுக்குத் திரும்புவோம்.

நான் பார்த்தபோது சமீபதூரத்தில் வயல் ஒன் றில் பல ஆடவரும் மாதரும் நிற்கக்கண்டேன். அவர் களெல்லாரும் ராஜ குமாரர்போல் காணப்பட்டார்கள். அவர்கள் சேற்றில் நின்று வேலைசெய்வது எனக்குப் பெரிய ஆச்சரியமாய்த் தோன்றிற்று. தலையில் வெண் தொப்பி மாட்டிக் காலில் நெடும் பாதரக்ஷை முழங்கால் வரை மாட்டியிருந்தார்கள்.

"இவர்கள் யார்?" என்றேன்.

"நடுகிறகாலம் நாலு அல்லது ஐந்து குடும்பத்தார் சேர்ந்து வேலைசெய்வது வழக்கம். அப்பா அதோ நிற்கிறார் பார்."

"அப்படியானால் நடுகிறகாலம் பாடசாலைக்குப் போகமாட்டாயா?"

"நடவு அறுப்புக் காலங்களில் இரவில் ஆறுமணி முதல் ஒன்பது மணி வரையில் பாடசாலை நடக்கும். பாடசாலையில் இரவு 7-30 மணிக்குச் சாப்பாடு கொடுப்பார்கள். அது நிரம்பவும் ஆனந்தமான விருந்துபோலிருக்கும்."

"உன் பாடங்களையும், பாடசாலையையும் பார்க்க வேண்டும். அப்போது எல்லாரும் ஒன்றாய் சாப்பிடுவீரோ?"

"பலவீனருக்கும், மந்த புத்தியுள்ள குழந்தைகளுக்கும் பாடசாலை வேறு. பொதுவாய் சுகதேகிகளுக்குக் கைத்தொழில்கள் பலவும் போதிப்பார்கள். நான் உனக்குச் சொல்லுவதிலும் நீயாய்ப் பார்த்துக் கண்டு கொள்ளுவது நலம்."

"நாளைக்குப் போவேன் அப்போது நீயும் வா" என்றான்.

அப்படியே பாடசாலைக்கு அவனோடு போனேன். அது இடமகன்ற வீடுகள் மரங்களும் பூந்தோட்டமும் காய்கனித் தோட்டங்களும் சூழப்பெற்று இருந்தது.

மரங்களின் நிழலில் சிறுவர் உட்கார்ந்து வாசிப்பதும் எழுதுவதும், கணிதம் கற்றுக்கொள்ளுவதுமா யிருந்தார்கள். சோப்பு, தோல் வேலை, களிமண்வேலை, இருப்பு வேலைகள், கடிகார வேலை, நெசவு வேலைபோன்ற தொழில்கள் கற்றுக்கொள்ளப் பல பிரகாரங்கள் இருந்தன. பாடசாலையில் எல்லாப்பிள்ளைகளும் சுத்தமாயும் அழகாயும் சந்தோஷமாயும் இருந்தார்கள். வாசிப்பும் எழுத்தும் தெரிந்த பின்பு பாடசாலைக்கு வந்து சேர்ந்தார்கள்.

"இவ்வூரில் ஏழை எளியவன் இல்லையா" என்று கேட்டேன்.

"எல்லாருக்கும் குடியிருக்க வீடும் சொந்த நிலமும் உண்டு. கடன் பட்டு வட்டி கட்டிக்கொண்டு கிடக்கும் வழக்கம் இங்கில்லை" என்றான்.

"வேலை செய்ய முடியாத குருடனும் செவிடனும் என்ன செய்வான்" என்றேன்.

"வா, அவர்கள் ஜீவியம் பார்ப்போம்" என்று என்னை அழைத்துக்கொண்டு போனான். நாங்கள் இருவரும் போகும்பொழுது ஒரு நல்ல ஏரியையும் அதை அடுத்துள்ள பல வீடுகளையும் தோட்டங்களையும் கண்டேன். அங்கே குருடர் சப்பாணி போன்றவர்கள் தான் குடியிருந்தார்களென்று எண்ண நியாயம் ஒன்றுமிருக்கவில்லை. எல்லாரும் அவரவருக்குத் தகுந்த வேலைகள் செய்தார்கள். அவர்களுக்கு உதவியாக நகரபிதாக்கள் கொடுத்த பல கண்ணும் கருத்தும் சிறந்த வேலையாட்கள் இருந்தார்கள். மழை ஜலத்தைக் கட்டி நிற்கச்செய்து உண்டாக்கிய நீர்நிலைகளும் கால் நடைகளுக்கான புல் வெளிகளும் அவர்களுக்கு இருந்தது. அவர்கள் மனரம்மியமாய் ஜீவித்து வந்தார்கள்-

ஜெயில் என்னப்பட்ட பெரிய ஒழுங்கு அங்கே இருக்கிறதோ என்று அறிய விரும்பினேன். அம்ருதா தான் அவ்விடத்தைப் பார்த்ததில்லை என்றான். நியாயஸ்தலமும் நியாய சாஸ்திரிகளும் அங்கே இல்லை. பஞ்சாயத்தார் இரவில் கூடிப் பேசி வழக்குத் தீர்ப்பார்கள்.

இராச் சாப்பாடான பின்பு நாடகம் பார்க்கப் போனோம். அம்ருதா தங்கை சந்த்ரா என்னண்டை உட்

கார்ந்து, கதையை விவரித்துச் சொன்னாள். அங்கே முதல்வகுப்பு இரண்டாம்வகுப்பு என்ற பேதங்களில்லை.

மறுநாளில் தேவாலயங்கள் பார்க்கப் போனேன். அவை எப்போதும் திறந்தபடியே இருந்தன. தேவாலயத்தை யடுத்து புஸ்தகசாலை ஒன்று இருக்கிறது. அதில் பக்தசிகாமணிகள் எழுதிய நூல்கள் விரும்புவோர் எவரும் வாசிக்கச் சித்தமாய் வைக்கப்பட் டிருக்கின்றன. அங்கே நடந்த ஆராதனையின் முறை எடுத்துரைப்பது அசாத்தியம். அவர்கள் ஆவியோடும் உண்மையோடும் ஆராதிக்கிறார்கள். திரும்புங்கால் தூக்க மயக்கமாயிருந்தேன். என்றாலும்,

"கற்கக் கசடற, கற்றபின்
நிற்க அதற்குத்தக"

என்ற நீதி மொழிப்படி நடைபெறும் இவ்விராஜ்யத்தின் பெருமை என்னே என்று எண்ணமிட்டுக் கொண்டே வந்தேன்.

அன்று மழையுமில்லை, காற்றுமில்லை. வீட்டினுள் படுக்க மனமற்று யாவரும் வெளியே கிடந்த சலவைக் கல் ஆசனங்களில் படுத்து நித்திரை போயினர். நானோ வீடு கட்டியிருந்த குன்றின் உச்சிவரை ஏறி அங்கிருந்து நகரின் தீப அலங்காரத்தை நோக்கினேன். மதுபானம் மருந்துக்கும் உண்ணாத மாந்தரின் பெருமையை உணர்ந்தேன். ஜாதிபேத மதபேதச் சச்சரவு இல்லாத அவ்விடத்தின் சுகவாழ்வை யோசித்திருக்கும்போதே நித்திரைத் தலையாட்டு ஆரம்பித்தது.

"அண்ணா, அண்ணா, அப்பா என்ன தூக்கம்?" என்று மங்களம் என்னைத் தட்டி எழுப்பினாள். இருவரும் வீடுவந்து சேர்ந்தோம்.

## 8. புறுவின் ஊழியம்

அன்பும் அருளும் யோசனையும் மானிட ஜென்மம் ஒன்றுக்கே உரியது. மற்ற ஜீவன்கள் உண்டு திரிந்து காலம் போக்கப் பிறந்தவைகளென்பது பொதுவான கொள்கை. ஆயினும் சில தாழ்ந்த வகுப்புப் பிராணி களும் அக் குணங்களில் சிறிது காட்டும்போது மதிப் புக்கு இடமாகிறது.

நாய், புறு, குரங்கு, யானை போன்ற பிராணிகள் காட்டுகிற விசுவாசமும், உண்மையும், பின்வருங் காரி யத்தை முன்னமே யோசிக்குங் குணமும் கவனிக்கத் தக்கவை. புறுவானது மேற்சொல்லிய பிராணிகளில் மிகச் சிறியதாய் இருந்தாலும் அதின் ஊழியம் வீரர்கள் கண்டு அதிசயிக்கத்தக்கது. உயிருக்கே மோசம் வந்த காலத்திலும் விடாப்பிடியாய் எடுத்த கருமத்தைத் தொடுத்து முடிக்கும்.

கடந்த காலங்களில் புறுவைத் தபால்காரனாக உப யோகித்த விசேஷமான சமயங்களுண்டு. சத்துருக்கள் நகரைச் சூழ்ந்து நிற்க, தந்தி தபால் ஒழுங்குகள் தடை பட்டுக் கிடக்கும் காலங்களில் தன் வசம் அனுப்பிய கடிதத்தைப் புறு வழியில் ஆகாரம் தேடத் தங்காம லும், இளைப்பாறும் எண்ணம் சிறிதும் இல்லாமலும், கொண்டுபோய்ச் சேர்த்த கதைகள் பல உள.

கடிதம் அனுப்புவோர், புறுவின் வீரம் மெச்சத் தக்கதாயினும் அதின் உருவம் மிகச் சிறியதென்பதை உணர்ந்து, எழுதப்பட்ட கடிதத்தை அற்பமான காகி தத்தில் அடக்கும்படி போட்டோ படம் எடுப்பார்கள். காகிதம் பெற்றுக் கொள்பவரும் அந்த எழுத்தைப்

பன்மடங்கு பெரிதாய்க் காட்டும் கண்ணுடியின் கீழ் வைத்து வாசிப்பார்கள். கடிதம் கொண்டு செல்லும் புறா மணிக்கு அறுபது மைல்தூரம் பறக்கும்.

கி. பி. 1870-வருஷம் ஜர்மானியருக்கும் பிரான்ஸியருக்கும் போர் உண்டாயிற்று. பிரான்ஸியருடைய பிரதான பட்டணம் பாரிஸ். ஜெர்மனியர் சூழ்ந்து கொள்ளவே, உள்ளே இருந்தவர்கள் வெளி தேசங்களில் தமக்கிருந்த சிநேகிதர்களுக்குத் தமது கஷ்டங்களையும் காரியாதிகளையும் தெரிவிப்பது அசாத்தியமாயிற்று. அந்தக் கஷ்டத்தில் புறாக்கள் மூலமாய் வேண்டிய செய்தி அனுப்பி, பதிலும் பெற்றுக்கொண்டார்கள்.

கி. பி. 1815-ம் வருஷத்தில் நடந்த இன்னொரு சம்பவத்தையும் சொல்லுவோம். அப்போது இருபது வருஷக்காலமாய் அங்கிலேயருக்கும் பிரான்ஸியருக்கும் சண்டை நடந்தது. இருகட்சியாரும் அளவிறந்த நஷ்டம் அடைந்து வந்தார்கள். கடைசிச் சண்டை வாட்டர்லூ என்னுமிடத்தில் நடந்தது.

வாட்டர்லூ பெல்ஜியம் தேசத்தில் இருக்கிறது. ஆகவே கடல் தாண்டிப் பெல்ஜியத்திலிருந்து இங்கிலாந்துக்குப் போகவேண்டும். அது தந்தித்தபால் இல்லாத பண்டைகாலம். இங்கிலாந்திலிருந்த ஜனங்கள் ஒவ்வொரு நாளும் செய்திக்காக வழி பார்த்து நிற்பார்கள். பலநாள் இனி இல்லையென்ற பிரயாசையுடன் ஆயத்தப்பட்டுச் சண்டை நடந்ததில் ஒரேநாள் போரில் பிரான்ஸியர் முற்றிலும் தோல்வி யடைந்தார்கள். இனிமேல் சண்டை கிடையாதென்பது தெளிவாயிற்று.

அங்கிலேயர் இச்செய்தியை எழுதி ஒரு புருவின் கழுத்தில் கட்டி இங்கிலாந்துக்கு அனுப்பினார்கள். புரு அவர்களுடைய கருத்திற்கிசைந்து மின் வேகமாய்ப் பறந்துவந்து குறித்த இடத்தில் செய்தியை ஒப்புவித்



தது. ஆகிலும், அந்தச் சந்தோஷத்தைச் சற்று கெடுக்கும் வண்ணமோ அல்லது வேறு காரியமோ புரு உடனே உயிர்விட்டது. அங்கிலேய கவிக்காரி ஒருத்தி அதைப் புகழ்ந்து ஒரு பாடல் எழுதினாள்.

புருக்களின் நற்குணத்தைக் காரணமாய்க் கொண்டு போர்க் காலங்களில் இன்னுமொரு வேலை செய்தார்கள். எதிரிகள் இரகசியமாய்ப் பட்டாளம் இறங்கி இருக்கும் இடங்களுக்குப் புருவின் கழுத்தில் போட்டோப் படம் எடுக்கும் அதிநுட்பமான கேமரா கருவியைக் கட்டி

விடுவார்கள். கேமராவோ காற்றின் அதிர்ச்சியால் இயங்கி எதிராளிகளின் இருப்பிடத்தின் படம் எடுத்துக்கொண்டு வந்துவிடும். கடந்த ஐரோப்பிய மகா யுத்தத்தில் இக் காரணம்பற்றிப் புறாக்களைச் சந்தேகித்துக் கண்டகண்ட இடங்களில் இருகட்சியாரும் சுட்டுத் தள்ளினார்கள்.

புறாக்களை வேலைக்காக ஏற்கனவே பழக்கி வருகிறார்கள். மைசூர் ராஜ்யத்திலுள்ள கோலாரில் புறாப் பந்தயம் அடிக்கடி நடப்பது உண்டு. அதை மெயில் என்ற ஆங்கில பத்திரிகையில் காணலாம்.

புறா கபடமற்ற பிராணி; உத்தம ஊழியன்.

---

வினாக்கள் :

1. புறாவின் ஊழியம் ஜனங்கள் எப்போது உபயோகிக்கிறார்கள் ?
2. எப்படிப் புறா கடிதம் சுமக்கிறது ? விவரித்துச் சொல்.
3. வாட்டர்லூ எங்கே இருக்கிறது? அங்கே என்ன விசேஷம் நடந்தது ?
4. புறா எப்படி ஒளிப்படம் எடுக்கும்?
5. புறாவின் சுபாவத்தைப்பற்றிச் சொல்லு.

## 9. காலத்தின் அருமை

"சுந்தரம், லீலா, என்ன செய்கிறீர்கள் ?"

"அம்மா சும்மா உட்கார்ந்து இருக்கிறேம்."

"வேலை செய்யாமல் இருப்பது எவ்வளவு பெரிய தப்பிதம் !"

"இன்று சனிக்கிழமை......"

"சனிக்கிழமை வேலை செய்யக்கூடாத நாளா! சனிக்கிழமை நமது ஆயுள் காலக்கணக்கில் சேராதா ?"

"ஒருமணி நேரத்தில் என்ன நஷ்டமாகும் ?"

"அந்தக் கணக்கை நீங்களே சொல்லுங்கள். ஒரு நாளில் ஒருமணி வீதம் ஒருவருஷத்தில் வேலை செய்யும் நேரம் எவ்வளவு நஷ்டமாகும் ?"

உடனே சுந்தரமும் லீலாவும் பென்ஸிலும் காயிதமும் எடுத்துக் கணக்குப் போட்டார்கள். ஒருநாளில் வேலை செய்யும் காலம் 12 மணிதான். அதில் ஒன்றை நஷ்டப்படுத்திஞல் $\frac{1 \times 365}{12}$ நாள் அதாவது 30 நாளும் 5 மணியும் வீணுய்ப் போகிறது என்று கணக்குச் சொன்ஞர்கள். வருஷத்தில் ஒருமாதம் நஷ்டமாகிறது.

"அம்மா இது கண்டிப்பான கணக்கு."

"நேரம்தான் மனுஷனுடைய ஆயுள். அதைவிட அருமையான பொருள் ஏதாவது உண்டா ?"

"நேரம் காசு கொடுத்தா வாங்குகிறேம். கொஞ்ச நேரம் நாங்கள் இங்கே இருக்கக்கூடாதா ?"

"அப்பா, ஒவ்வொரு நிமிஷமாய்ச் சேர்ந்து யுகங்கள் உண்டாகிறது. நேரத்தை அவமாக்குகிறவன் தன் ஜீவ

ளைக் குறைக்கிறான். நிமிஷங்களை ஆதாயப்படுத்துகிற வன் தனக்கு நீண்ட ஆயுள் உண்டாக்கிக்கொள்கிறான்.''

''அம்மா, இப்போது எங்களுக்கு என்ன வேலை இருக்கிறது ?''

''வேலை உங்களைத் தேடி வராது, நீங்கள் வேலையைத் தேடிப் போகவேண்டும்.''

''பூர்வீக கிரேக்கர் காலத்தின் தன்மையை ஒரு விநோதமான சித்திரம் எழுதிக் காட்டினார்கள். அதில் காலத்தை முன் குடுமியும் காலில் இறெக்கையும் உள்ள மனிதனுக்கு ஒப்பிட்டிருக்கிறது. அதின் கருத்து என்னவென்றால், அவனுடைய முன் குடுமியைப் பிடிக்கத் தவறினால், காலில் உள்ள இறெக்கையால் பறந்து போய்விடுவான் என்பது. ஆதலால் நேரத்தை ஆதாயம் பண்ண எப்போதும் கருத்தா யிருக்க வேண்டும். மற்றப்படி அது பறந்துபோகும். நினைத்த காரியம் முடியாமல் பாக்கி கிடக்கும்.

''சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்.''

அதாவது சோம்பேறிகள் மனக்கலக்க மடைந்து திரிவார்கள். இதற்குத் திருஷ்டாந்தம் ஒன்று சொல்கிறேன்.

தென்னிந்தியாவில் ஈரோட்டு நகரில் ரங்கசாமி என்று 12-வயதுப் பையன் ஒருவன் இருந்தான். அவன் எந்த வேலை செய்யப்போனாலும் அவசரமாய் வேலையை முடித்துத் திரும்பமாட்டான். நாள் தவறாமல் பாடசாலைக்குப் பிந்திப் போவான். கணக்குப் பரீக்ஷையன்று அவன் போவதற்குள் அவன் கூட்டாளிகள் இரண்டு கணக்குப் போட்டுவிட்டார்கள். அவன் இன்னும் ஒரு வருஷம் அதே வகுப்பில் இருக்க நேர்ந்தது.

தைமாதம் கர்நூலில் ரங்கசாமியின் அத்தை பிள்ளைக்குக் கல்யாணம். வீட்டில் எல்லாரும் இரண்டு நாளுக்கு முன்னமே புறப்பட்டார்கள். அன்று ஸ்டேஷனில் விசேஷம் ஒன்றுமில்லை. கையில் செம்பு கொடுத்துத் தண்ணீர் கொண்டுவரும்படி அனுப்பினார்கள். 'தம்பி, சீக்கிரம் வா, வண்டி திடீரென்று புறப்படும்' என்று தங்கம் சொன்னாள்.

அப்பா, 'உன் வழக்கம்போல் பராக்குப் பார்த்துக் கொண்டு நில்லாதே,' என்று அம்மை சொன்னாள்.

அப்பா, 'இது மெயில்வண்டி. திடீரெனப் புறப்படும். ஜல்தி வந்துவிடு,' என்று பாட்டியார் சொன்னாள்.

ரங்கன் குழாயைப் பார்த்து வேகமாய் நடந்தான். மாஞ்செடி வைத்த தொட்டிகளை ரெயிலில் ஏற்றக் கண்டான். அவைகள் எத்தனை தொட்டி என்று எண்ணினான். அருகில் பெருங் கூடைகளில் வாத்து குவாக் குவாக் என்று கூச்சலிடப் பார்த்துக்கொண்டு நின்றான். பீடி சிகரட் விற்கிறவன் வண்டி போகும் நேரமாயிற்று என்று சொல்லக் கேட்டுக் குழாயண்டை ஓடினான். அங்கே சற்றுநேரம் நின்று கொண்டான். ஜலம் பிடித்துக்கொண்டு திரும்பியவுடன் வண்டி புறப்பட்டு விட்டது.

பாட்டியாரும் தாயாரும் வண்டியில் இருந்த மற்றவர்களும் அடைந்த வருத்தத்தை எப்படி எடுத்துச் சொல்லுவது. தகப்பனார் இரண்டாவது வகுப்பு வண்டியில் இருந்தார். அவருக்கு நடந்த காரியம் ஒன்றும் தெரியாது. ரங்கன் ஓடிவந்தான். அங்கே நின்ற மற்றவர்கள் நிறுத்தி விட்டார்கள். இனிமேல் நடந்த காரியம் சொல்லுவது அநாவசியம். காட்டுக்குள் ஒரு

ஸ்டேஷனில் இறங்கி, ஸ்டேஷன் மாஸ்டருக்குத் தந்தி கொடுத்து, அவனை வரவழைத்துக் கர்நூல் போய்ச் சேருவதற்குள் கல்யாணம் முடிந்து போனது. கல்யாண வீட்டில் அனைவரும் ரங்கனைக் கேலி பண்ணினார்கள். சில பிள்ளைகள் சேர்ந்து அதைக் கதையாய் நடித்துக் காட்டினார்கள்.''

''நாங்கள் இனிமேல் வீண்காலம் போக்கமாட்டோம்'' என்று சுந்தரம், லீலா சொன்னார்கள்.

காலையில் நேரத்தில் எழுந்திருக்க வேண்டும். அது சுகம், செல்வம், சந்தோஷத்திற்குக் காரணம் என்று ஒரு ஞானி கூறுகிறார்.

## 10 இலக்கணப் பாடம் - II.

வல்லின ஒற்று இரட்டிக்கும் சந்தர்ப்பம் :

வல்லின ஒற்றுக்கள் க் ச் ட் த் ப். இவற்றுள் க் ச் த் ப் என நான்கும் உயிரோடு கூடிப் பதங்களின் முதலில் வரும்.

1. நிலைமொழிக் கடைசி எழுத்து உயிர் எழுத்தானால், வருமொழி முதலில் வரும் வல்லின ஒற்று இரட்டிக்கும் சில சமயம் இரட்டிப்பதும் இல்லை.

அந்த + பையன் = அந்தப் பையன்.
நேற்று + கண்டேன் = நேற்றுக் கண்டேன்.
காக்கை + கூண்டு = காக்கைக் கூண்டு.
நெருப்பு + பெட்டி = நெருப்புப் பெட்டி.
மெல்ல + சென்றான் = மெல்லச் சென்றான்.
தெரு + திண்ணை = தெருத்திண்ணை.

2. வந்த கப்பல்
இருந்த கொல்லன்
துணிந்த கள்ளன்
புதிய சேவல்
நல்ல தேசம்
பெரிய பெட்டி

} இவற்றில் வல்லின ஒற்று இரட்டிக்கவில்லை என்பதையும் கவனிக்க.

3. இரண்டாம் வேற்றுமைக்கும் நாலாம் வேற்றுமைக்கும் பின்வரும் வல்லினம் இரட்டிக்கும்.

| | | | | |
|---|---|---|---|---|
| எலியை | + | கடித்தது | = | எலியைக் கடித்தது |
| மரத்தை | + | சாய்த்தான் | = | மரத்தைச் சாய்த்தான் |
| அணிலை | + | பிடி | = | அணிலைப் பிடி |
| லீலாவுக்கு | + | கொடு | = | லீலாவுக்குக் கொடு |
| கழுதைக்கு | + | பொதி | = | கழுதைக்குப் பொதி |
| குதிரைக்கு | + | தீனி | = | குதிரைக்குத் தீனி |
| பிள்ளைக்கு | + | செய்தி | = | பிள்ளைக்குச் செய்தி |

---

வினாக்கள் :

1. இரண்டாம்வேற்றுமைப் பெயர்ச்சொல் 6 எழுது.
2. நான்காம்வேற்றுமைப் பெயர்ச்சொல் 6 எழுது.
3. வல்லினத்தில் துவக்கும் பதம் 6 எழுது.
4. 2-ம் 4-ம் வேற்றுமைப் பெயரோடு வல்லினத்தில் தொடங்கும் பதம் சேர்த்து எழுது. அதில் என்ன விகாரம் உண்டாகிறது ?
5. மணி + கொடு. உனக்கு + தந்தேன்.
கனகு + கேட்டான். பலே + கறுப்பு.
தேனை + சாப்பிடு. உணவு + கேள்.

இவற்றைச் சேர்த்து எழுது.




தாராகணம் :

## 11. ஆகாய மண்டலம்

நாம் வசிக்கிற இந்த உலகம் எவ்வளவு பிரமாண்டமானதென்று என்றைக்காவது யோசித்தீர்களா? கணித நூல் வல்லவர்கள் அது ஒரு உருண்டை என்றும், அவ்வுருண்டையின் சுற்றளவு இருபத்தையாயிரம்மைல் என்றும் அறிந்திருக்கிறார்கள். நாம் அதைச் சுற்றிவர முயன்றால் பல மாதங்களாகும். முதல் தடவையாக உலகத்தைச் சுற்றினவன் மூன்று வருஷமாய்க் கப்பல் பிரயாணம் செய்தான். பூமி அவ்வளவு பிரமாண்டமாய் இருப்பதால் நமது கண்ணுக்குத் தட்டையாய்க் காணப்படுகிறது.

இவ்வளவு பெரிய உருண்டை எவ்விதம் ஆகாயத்தில் நிராதாரமாய் நிற்கிறது? நமது முன்னோர் ஆதிசேஷன் என்னும் ஆயிரந்தலைப் பாம்பு அதைச் சுமப்பதாய்ச் சொன்னார்கள். நமது கொள்கை அதுவன்று. மேலும் பூமியிலும் பதின்மூன்று லக்ஷமடங்கு பெரிதான சூரியன்கூட பூமியைப்போலவே தாங்குவாரின்றி ஆகாயத்தில்தான் தானாய் நிற்கிறது. பூமி சூரியனைச்

சுற்ற, வேறு எட்டு பூமிபோன்ற லோகங்களும் அவ்வாறே இடையறாது சூரியனைச் சுற்றி வருகின்றன. அவ்வுருவங்களில் சில பூமியைக் காட்டிலும் பன்மடங்கு பெரியவை. பூமியை ஒரு சந்திரன் சுற்றி வருகிறது போல, அந்தக் கிரகங்களுக்கும் சந்திரன்கள் உண்டு. கிரகங்களுக்காவது, சந்திரன்களுக்காவது இயற்கை ஒளி இல்லை. சூரியனிடம் இருந்து பெற்றே பிரகாசிக்கின்றன.

நாம் இரவில் ஆகாச மண்டலத்தைத் தினந்தோறும் பார்க்கிறோம். அங்கே மோதிரத்தில் வைத்த வைரக்கல்மாதிரி துலங்கும் சிறு ஜோதிகள் பல பார்த்து, சூரியனுக்கு இவைகள் எம்மாத்திரம், அவனுக்குப் பயந்தல்லவோ இவைகள் தலைகாட்டாது மறைந்து கிடந்து இரவில் வெளிப்படுகின்றன என்று சொல்லி நகைத்ததுண்டு. அத்தாராகணங்களும்,

"சிறியார் செய்த சிறுபிழை எல்லாம்
பெரியாராயின் பொறுப்பது கடனே,"

என்று சொல்லி, நம்மைப் பார்த்துக் கண் சிமிட்டிக் கொண்டிருப்பது வழக்கம். அவைகளை எண்ணித் தொகையிட நாம் சில சமயங்களில் பிரயத்தனப் பட்டிருப்போம். அது கூடிய காரியமல்லவென்று மனஞ் சலித்து எண்ணுவதை நிறுத்தினதும் உண்டு. நல்ல தூரதிருஷ்டிக் கண்ணாடி ஒன்று சம்பாதித்து அதைக் கொண்டு தாராகணத்தைப் பார்த்தால் நமக்குக் கொஞ்சம் ஞானமுண்டாகும்.

சிறிய வைரக்கல் மாதிரி தோன்றும். நக்ஷத்திரம் ஒவ்வொன்றும் ஒரு பெரிய சூரியனும். ஆறுங் கூட்டம்

நக்ஷத்திரம் என்று நாம் சொல்லுகிற ஒரு கணம் இரவில் கவனித்துப் பாருங்கள். அதைத் தூரதிருஷ்டிக் கண்ணாடியால் பார்த்தால் ஆறாயிரம் நக்ஷத்திரங்கள் வரையில் அதில் எண்ணலாம்.

பால் வீதி என்றும் ஆகாச கங்கை என்றும் சொல்லப்படுகிற தாராகணத்தை என்றைக்காவது கவனித்தீர்களா? அது நமது கண்ணுக்குக் கண்ணாடித் தூள் பரப்பிப்போட்ட மாதிரியே தோன்றுகிறது. தூரதிருஷ்டிக் கண்ணாடியால் அதைப் பார்த்தால் லக்ஷாதி லக்ஷம் நக்ஷத்திரங்கள் ஒன்றையொன்று நெருக்கி மேல்விழுந்து அமுக்கிக்கொண்டு கிடப்பது போல் தோன்றுகிறது. நாம் தோற்றத்தின்படி தீர்ப்புச் செய்யாமல் நீதியின்படி தீர்ப்புச் செய்வோம். இந்த அழகு தாராகணங்கள் ஒன்றிலிருந்து ஒன்று லக்ஷக்கணக்கான மைலுக் கப்பால் இருக்கின்றன. அவற்றை எண்ணித் தொகைபோட யாரால் ஆகும். மேதாவிகள் தம்மால் ஆகாதென்று மலைத்து விட்டு விட்டார்கள். தூரதிருஷ்டிக் கண்ணாடிக்கு எட்டியவைகள்மட்டும் 'பத்துக்கோடி' என்கிறார்கள். அந்தக் கண்ணாடிக் கெட்டாத தூரத்தில் எத்தனை இருக்கின்றனவோ.'

சூரியன் மேற்கூறிய உடுக்களின் வரிசையில் மகா உயர்ந்ததென மதிக்கவேண்டாம். சூரியனது கதிர்கள் அதிலிருந்து பூமிக்கு வர எட்டு நிமிஷம் ஆகிறது. வெளிச்சமோ ஒரு விநாடிக்கு 1,86000 மைல் தூரம் செல்லும் சக்தியுள்ளது. இக் கணிதத்தின்படி சூரியனுக்கும் பூமிக்கும் உள்ள தூரம் 92,0000000 (தொண்ணூற்று இரண்டு கோடி) மைல். நக்ஷத்திரங்களின்

தூரத்தை எப்படிக் கணக்கு சொல்லுவது? வெளிச்சம் அவைகளிலிருந்து நமக்கு வந்துசேர ஆகும் காலக் கணக்கு மட்டுமே சொல்லுவோம்.

நக்ஷத்திரங்களில் நமக்கு அதிசமீபமா யிருப்பதி லிருந்து ஒளி நம்மை வந்தெட்ட நான்கு வருஷம் நான்கு மாதமாகும். அதி தூரத்திலிருக்கும் உடுக் களின் கதிர் ஒளி நம்மைச் சந்திக்க ஆயிரம் வருஷ மாகுவதும் உண்டு.

ஆதலின் ஆகாய விரிவில் குவித்தும், சிந்திச் சிதரி யும் கிடக்கும் பாவனையாகக் கட்புலனுக்குக் காணப் படும் நட்சத்திரங்களாகிய மணிகள் ஒவ்வொன்றும் ஒரு பிரமாண்டமான சூரியன் என நாம் அறியவேண் டும். ஆப்கானிய அரசன் கஜினிமாமூது இந்தியாமீது படையெடுத்து வரும்நாளில் அதிதூரத்திலுள்ள நக்ஷத் திரத்திலிருந்து புறப்பட்ட ஒளி இன்னும் நமக்கெட் டாதிருக்கலாம். அக்கதிர் ஒளியோ ஒரு செக்கண்டுக்கு ஒரு லக்ஷத்து எண்பத்தாறுயிரம் மைல் வீதம் ஓடிப் பாய்கிறது அல்லவா? அதனுல் நமக்கு ஒளி கொடுத்து இப் பூமண்டலத்தின் ஜீவகோடிகளைப் பிழைக்கும்படி செய்கிற சூரியனுனவன் ஆகாயமண்டலத்தில் விளங்கி நிற்கும் பெருத்த சபையில் ஒரு சாதாரண அங்கமென அறிகின்றோம்.

தூரதிருஷ்டிக் கண்ணுடியால் இரவில் நக்ஷத்திரக் கணங்களை உற்று நோக்கினல் சில தாராகணங்களைச் சூழ்ந்து ஒளியுள்ள மேகம் இருப்பதைக் கவனிக்கலாம். அவற்றில் நக்ஷத்திரங்கள் முறுக்குவட்டமான வரிசைக் கிரமமாய் இருக்கின்றன.

இதென்ன விசேஷம்! இம்மாதிரிக் கூட்டத்தை 'நெப்யூலா' என்கிறார்கள். இதில் தாரா இம்மாதிரி ஒழுங்குக்கு வந்ததெவ்விதம்? ஒளியுள்ள மேகமாய்க் காணப்படுகிறதே அது என்ன வஸ்துக்களால் உண்டானது என்பது வரையில் கணித நூல் வல்லோர் ஆராய்ந்து வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது பிரகாசிக்கும்



நெப்யூலா

மேகம் எரிந்துகொண்டிருக்கும் வாயுக்களால் உண்டானதென்றும், அதிலிருந்தே அக்கூட்டத்தில் காணப்படும் உடுக்கள் ஒவ்வொன்றும் உண்டாயினவென்றும் கூறுவதுடன் சூரியனும் அதைச் சுற்றிவரும் நவக்கிரகங்களும் ஒருகாலத்தில் இம்மாதிரியான ஒரு 'நெப்யூலா'வாகவே இருந்ததெனவும் அபிப்பிராயப்படுகிறார்கள்.

வானஜோதிகளில் இருவிதம் கவனிக்கலாம். ஒரு வகை தம் தம் இருப்பிடத்தில் நிற்க, வேறு பல சலியாது மின்வேகம் மனோவேகமாய் ஓடிக்கொண்டு கிடக்கின்றன. அவற்றில் எழுபத்தைந்து வருஷத்திற்கொரு தடவை நம் கட்புலன்களுக்குக் காணப்படும் வால் வெள்ளிகள் உண்டு. நூற்றிருபது வருஷங்களுக்கொரு முறை காணப்படுபவையும் உண்டு.

இவ்வான ஜோதிகள் எவ்விதம் ஒன்றை யொன்று முட்டிக்கொள்ளாமல் நடந்து கொள்ளுகின்றன? சில சமயங்களில் அப்படி நேரிடுவதுமுண்டு. பொதுவாய் அவை ஒன்றையொன்று கவர்ச்சித்து இழுப்பதால் தம் தம் வரை கடவாமல் ஓடிக்கொண்டிருக்கின்றன. பால் பாதையில் ஏன் தாரா நெருங்கிக் கிடக்கிறது? அதை அடுத்தும் அவை அதிகமாக நெருக்கி நிற்க, அப்பால் போகப் போக அவை குறைந்து காணப்படும் காரணமென்ன? இதை இன்னொரு நாள் பேசலாம்.

---

வினுக்கள் :

1- நாம் வானத்தில் காணும் ஜோதிகளில் எத்தனைவிதம் கவனித்தாய்?

2. சூரியனுக்கும் சந்திரனுக்கும் என்ன வித்தியாசம்?

3. 'நெப்யூலா' என்றால் என்ன?

4. பால் பாதை என்றால் என்ன?

5. நட்சத்திரங்களின் தூரத்தை எப்படி கணிக்கிறார்கள்?



பிரான்சு அரமனைத் தோட்டம்

## 12. பிரான்சு தேசத்தில் குடியரசு ஏற்பட்ட வரலாறு

சுமார் 130 வருஷங்களுக்குமுன் பிரான்சு தேசத்தை அநேக பிரிவுகளாய்ப் பிரித்து ஒவ்வொன்றையும் ஒரு சிற்றரசன் ஆண்டு வந்தான். விளை நிலங்கள் எல்லாம் குனிந்து பாடுபடாத பிரபுக்கள் கையில் இருந்தது. ராஜன் ஒருவன் சிற்றரசருக்கு மேலான அதிகாரியாய் மதிக்கப்பட்டு இருந்தும் ஒருவரையும் அடக்க முடியாதவனு யிருந்தான்.

ராஜ குடும்பமும் பிரபுக்களும் மகா உல்லாசப் பிரியராய் காலம் தள்ளினார்கள். பாடுபடுகிற குடிக

ளுக்கு வரியும் வறுமையும் அதிகரித்ததே ஒழிய பலன் கிடைக்கவில்லே. பிரபுக்களுக்கு அவர்கள் வீணே குற்றேவல் செய்தார்கள். வயல்களிலும் தோட்டங் களிலும் அரும்பாடு பட்டும் பசியாற உண்ணவும் சுகமாய் வீட்டில் ஒதுங்கி இளேப்பாறவும் இடமிருக்க வில்லே. தேசத்தில் பஞ்சம் அதிகரித்தது. கவனிப்பா ரில்லே. குடிகள் தமது குறைகளேக் குறித்து முறை யிட்டார்கள். பிரபுக்கள் செறுக்காய் விடை கொடுத் தார்கள். தமது பெருந் திண்டியையும், களியாட்டை யும் எள்ளளவும் குறைக்கவில்லே.

தேசத்தில் நீதி, இரக்கம், உண்மை காண்பது அரிதாயிற்று; சாதாரண ஜனங்கள் பிரபுக்களுக்கு ஏதா வது கோபமூட்டினவர் பலர் விசாரணே யில்லாமலே ஜெயிலுக்கு அனுப்பப்பட்டு உயிர் விட்டார். ஜீவாந் தரக் கைதிகளானவர் பலர். அடிபட்டுச் செத்தவர் பலர். பிரபுக்கள் சிற்றரசர் அதிகாரம் அவ்வளவு பெரி தாய் இருந்தது.

இவ்வித நிலேமையில், எளிய குடிகள் யாவரும் ஒன்றுகூடி தமக்குத் தலேவர்களே ஏற்படுத்திஞர்கள். வெகு ரகசியமாய்க் கூட்டங்கூடி ராஜ குடும்பத்தையும், ராஜ சபையிலுள்ள சகல பிரபுக்களேயும், அரசாங்க அதிகாரிகள் சகலரையும் கொன்று, அவர்கள் மனேவி மக்கள் சிசுக்களேக்கூடச் சிரசாக்கினே செய்ய ஏற்பாடு கள் செய்துகொண்டார்கள்.

கி. பி. 1795-ம் வருஷம் ஒருநாள் திடீரென்று பாரீஸ் நகரின் குடிகள் ஏகமாய் ஒரே மனுஷனேப்போல் எழும்பி சிறைச் சாலேகளேத் திறந்து விட்டார்கள்.

சிறைச்சாலைக் காவல்காரர் ஓடிப்போனார்கள். ஜெயில் அதிகாரிகளைக் குடிகள் அடித்துச் சின்னாபின்னப்படுத்திக்கொன்றார்கள். குடிகளின் கோபாவேசம் பொங்கி யுகாந்தகால நெருப்பாய்ப் பற்றி எரிந்தது!

தேசத்தின் ஒவ்வொரு நகரத்திலும் பாதைக்குப் பாதை காவல் வைத்தார்கள். அதனால் பிரபுக்களாவது ராஜவம்சத்தாராவது தப்பிக் கடந்துபோக முடியாது. மேலும் கடல் துறைகள்தோறும் காவல் வைத்தார்கள். அதனால் ஒருவரும் கப்பல் ஏறி மறுதேசம் போய்த் தப்பித்துக்கொள்ள முடியாது.

பிரான்சில் அரசரது பெருமையும் கிரீடமும் இராவின்கனாப்போல் நீங்கிப்போயிற்று. ஏழைக் குடிகளின் அரசாட்சி ஆரம்பித்தது. அரசர் குலத்தில் பால் குடிக்கும் சிசுக்கள் வரையில் சிறைப்படுத்திக் கொண்டுவரப் பட்டார்கள். அவர்களது குற்றத்தை விசாரிக்க வண்ணானும் வாணியனும் செம்மானும் செருப்புத் தைக்கிறவனும் உழவனும் உப்பு வியாபாரியும்வந்து கூடிக் கொலு அமர்ந்தார்கள். விசாரணையெல்லாம் ஐந்து நிமிஷத்தில் முடிந்தது. உடனே மரண தண்டனை விதிக்கப்பட்டது. இதில் அநியாயமாய் உயிர்விட்ட ஏழைகள் பலர். பழைய ராஜாங்கத்தை இழிவாய் பேசாதிருப்பதுகூட ராஜதுரோகமாய் எண்ணப்பட்டது.

இந்தப் பயங்கர காலம் சுமார் 20 வருஷம் இருந்தது. 1815-ம் வருஷம் முதல் குடிகளின் ஒழுங்கான அரசாட்சி ஆரம்பித்தது. கல்விக் கேள்விகளில் பெரியவரான நிபுணர் குடிகளின் லாபத்தைக் கருதி அவர்களுடைய இஷ்டத்தை அநுசரித்து அரசாளுகிறார்கள்.

ஐந்து வருஷத்துக்கு ஒருமுறை அதிகாரிகளை மாற்று வார்கள். கல்வியறிவும் ஆளும் திறமையும் உள்ள எவ னும் அதிகாரியாகலாம். பிரபு கீழ்மகன் என்ற பேதம் அங்கேயில்லை.

ஜனங்கள் தற்காலம் பிரான்ஸ் தேசத்தில் வெகு க்ஷேமமாய் வாழுகிறார்கள். முதல்தரமான வயல்களும் திராக்ஷைத் தோட்டங்களும் அங்கே காணலாம். நெசவு வேலை, உலோகங்களில் வேலை எல்லாம் சிறப் பாய் நடைபெறுகிறது. ஜனங்கள் மிக்க மனோர்ச்சாக முள்ளவர்கள்.

---

**வினாக்கள் :**

1. பிரான்சு எங்கே இருக்கிறது?
2. அங்கே குடியாசு எப்படி உண்டானது?
3. குடியரசு என்றால் என்ன?
4. தற்கால பிரான்சிய குடிகளின் நிலமை என்ன?

## 13. சத்தியம் தலைகாக்கும்

சத்தியம் கண்டிப்பான அதிகாரி என்னலாம். வேலைக்குத் தகுந்த கூலியோ சம்பளமோ கொடுத்தா லும் எஜமானனாவது, கூலிபெறுபவனாவது சத்தியத் திற்குக் கட்டுப்பட்டு நடப்பான் என்று நிச்சயமாக சொல்லமுடியாது. அப்படிச் செய்பவர் மிகச் சிலரே.

தற்காலத்தில் திரண்ட ஆஸ்திபடைத்து வாழும் சீமான் ஒருவர் தமது அநுபவத்தை வெளியிட்டிருக் கிறார். அதை எடுத்துக் கூறுவோம் :—

சில வருஷங்களுக்குமுன் இங்கிலாந்தில் குதிரை வியாபாரி கிழவன் ஒருவனிடத்தில் எளிய சிறுவன் ஒருவன் குற்றேவல் செய்து வயிறு வளர்த்து வந்தான். கிழவன் பொதுவாய் தயை தாக்ஷண்யம் சிறிதுமின்றிப் பையனை வேலை வாங்குவான்.

ஒருநாள் லண்டன் நகரத்துச் சீமான் ஒருவன் குதிரை வாங்க வருவதாய்க் கடிதம் அனுப்பி யிருந் தான். கிழவன் குணக்கேடான குதிரை ஒன்றைப் பற்றிச் சிலாக்கியமாய் புகழ்ந்து, அவனுக்குப் பெருந் தொகைக்கு விற்று ஏமாற்றத் தீர்மானித்தான். தனது ஏவலாளைக் கூப்பிட்டுத் தனது நோக்கத்தையும், நகர வாசியின் அறியாமையையும் குறித்து சந்தோஷமாய்ப் பேசினான்.

பையனோ முகத்தைச் சுளித்து, "அப்பா, தாம் உண்மைக்கு நேர் எதிரிடையான காரியம் சொல் லப் போகிறீரோ" என்றான். அவன் அதற்கு "அடே, நீயும் அப்படியே சொல்ல வேண்டும். தவறினால் உனக்கு உதை கிடைக்கும் என்று சொல்லிப் பையனை வேலைக்கு அனுப்பிவிட்டான். சற்று நேரத்தில் வியா பாரியைத் தேடி நகரவாசி தான் முன் தெரிவித்த படியே வந்தான். விருத்தன் தனது மிருகத்தைக் குறித்து தான் சொல்லக்கூடிய பெரும்புகழ் யாவும் பிதற்றியதால் சந்தோஷித்து, வியாபாரிக்குப் பணம் கொடுக்குந் தருணம் அவன் இளைஞனைக்கண்டு கூவி அழைத்து "இந்தக் குதிரை எப்படிப்பட்டது?" என் றான். பையன் உடனே "ஐயா குதிரை மகா முரடன்; அடங்காமையே அணிகலமாய்க் கொண்டது. மற்றப் படி பார்வைக்கு நல்ல குதிரைதான்" என்றான்.

நகரவாசி இதன்பேரில் அளவற்ற ஆச்சரியத்துடனும் அதற்கு மிஞ்சிய கோபத்துடனும், "இனிமேல் உன் உறவு ஆகாது" என்று வியாபாரிக்குச் சொல்லி தன் குதிரைமீதேறி வந்தவழியே அவசரமாய்ப் போய்விட்டான்.

பையனது வார்த்தைகளும், தனக்கு நேர்ந்த அவமானமும் கிழவனது கோபாவேசத்தை மூண்டெரியப் பண்ணிற்று. குதிரைச் சவுக்கினால் இளைஞனை குருதி சிந்தி ஒழுகும்வரை அடித்தான். அவனோ தைரியசாலி. அழுவது ஆடவருக் கேற்றதல்ல என்றெண்ணி 'எதுவானாலும் இறைவா உந்தன் செயல் அது' எனத் தீர்மானித்தவனாய் நடந்து கொண்டான்.

வயோதிப வியாபாரி தன் வேலையாளை மொத்தி விட்டு சற்றுதூரம் போவதற்குள் அடியற்ற மரம் போல் பொத்தென விழுந்து கிடந்தான். இதனைக் கண்ட பையன் அவனிடம் விரைந்தோடி, தன்னைப் பெற்று வளர்த்த அருமைத் தந்தையைப்போல் அவனை வாரி எடுத்து, முகத்தில் குளிர்ந்த ஜலம் தெளித்து, வேண்டிய பேருதவி யாவும் குறைவற இயற்றினான். வயோதிபன் கண்திறந்து பார்த்தபோது பையன் காயங்களைச் சிறிதும் கவனியாது அநீதனான தன் க்ஷேமத்தின்மேல் கொண்ட கருத்தைக் காணலானான். அப்போது அவன் உள்ளத்தில் உணர்வு பிறந்தது.

வயோதிபன் பலநாள் படுக்கையை விட்டு நீங்காதவனாய் வியாதியா யிருந்தான். பையன் அவனை மாறாத பக்ஷத்துடன் பராமரித்து வந்தான். மரிக்கும் தருணத்தில் தனக்குத் தீமைக்குப் பதில் நன்மை செய்து,

ஆருயிர் நண்பனைய் உதவிய சிறுவனைக் கூப்பிட்டு, "அன்பனே, கடவுள் உன்னை மிகுதியும் ஆசீர்வதிப்பார். எக்காலும் சத்தியத்தின் பாதை செல்லத் தவறாதே. சத்தியம் தலைகாக்கும்" எனச் சொல்லிக் கண் மூடினான்.

சிறுவன் வயது வந்தபிறகு சத்தியவிரதம் பூண்டவனாய் நடந்ததால் எவரும் அவனை நம்பினார்கள். அவன் பெருத்த வியாபாரியாகி திரண்ட செல்வமும் புகழும் பெற்று வாழ்ந்தான்.

---

**வினாக்கள் :**

1. சத்தியமாவது என்ன?
2. சத்தியம் தவறாமல் நடக்கத் தடை என்ன?
3. பாடத்தில்சொன்ன ஆங்கில பையன் கதை சொல்லு?
4. சத்தியம் தவறாமல் நடந்த பூர்வ இந்திய அரசர் யார்?

## 14. கோயம்புத்தூர் விவசாய சாஸ்திரக் கலாசாலை

"அண்ணா, இந்த மாம்பழம் பார். நமது தோட்டத்துப் பழம் எந்த மரத்திலுமே நன்றாய் இல்லை. ஒன்று புளிக்கிறது; அல்லது பனம்பழம்போல் நார் நாராய் இருக்கிறது."

"ஏது, துரை இவ்வூரில் எங்கே நல்ல பழம் கண்டாய். எல்லாருடைய தோப்புக்களிலும் இம்மாதிரிப் பழம்தானே இருக்கிறது."

"மாமா தோட்டத்தில்?"

"ஆஹா, மாமா தோட்டத்துப் பழமா? அது எல்லாம் ஒட்டுமா."

"நம் தோட்டத்தில் ஒட்டுமா வைக்கப்படாதா?"

"துரை, உனக்குக்கூடவா இந்த பேதம் எல்லாம் தெரிகிறது?"

"அவர்கள் தோப்புப் பலாப்பழத்தில் நார் மிகவும் சொற்பம்; சொளைகளோ எவ்வளவு பருமன்! என்ன ருசி! மாம்பழத்தில் நாரே கிடையாது. கொட்டை சிறிது; ருசியா, அமிர்தம் மாதிரி. அவர்கள் தோட்டத்துத் தென்னை பலன் கொடுத்ததுபோல் நமது மாங்களில் ஒருக்காலும் கிடையாது.

"துரை, அவர்களுடைய கரும்புத் தோட்டம் பார்த்தாயா?"

"எவ்வளவு பெரிய கரும்பு! எவ்வளவு உயரமாய் வளருகிறது! மாமா தோட்டம் ஏன் எல்லா விஷயத் திலும் அவ்வளவு சிறப்பாய் இருக்கிறது?"

"மாமா கோயம்புத்தூரில் விவசாயக் கலாசாலையில் இரண்டு வருஷம் வாசித்தவர். அவர் தோட்டத்தில் வேலை செய்கிற ஆட்களுக்கு தாமே சாஸ்திர முறை யாவும் போதிக்கிறார். விடியற்காலையில் ஐந்துமணிக் கெல்லாம் அவரைத் தோட்டத்தில் காணலாம்."

"அண்ணா, அப்பாகூட 'விவசாயபோதினி' என்ற மாதாந்தரப் பத்திரிகை வாங்குகிறார்."

"வாங்கி என்ன பயன்? அப்பா நமது நிலங்களைக் கவனிக்கிறதில்லை. அவருக்குக் கச்சேரி வேலையே போதுமானது. ரெங்கையக் கவுண்டன் வசத்தில் எல்

லாக் காரியமும் விட்டுவிடுகிறார். அவனுக்குச் சரியாய் எழுத்துக் கூட்டி வாசிக்க வராது. 'சொன்னான்' என்பதைச் 'சென்னான்' என்றும், 'எருமை' என்பதைப் 'பெருமை' என்றும் வாசிப்பான்."

அவனுக்கு ஏதாவது நல்ல முறைகளைச் சொன்னாலுங் கேட்கமாட்டான். 'அதெல்லாம் வெள்ளைக்காரனுக்கே தகுந்தது. சீமைதேசத்து மாதிரி, இங்கே யாருக்குத் தெரியும்' என்று ஒரே சொல்லில் தட்டி விடுவான். அவனை என்ன செய்கிறது."

"அண்ணா, மாமா இரண்டு வருஷமாய் என்ன படித்திருப்பார். ரெங்கையன் ஒருநாள்கூடப் படியாமல் அதே வேலை செய்கிறான் பார்."

"ஆம், அதனால்தான் நமது தோட்டத்தில் கத்தரிச்செடி, மிளகுசெடி எல்லாம் பலன் அதிகம் கொடுக்கிறதில்லை. நிலத்தின் வருமானம் அதில் போடுகிற செலவுக்குத் தானும் சில வருஷங்களில் சரிக்கட்டுகிறதில்லை."

"நீ கோயம்புத்தூர் விவசாயக் கலாசாலை பார்த்திருக்கிறாய். அதைப்பற்றிச் சொல்லு."

"கிருஷிகவேலை கற்பிக்கிற கலாசாலையானது மகத்தான கட்டடங்களும், கழனிகளும் அடங்கிய ஒரு கிராமம் என்பதே சரி. அது தொழில் பயிலும் மாணவர் வீடுகள், போதக ஆசிரியரது அழகிய மனைகள், புலங்களில் வேலை செய்யும் கால்நடைகளின் தொழுவங்கள், கறவைப் பசுக்கள், கோழி புறா முதலிய பக்ஷிகளுடைய வீடுகளாகிய பகுதிகள் அடங்கிய கிராமம்.

பெரிய மணிக்கூண்டு அடங்கிய ஒரு அழகிய வீட்டில் பயிர்களைப்பற்றிப் பற்பல காரியங்களைத் தெரிந்து கொள்ள எல்லாவித சௌக்கியங்களும் உண்டு. முதலாவது வித்துக்களின் தாரதம்மியம் கண்டுகொள்ளுகிறார்கள். பயிர்களுக்கு வரும் நோய்களும், காரணமும் நிவாரணம் அறிவதோடு, பயிர்கள் க்ஷேமமாய் வளர்ந்து பலன் மிகுதியாய்க் கொடுப்பதற்கான பயிர் உணவு யாவை என்றும் அவற்றை வழங்கும்விதம் இன்னதென்றும், புஸ்தகங்களில் வாசிப்பதோடு சாஸ்திர விசாரணையும் செய்கிறார்கள்.

நிமிஷந்தோறும் காலநிலையை அளவிட்டுக் குறிப்பிடும் கருவி (உஷ்ணமானி) ஒருபக்கமும், பெய்யும் மழையை அளவிடும் கருவி அதற்கடுத்த பக்கமும் இருக்கின்றன.

ஆடு, மாடு, கோழி வளர்க்க ஏற்ற இடமும், அதை அடுத்துப் பாலில் வெண்ணெய் எடுக்கும் யந்திரசாலையும் இருக்கிறது. ஓர் இடத்தில் யந்திர உதவியால் தானியம் கதிரின் கொம்மையிலிருந்து எடுக்கப்பட்டுக் களஞ்சியம் சேரப்பக்குவமாகிறது.

மாடுகட்டுத் தரியில் மாட்டுக்கு ஆகாரம் தயார் செய்து கொடுக்கும் ஒழுங்கும், அப்புறம் மாட்டுச் சாணம் நீரையெல்லாம் பக்குவமாய்ச் சேகரித்து அதை உரமாக்கச் செய்திருக்கும் கவனமான ஒழுங்கு காணலாம். மிகவும் நேர்த்தி.

ஒரு பக்கத்தில் வேடிக்கை விநோதமான ஒரு சரக்கு காணலாம். காய்ந்த மீன் மூட்டைகள் அடுக்கிப் போட்டிருந்தது. அது எதற்காக வென விசாரித்த

போது ஒரு நண்பர் "இந்த சாக்கு மிகவும் நல்ல எரு, நிலம் அதனுல் செழிப்பாகும். மேலும் இவ் வருஷம் மழையின்றி மாட்டுத் தீனி கிடைப்பது வெகுகஷ்டம். அதனுல் மட்டைக் கள்ளியின் முட்களைச் சீவி விட்டு இந்த மீனேடு கலந்து வைத்தால் மாடுதின்று மிகுதி யான பால் கொடுக்கிறது" என்ருர்.

அங்கே முக்யகாடுகளுக்குச் சுலபமாய்ப் போக்கு வரத்துச்செய்ய இரண்டு தண்டவாளங்கள் பதித்திருக் கிறது. காட்டுப் பலன்களையும், எரு முதலிய சரக்கு களையும் சிறு வண்டிகளிலேற்றி சுலபமாய்ப் போக்கு வரத்துச் செய்ய இப்பாதை பயன்படுகிறது. காடுகளில் பயிர்கள் வெகு ஒழுங்காய் கிரமப்படி வளருகின்றன. அவை நடப்பெற்ற தேதியும், பயிரின் பெயரும் ஒரு சீட்டில் குறித்து தொங்கவிட் டிருக்கிறது."

"பயிர் எப்படி கிரமப்படி வளரும் ?"

நமது நாட்டில் விதைக்கும்போது கையால் விதை யைத் தெளிக்கிருர்கள். அவர்களோ விதைக்க யந்திரம் வைத்திருக்கிருர்கள். அது விதையைச் சமஅளவு தூரத் தில், போதுமான இடம்விட்டுக் கணக்காய் போடுகிறது. விதை கொஞ்சமேனும் நஷ்டமாவதில்லை.

"பார்க்கவே பயிர் அழகாயிருக்கும்."

"நூதனமான அநேகவித ஆயுதங்கள் வைத்திருக் கிருர்கள். அவர்கள் கலப்பைகள் தரையை ஆழமாய் வெட்டி மண்ணைப் பெருங்கட்டிகளாய்த் திருப்பிப் போடத்தக்கவை. கட்டியை உடைத்துப் பண்படுத் தக் கூடியவை. கிழங்கு வெட்ட, மாட்டுக்குத் தட்டை வெட்டிப்போட, விளைந்த பயிரை வெட்ட, ஆகிய

பற்பல வேலைகளுக்கும் அதிநூதனமான நாணயமான ஆயுதங்கள் வைத்திருக்கிறார்கள்.''

''அண்ணா, நாம் இரண்டுபேரும் அங்கேபோய்க் கல்வி கற்கவேண்டும்.''

---

வினாக்கள் :

1. விவசாயம் கற்றுக்கொள்ள வேண்டியது அவசியமா? அதனால் பயன் என்ன?
2. குடியானவன் எப்படி விவசாய சாஸ்திரம் தெரிந்து கொள்ளலாம்?
3. மாட்டுச் சாணம் மூத்திரம் எதற்கு உதவும்?

## 15. இலக்கணப் பாடம் - III

வடமொழிப் புணர்ச்சி :

வடமொழியாகிய சமஸ்கிருதத்திலிருந்து தமிழில் வந்து சேர்ந்த பதங்கள் புணரும்பொழுது அவைகள் வேறு விதிகளை அனுசரிக்கின்றன. உயிரும் உயிரும் சேரும்போது இடையில் வகர அல்லது யகர ஒற்று தோன்றும். அதை உடம்படுமெய் என்பது வழக்கம். இது தமிழ்பதங்கள் புணரும்முறை என்று பார்த்தோம்.

உதாரணம் :

| | | |
|---|---|---|
| கற்ற + அறிஞர் — கற்றவறிஞர் | } | வ், ய் தோன்றியிருக்கின்றன. |
| பாதி + அளந்த — பாதியளந்த | } | |

வடமொழியில் உயிரும் உயிரும் புணரும் விதம் மூன்று என்று கவனிக்க.

(1) பத + அம்புஜம் = பதாம்புஜம்
பத்ம + ஆசனம் = பத்மாசனம்
சதா + ஆனந்தம் = சதானந்தம்
கருணா + அமிர்தம் = கருணாமிர்தம்
தேக + ஆரோக்கியம் = தேகாரோக்கியம்

அ + ஆ அல்லது ஆ + அ இரண்டு உயிரும் போய் ஆ தோன்றுகிறது காண்க.

(2) தேவ + இந்திரன் = தேவேந்திரன்
சுந்தர + ஈசன் = சுந்தரேசன்

அ + இ; அ + ஈ, இரு உயிரும்போய் ஏ தோன்றுகிறது.

(3) சூரிய + உதயம் = சூரியோதயம்
புருஷ + உத்தமன் = புருஷோத்தமன்
ஞான + உபதேசம் = ஞானோபதேசம்
லோக + உபகாரி = லோகோபகாரி

அ + உ இரு உயிரும் போய் ஒ தோன்றுகிறது.

## 16. தமிழ்

தமிழ் பாஷை தென்னிந்தியாவின் பதினான்கு ஜில்லாக்களில் விசேஷமாய் பேசப்படுவதோடு வட இந்தியாவிலும் தெலுங்கு கன்னட நாடுகளிலும் பர்மா, சிலான், ஆப்பிரிக்காவின் சில பாகங்களிலும்கூட வழங்கி, தமிழ் மக்கள் பூசிக்கும் ஆலயங்களையும் அவரது பாடசாலைகளையும் காணலாம்.

சில தமிழ் நூல்கள் பல நூற்றாண்டுகளுக்குமுன் எழுதப்பட்டவை. நுண்ணறிவாளர் ஆராய்ச்சியின் பயனால் உண்டானவை என்று சொல்லலாம். அதற்குச் சில திருஷ்டாந்தங்கள் கூறுவோம்.

குறள் எழுதிய திருவள்ளுவர் பிரம்மாவின் அவதாரமான மஹாபுருஷன் என்று சொல்லப்படுகிறது.

ஆத்திச்சூடி, மூதுரை, கொன்றை வேந்தன், நல்வழி முதலிய நீதிவழி காட்டும் நூல்கள் எழுதின மூதாட்டியான ஔவையார் சரஸ்வதியின் அவதாரம் என்றும், இராமாயணம் பாடிய கவிச்சக்கரவர்த்தியான கம்பர் காளிதேவியின் கருணைக்கும் சரஸ்வதியின் ஆதரவுக்கும் உரித்தானவராய் இருந்தார் என்றும் சொல்லப்படுகிறது.

தமிழ் இலக்கணம் எழுதிய அகஸ்தியர் ஒரு மகாரிஷி, சிவபிரானது அனுக்ரஹத்தால் இந்த அரிய நூலை வரைந்ததாகப் புராணங்கள் கூறுகின்றன.

தாயுமானவர், மாணிக்கவாசகர் போன்ற பலர் செல்வம் பொங்கிய சிறப்புற்ற வாழ்வில், அரசர் சமுகத்தில் மந்திரி உத்தியோகம் செய்தவர்கள். அவர்கள் செல்வத்தைத் திரணமாய் மதித்து கடவுளின் சீர்பாதம் போற்றுவதே பரமானந்த வாழ்வாக எடுத்துக்கொண்டார்கள்.

புகழேந்திப் புலவர், ஒட்டக்கூத்தர், கம்பர் முதலானோர் சமஸ்தான வித்வான்கள். இவரது நூல்களின் பெருமை சொல்லாமலே தெளிவாய் புலப்படும்.

தமிழ் நூல்களில் பெரும்பாலானவை செய்யுளில் எழுதப்பட்டு நீதிமுறை புகட்டும் விதிகள் அடங்கி

யவை. வீரர் செயல்கள், சரித்திரங்கள், வேதங்கள், வசன நூல்களால் கூறப்பட்டுள. மருத்துவ நூல்கள் பொதுவாய் செய்யுளில் அமைந்துள்ளன.

தமிழ் எழுத்துக்களில் உள்ள உயிரும் மெய்யும் சமஸ்கிருதம், இந்தி, தெலுங்கு, கன்னடம், மலையாளமாகிய பல இந்திய பாஷைகளிலும் உருவபேதத்துடன் காணப்படுகின்றன. என்றாலும் தமிழ் எழுத்துக்கள் வாசிக்கவும் எழுதவும் மற்ற சகலபாஷை எழுத்துக்களிலும் மிகவும் எளிதானவை.

பூர்வ நூல்களின் தொகை பார்த்தால் தமிழ்பாஷை அதிகமான கலைகள் உடையதென்று மேன்மை பாராட்டலாம். அப்படி யிருந்தும் அவற்றின் பெயர் முதலாய் தமிழ் மக்கள் பலருக்கு உச்சரிக்கவும் தெரியாது. காதில் கேட்டதும் இல்லை. இந்தியர் பலருக்கு ஆங்கில மொழியில் உள்ள கருகலான புஸ்தகங்களும் தெரிந்திருக்கத் தமது தாய் பாஷையைக் குறித்து அவ்வளவு அறிவில்லாதது ஏன்? தமிழில் கிரந்தங்கள் எழுதின பெரியோர் அரசரும் மந்திரிமாரும் மகாரிஷிமாரும் பிராமணர் போன்றவருமாய் இருந்தபடியால் சாதாரண ஜனங்கள் வாசித்து பயன் பெறக்கூடிய நடையில் எழுதவில்லை. வாசிப்பில் விருப்புள்ள எவரும் தற்காலம் ஆங்கில நூல்களையே வாசித்து அவ்வந்நிய பாஷையைப் பிழையின்றி எழுதப் பேசக்கூடியவராய் இருக்கிறார். அவ்வளவு பாண்டித்தியத்தில் அரைவாசி கூடத் தமது தாய் பாஷையில் இல்லை. இதன் காரணம் ஆங்கில மொழியில் நூல்கள் எழுதும் மேதாவிகளும் கூட பிள்ளைக்கும் பேதைக்கும் தெரியக்கூடிய எளிய நடையில் எழுதி யிருக்கிறார்கள். தமிழகத்தின் கல்வி

மான்கள் மிகச் சுலபமான நடையில் கதைகள் பாடல்கள் சரித்திரங்கள் வேதாகமங்கள், சாஸ்திர நூல்கள் எழுதும்போது யாவரும் அவற்ருல் பெரும்பயன் அடைவார்கள். புலன்களில் வேலை செய்கிற வேளாளனும், தச்சன், கம்மாளன், ஓட்டன, துணி நெய்கிறவன், வண்டி ஓட்டுகிறவன் போன்ற சகலவிதமான உழைப்பாளரும் வாசித்துப் பலன் அடையும்படியான நூல் எழுத நமது பெரியோர் மனம் துணியும் காலமே க்ஷேமகாலம். அப்போது படிப்படியாய் நமது பழைய நூல்களும் பன்மடங்கு அதிகமாய் வாசிக்கப்படும். ஜனங்களும் நீதி நூல்கள் புராணங்கள் தேவாரங்கள் வாசிப்பதோடு பொது அறிவை விருத்திபண்ணும் நூல்களையும் பிரியமாய் வாசித்து விவசாயத்திலும் பொருள் ஈட்டும் முறை பலவற்றிலும் தேறுவார்கள்.

## 17. புத்தர் - I

கௌதம சாக்கியர் :

கிறிஸ்து பெருமானின் அவதார காலத்துக்குச் சுமார் ஐந்நூறு வருஷங்களுக்கு முன் வட இந்தியாவில் கங்காநதிக்கும் அப்பால், தற்கால நேபாள தேசத்தின் அருகில் ஒரு சிறு ராஜ்ஜியம் இருந்தது. அதன் தலைவனுன சுத்தோதனர் பிள்ளையில்லாக் குறை அகலப் பெருந்தவங்கள் செய்து அதன்பயனுகக் கண்டோர் உள்ளத்தைக் கவரும் தன்மை வாய்ந்த ஆண்மகவு ஒன்றைப் பெற்றெடுத்தான். அரசனது நேச பத்தினியின் பெயர் கௌதமியாதலால் அம்மகவுக்குக் கௌதமர் என்ற பெயர் வழங்கலாயிற்று. ஈன்ற தாயானவள்

உடனே மரணமடைந்த காரணத்தால் அக்குழந்தை சிற்றன்னையின் ஆதரவில் செல்வக் குமாரனாய் வளர்ந்து வந்தார்.

சிறுவயது முதலே தாங்குவாரின்றித் தடைசெய்வார் ஒருவருமின்றி வளர்ந்தபோதிலும், பந்துமித்திரர் கூட அவரைக் கண்ணின் கருவிழியாய் மதித்த போதிலும், செல்வச் செருக்கென்பது சிறிதளவும் அணுகாத



புத்தர்

ஜெயசீலனாய் அவர் விளங்கியதைக் கூறப் பல நற்கதைகள் உண்டு. அவர் வளர்ந்த பின்பு 'ஏழைக்கு இனிய நண்பனாயும், பேதைக்கு அரிய குருவாயும், நன்மார்க்க வழி தப்பினவர்களுக்குச் சன்மார்க்கம் புகட்டும் பெருவள்ளலாயும் விளங்கியது', அரிதோ.

ஒரு சமயம் தமது தோழருடன் விளையாடி நிற்கும்பொழுது, அவர்களில் ஒரு ராஜகுமாரன் அம்பினுல் அன்னம் ஒன்றைக் காயப்படுத்தி வீழ்த்தக் கண்டு மனம் வருந்தினர். அன்னத்தை எடுத்து அதை வருத்தின அம்பையும் நீக்கி, காயத்தைப் போக்கி அது பறந்து தன் உறைவிடம் போகுமாறு செய்தார். அன்னத்தின் ஆவியைப் போக்கும் கருத்துடன் அம்பு எய்தவன் வந்து வாதாடியும் அவன் எண்ணம் கை கூடவில்லை. எந்தப் பிராணியையும் வருத்தப்படுத்தி அதனுல் மனுஷன் தனக்குச் சுகம் தேடுவது தவறு என்று நிலைநாட்டினர்.

அவர் வளர்ந்து வாலிபனுன பொழுது அவருக்குக் கல்வி புகட்டின ஆசிரியர் எல்லாரிலும் மகா ஞானியாய் விளங்கினர். பார்த்தவர் எவரும் பிரமிப்படைந்தார்கள்.

இளவயதின் சுகமும் பலமும் அவருக்கு வாய்ந்திருந்தும் முதிர்வயதான பலவீனருடைய நோய் வருத்தங்களைக் கண்டு தினந்தோறும் அவர் கலங்கினர். பல பாவங்களையும் பிரியமாய்ச் செய்து துன்பத்தைத் தேடிக்கொள்ளும் ஜனங்களைப் பார்த்து, தமக்கு இருந்த நலங்களை மறந்தார்; உலகத்தில் அவர் கண்ட துன்பங்களைச் சுமந்து திரிந்தார். இந்தத் துயர்களை நீக்க ஒரு வழியில்லையா என்று மிகவும் ஆழ்ந்த கருத்துடன் இறைவனை நாடினர்.

சுத்தோதன மன்னரின் விருப்பம் முற்றும் வித்தியாசமாக இருந்தது. என் மைந்தன், வீரரில் சிறந்த ஆண் சிங்கம். இவன் என் கண்ணுள்ள காலத்திலேயே இளவரசுப்பட்டம் சூடி, வீரசிகாமணிகளான பல மைந்

தரைப் பெற்று இனிது வாழ்வான். பகைவரைவென்று பல்லாண்டு பல்லாண்டு சந்தான பரம்பரையாய் என் ராஜ்யத்தைச் சிறக்க ஆள்வான் என்ற மனோராஜ்யங் கொண்டார். ஆனால் தெய்வ சங்கல்பம் வேறாக இருந்தது; சித்தார்த்தர் பத்தொன்பது வயதானவுடன் அழகிற் சிறந்தவளும் குணத்தில் இனியவளுமான ஒரு கன்னிகையை மணந்து பத்து வருஷம் இல்லறம் நடத்தினார். அவருடைய இருபத்தொன்பதாம் வயதில் ஒரு ஆண் குழவியைக் கையில் ஏந்தும் பாக்கியம் பெற்றார்.

இதற்குள், வயது ஏற ஏற இவ்வுலகின் மறினர் அடையும் பலவிதத் துயர்களையும் பற்றிய விசாரம் பூரணமாய் அவர் உள்ளத்தைக் கவர்ந்தது. அதற்கிசையத் தேவதூதன் ஒருவன் சொப்பனத்தில் அவர் முன் தோன்றி, மனிதனுக்கு வரும் மூப்பு, பிணி, சாவு ஆகிய பெருந் துன்பங்களைக் காட்டினான். பின்பு "அப்பா! உன் விருப்பம் என்ன? சிங்காசனம் ஏறி, இனிது காலம் போக்கவேண்டுமா, அல்லது நீ நாடு துறந்து காடு ஏகி, பாவவழியில் பரிதவிப்போருக்குப் பேரின்பப்பதவி அடையும் வழி காட்டுவாயா?" என்று உரத்த குரலுடன் கேட்டான். இதுவரை யாது செய்யலாம் என்று திகைத்த அவருடைய மயக்கம் நீங்கி, ராஜ்யபாரம் குடும்பசாகரம் ஆகிய இருவிதப் பாரங்களையும் விட்டு விலகித் தாம் காடு சேர்ந்து முக்தி வழி தேடவேண்டுமென்று தீர்மானித்தார். தமது கருத்தை எவருக்கும் வெளியிடவில்லை.

இரவில் நேச பத்தினியும் அருந்தவப் புதல்வனும் அயர்ந்து நித்திரை செய்யும்பொழுது அவர் ரதம்

ஏறித் தென்திசை நோக்கிச் சென்றார். காடு சேர்ந் ததும் தமது நிகரற்ற ஆடை ஆபரணம் யாவையும் கழற்றி யெறிந்து ஏழைக்கோலம் பூண்டு, சாரதியை விரைந்து சென்று நடந்த காரியாதிகளைத் தன் பிதா வுக்கு அறிவிக்குமாறு அனுப்பிவிட்டார். தான் மறு படியும் தென்திசையாய்ப் பிரயாணம் செய்து ராஜ கிரியை அடுத்த மலைப்பிரதேசங்களுக்குச் சென்றார். அங்கே தவம்புரியும் ரிஷிகளிடம் சேர்ந்து அவர் விருப் பத்தின்படி கடுந்தவம் செய்தார். அவருக்கு ஐந்து சிஷ்யர்கள் இருந்தார்கள்.

தவத்தின் பயனாக அவர் சரீரபலம் குன்றி, உடல் ஒடுங்கித் தசை நார்கள் சுண்டி எலும்பு காணப்பட்டதே யன்றி மற்றொரு பலனும் இல்லை. மாய வாழ்வில் ஆசைகொண்டு சத்தியம் தவறி அலையும் பூவுலகோர்க் குக் காட்ட ஓர் ஜீவமார்க்கம் கண்டறியவில்லையே என்ற விசாரம் மேலிட்டது. உண்ணாது உடலை ஒடுக் குவதால் பயன் ஒன்றுமில்லை என்று தீர்மானித்து ஆகாரம் உட்கொண்டார். உடனே சீஷர் அவரை அவ மதித்து நீங்கிப் போய்விட்டார்கள். அவர் தன்னந் தனியாய்ப் பல இடங்களிலும் அலைந்து திரிந்தார்.

ஒருநாள் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து இருக்கும் பொழுது அவர் உள்ளத்தில் ஞானம் உதயமாயிற்று. உடனே காசிக்குப்போய்த் தமது பழைய ஐந்து சீட ரையும் கண்டு தமது புதிய கொள்கைகளை வெளியிட் டார். ஐந்து நாளாய் அவரோடு வழக்காடவே, சீடர் புதிய உபதேசத்தைப் பெற்றுக்கொண்டார்கள். கௌ தமர் புத்தரானார்.

எழுத்து வாசகம் மிக்க அபூர்வ வித்தையாயிருந்த அக்காலங்களில் புத்தர் தமது கொள்கைகளைப் பரவச் செய்வதற்காகப் பல சீடரைச் சேர்த்து வாய்மொழி யாய்ப் போதித்தார். அவர்கள் காட்டில் பர்ணசாலை களைக் கட்டிக்கொண்டு மழைகாலத்தில் உபதேசம் பெற்று, கோடைகாலம் வெளிப்பட்டுப் பிரசங்கம் செய்து வந்தார்கள்.

அவருடைய உபதேசமாவது :—

மனிதன் தன் லாபத்தைக் கருதி, அதற்காகப் பிறரை நஷ்டப்படுத்தக் காரணமாய் உள்ள துர் இச் சைகளை ஒழிக்க வேண்டும். அவ்விதம் ஒழித்தவன் சிருஷ்டிகர்த்தாவின் அருளைப் பெறுகிறான். மாம்ச அபேக்ஷை முதலிய தகாத இச்சைகளே உலகத்தின் சகலவித பாவங்களுக்கும் துயர்களுக்கும் காரணம். பிறர் நலத்தைத் தேடிப் பாடுபடுவதே தன் கெட்ட இச்சைகளைப் போக்கி இறைவனோடு சேரும் வழி என்பது அவருடைய கொள்கைகள்.

சீஷர் நாளடைவில் புத்தர் உபதேசத்தோடு பல தப்பான கொள்கைகளைக் கலந்து பிரசங்கித்தார்கள். உபதேசம் பெற்று அவர் மதத்தைத் தழுவினவர்களும் பல தப்பிதமான கொள்கைகளைச் சேர்த்துக் கொண் டார்கள். ஆதலால் பல விபரீதமான கொள்கைகளையும் நாம் புத்தமதத்தில் இன்று காணலாம்.

## 18. நீலகிரி மலைகளைப் பார்த்துவந்த வரலாறு

நீலமான மலைகள் என்று அருத்தம் கொண்ட நீலகிரி பருவதங்கள் இந்தியாவிலுள்ள மலைகளெல்லா வற்றிலும் பேரழகு வாய்ந்ததென்றும், மேடுகள் பள்ளத்தாக்குகள், மரம் அடர்ந்தகாடுகள், சிற்ருறுகள் பொருந்தியது என்றும் ஒருநாள் தாத்தா சொன்னர். அப்பா அங்கே வசிக்கும் பலவிதமான ஜனக்கூட்டங்களைக் குறித்துச் சொன்னர். அன்று இரவு நானும் ராமுவும் பலவாறு யோசித்துக்கொண் டிருந்தோம். காலையில் அப்பா காப்பிசாப்பிடும் வேளையில் நான் 'அப்பா, நான் காப்பித்தோட்டம் பார்க்கவேண்டும்' என்றேன். ராமு 'அப்பா தேயிலை செய்யும் வகை நான் பார்த்ததே இல்லை. யூக்கலிப்டஸ் மரம் எப்படி இருக்கும் என்று தெரியாது, என்று மகா பரிதாபமாய்ச் சொன்னன்.

அப்பாவுக்குச் சிரிப்பு வந்துவிட்டது. அவர் அம்மாளைக் கூப்பிட்டு "ராமு, நாம் சித்திரை மாதம் பதினைந்து தேதிக்குள் நீலகிரிக்குப் போகவேண்டும். ஒத்தையில் ஒரு பங்களா அமர்த்துகிறேன். நீயும் குழந்தைகளும் அவசியம் கூடவரவேண்டும்" என்றார். அம்மா "அங்கே வெகு குளிரல்லவா. குழந்தைகள் பேச்சுஎன்றல் தெய்வ வாக்குதான். வீட்டு வாடகை இரண்டுமாதத்திற்கும் ரூபா 500 ஆகும்."

அப்பா, "அதைத்தான் பார்த்தாய். அதனல் எவ்வளவு லாபம், தேக ஆரோக்கியம், எவ்வளவு கல்வி, எத்தனை விதமான ஜனங்களைப் பார்த்து வரலாம்?"

குறித்ததினம் ரெயில்வண்டி ஏறி மேட்டுப்பாளையம் வந்து மலைமேல்போகும் சின்ன ரெயில்வண்டி ஏறினேம். குன்னூர் போகும் வரையில் வண்டி மலையின் மேல் ஏறும் அதிசயம் பெரிது. மலையில் முதலாவது கிடைக்கும் காட்சி இடித்து உராசிச் சாய்ந்தாடும் மூங்கில் பண்ணைகளும் முரட்டுச் செடிகளுமே. பள்ளத்தாக்கில் கமுகுத் தோப்புகளும் தென்னந்தோப்புகளும் ஆயிரக் கணக்கான மரங்களை அடக்கிக்கொண்டு வண்டியில் இருக்கும் நல்லோர் கண்ணுக்குக் கீரைத்தோட்டங்கள் மாதிரி காணப்படுகின்றன.

வண்டிப்பாதை வெகு நிதானமாக மேடுகளைச் சுற்றி வளைந்து வளைந்து போவதுடன் துடுக்காய் வழியில் நிற்கும் பாறைகளைத் துளைத்துக்கொண்டும் செல்லுகிறது. ஆறுகள் பள்ளத்தாக்குகளைக் கடக்கப் பல மான பாலங்கள் கட்டப்பட்டிருக்கிறது. அவைகளைப் பார்க்கப் பயமாய் இருக்கும்.

மலைமேல் ஆடர்லி என்ற ஸ்டேஷன் வந்தவுடனே காப்பித்தோட்டம், தேயிலைத் தோட்டங்களைக் காண்கிறேம். வாழை பலாமரங்கள் காய் கனி சுமையைத் தாங்கமாட்டாது நிற்கின்றன. மொட்டைத்தலையன் கிராப் செய்துகொள்ளும் மாதிரி, மொட்டை மேடுகள் மேல்குட்டையான தேயிலைச் செடிகள் நிற்கின்றன. ஆகாயம் ஜில் என்று குளிர்ந்திருக்கிறது. ஹில்குரோவ் என்ற இடம் சேர்ந்தவுடன் காப்பிக்குடிகாரர் ஹோட்டலைத்தேடி நடக்கிறார்கள். செவ்வாழை பலாக்கனிகளும் ஜாதிக்காய் பழமும் விற்கின்றன. சிற்ருறு ஒன்று சங்கோசம் சிறிதுமின்றிக் கூச்சலிடுகிறது. பாதையின்

இருபக்கங்களிலும் தடித்து வளர்ந்து கிளைகளை நீட்டி நிமிர்ந்து நிற்கும் மரங்கள் தொகைக்கடங்கா.

இதற்குமேல் போகப்போக உள்ளம் பூரிக்கிறது. வாழைப்பூமாதிரி உருவமைந்த குளிர்நாட்டு மரங்கள் வரிசை வரிசையாய் நின்று பாதையை அலங்கரிக்கின்றன. இவற்றிற்கு பர், பைன் என்று ஆங்கில பெயர்கள் தான் உண்டு. இவை குளிர்நாட்டுக் குடிகள். வண்டி குன்னூர் ஸ்டேஷனில் அதிகநேரம் நின்றது. நாங்கள் பார்த்த பலவிநோதங்களில் ஒன்று வீடுகள் மிட்டாய் கடை மாதிரி மலைச்சரிவுகளில் ஒன்றின்மேல் ஒன்றாய்ப் பல தட்டுக்களில் இருப்பதுபோல் தோன்றுகின்றன. கோயில்கள் கடைகள் வீதிகள் முதலியயாவையும் ஸ்டேஷனில் இருந்தே பார்க்கலாம்.

சற்று தூரத்தில் உள்ள ஜிம்ஸ் பார்க் என்ற சுந்தரப் பூந்தோட்டத்தையும், நாய்க்கடிபட்டவர்களின் ஆஸ்பத்திரியையும், மற்றும் அழகிய கோயில்கள் மலர் சூழ்ந்த வீடுகள் காய்கறித் தோட்டங்கள் எல்லாம் பார்க்க விரும்பினோம். ஒத்தையிலும் இம்மாதிரித் தோட்டங்கள் உண்டு என்று அப்பா சொல்லிவிட்டார்.

இங்கே யுக்கலிப்டஸ் மரங்களின் பெருமை பெரிது. அண்ணா சந்தைக் கடைகள் பார்த்துவந்து எங்களுக்குச் சொன்னான். மார்க்கட் வாசலில் பதார்த்தங்களின் விலைகள் எழுதிப் போட்டு இருக்கிறது என்றான்.

குன்னூர் தாண்டினவுடனே குளிர் காற்றுப் பொறுக்க முடியவில்லை. பாட்டி உள்பட எல்லாரும் கம்பளிச் சட்டைகளைப் போட்டுக்கொண்டோம்.

மலைகள் உயர்ந்த உருண்டை மேடுகளாய், மர மில்லாமல் பசும்புல் மூடியிருக்கின்றன. பள்ளத்தாக்கு களும் அதோகதிப் பள்ளங்களாயிராமல் தானியங்கள் விளையக்கூடிய தாழ்ந்த சமநிலங்களாய்ப் பயன்படுகின் றன. பல கிராமங்களை வண்டியில் இருந்தபடியே காணலாம்.

அரவங்காடு ஸ்டேஷனை அடுத்துப் பல மேன்மை யான கட்டடங்கள் வரிசை வரிசையாய் இருக்கின்றன. படீர் படீர், லொட்டு லொட்டு என்ற கூச்சல் இடை விடாது கேட்டுக்கொண்டே இருக்கிறது. பாட்டியார் அதைக் கவனித்து, இதுவரை போர்வை இழுத்து மூடிக்கொண்டு மூலையில் இருந்தவள், 'அப்பா ஸ்ரீநி வாசா, இதென்ன ஒரு ஆச்சரியமான கிராமம்; எத்தனை சிம்னி குப்குப் என்று புகைவிட்டுக்கொண்டு நிற்கின் றன' என்றாள்.

'அம்மா, அது கார்டைட் பாக்டரி' என்றார் அப்பா. பாட்டி, 'சரி கார்டைட் பாக்டரி என்றால் எனக்கு என்ன தெரிகிறது? விவரமாய்ச் சொல்லு. நாம் அதைப் போய்ப் பார்க்கக் கூடாதோ'? என்றாள்.

அப்பா, கூடாது உள்ளேபோக உத்தாவே கிடை யாது. ராஜாங்கத்தாருக்கு வேண்டிய வெடிமருந்து ரவை குண்டு இங்கே செய்கிறார்கள், என்றார்.

வண்டி உவெல்லிங்டன் என்ற இடம் வரும்போது பள்ளத்தில் ஒரு சந்தையையும் மேடுகளில் ஐரோப்பிய சேனை வசிக்கும் இன்பமான வீடுகளையும் காணலாம். கேத்தை என்ற இடத்தில் ஜெர்மானிய மிஷனெரி மார் கட்டிய நல்ல வீடுகள் பாடசாலைகள் காணப்படு

கின்றன. இன்றும் அங்கே பல கிறிஸ்தவர் குடியிருக்கிறார்கள்.

இவ்விடங்களில் உருளைக்கிழங்கு, டார்னீப், சிவப்பு முள்ளங்கி, நூக்கோல் கார்ளிப்பூ முதலிய பலவிதக் கிழங்கு வகைகளும் சமையலுக்கு உதவும் செடிகளும் வரிசை வரிசைகளாக அழகாக நடப்பட்டுப் பயிராக்கப் படுகின்றன. நிமிஷந்தோறும் புதிய காட்சிகளைக்கண்டு களிகூறுகிறோம்.

லவ்டேல் பர்ன் ஹில் என்ற இடங்களில் ஐரோப்பிய இந்திய சிறுவர் சிறுமியருக்கு ஏற்பட்ட நல்ல பாடசாலைகள் இருக்கின்றன.

ஒத்தை கடல் மட்டத்துக்குமேல் 7600 அடி உயரத்தில் இருப்பதால், கொடிய வெயில்காலம் என்றாலும் குளிர் தாங்கமுடியவில்லை. இரவு எப்படிப் போக்கலாம்? தடித்த கம்பளங்கள் நமக்குண்டு, பயமில்லை. சிறு தூறலும் அடிக்கடி தலைகாட்டுகிறது. நல்ல வீடுகள் ஒவ்வொன்றைச் சுற்றிலும் மனதைக் கவரும் பல வருண மலர்களும் நின்று மங்களவசனம் கூறுகின்றன. அவற்றை அடுத்து அருமையான செடிவர்க்கத் தோட்டம் சமையல் காரியத்திற்காகச் சிறக்க அமைந்துள.

ஒத்தைமா நகர் பூமகளும் நாமகளும் கைகோர்த்து உலாவும் புண்ணிய பூமி. இன்னொருநாள் அதைக் குறித்துப் பேசுவோம்.

## 19. நாவுக்கும் சரீர உறுப்புக்களுக்கும் நடந்த விவாதம்

ஒருநாள் பகல் இரண்டு மணிக்கு நான் அயர்ந்து படுத்திருக்கையில் என் உடலில் அமைந்துள்ள பல உறுப்புக்களும் நாவோடு சண்டையிட ஆரம்பித்தன. நான் நித்திரையாய் இருந்தேனே, விழித்திருந்தேனே அறியேன். அவைகளுக்குள் நடந்த சம்பாஷணையைக் கேளுங்கள் :

முதலாவது முணு முணு முணு என்று விவரம் கெட்ட ஒரு மெல்லிய தொனி கேட்டது. இவ்வளவு முறுமுறுத்துப் பேசுகிறது யார் என்று உற்றுக் கேட்டேன். பின்வரும் சம்பாஷணை ஒருவாறு காதுக்கு எட்டியது.

"நான் என்ன செய்தேன்? உங்களுக்காகவே பாடு படுகிறேன்."

"இது என்ன பொய்!"

"ரூபகாரப்படுத்து."

"என்ன ரூபகாரம் காண்! கைப் புண்ணுக்குக் கண்ணுடியா? நான் சம்பாதித்து வரும் நெய் பருப்புப் பழம் அரிசி எல்லாம் வேலையை முடிக்கிறதில்லையா?"

"யாருக்காக?"

"சரி சரி, எனக்காகவா?"

"சந்தேகமா?"

"நல்ல தொல்லை. நாவே, நீ கொடுக்கிற கஷ்டம் என்னுல் தாங்க முடியாது. எத்தனை பாடுபட்டாலும்

இன்னும், இன்னும் என்கிறாய். எனக்குச் சலிப்பாய் இருக்கிறது. இனி உன்னைச் சேவிக்க மாட்டேன். இது திண்ணம்"

"தங்கள் சித்தம் என் பாக்கியம். நமஸ்காரம்."

"உன் குற்றம் நீ உணருவதே இல்லை."

"ஹா, வாதுக்கு இன்னொரு பேர்வழியா?"

"உன்னால் நான் படும் கஸ்தி மிகுதி. நினையாத நேரம் பக்ஷணம் கொண்டுவா, சோடா கொண்டுவா, பழம் எங்கே? என்கிறாய். இது வேண்டாம், அது வேண்டும். ஹா, என்ன மணியம்! கால் வலிக்கிறது என்றாலும் கேளாய்......"

"சரிதான். அப்பா, இனிமேல் கவனிக்கிறேன். இவ்வளவுதானா? இன்னும் உண்டா?"

"நான் சொல்லவேண்டிய சிற்றுரை உண்டு."

"அது யார்?"

"நான்தான் கண். என் குரல் தெரியாதா?"

"ஐயா, பேசுங்கள்."

"நான் உனக்காக எவ்வளவு கவனமாய்ப் பார்த்துப் பொருள் தேடி வந்தாலும், இது சொத்தை, அது சொள்ளை என்று குற்றங் கூறுகிறாய். இனி உனக்காகப் பாடுபடமாட்டேன். இது திண்ணம்."

"அப்படியே."

இச் சமயம் ஒரு முரட்டுச் சத்தம் கேட்டது.

"எனக்காகப் பாடுபடுவதாய் நீ பலதடவை கூற நான் கேட்டிருக்கிறேன். 'பாழும் வயிறு' என்று நேற்றுக்கூட சொன்னாய். இது தவறு..."

"மெய், கால், கை, கண் முதலிய சகலருடைய அபிப்பிராயத்தை நான் வெளியிட்டதன்றி வேறல்ல. நீயாவது என் கட்சியில் சேர்வாய் என்று நம்பி யிருந்தேன். ருசியான பதார்த்தம் கிடைத்தால் போடு போடு என்று கேட்டவண்ணமாய் இருக்கிறாய்..."

"ஒருவர் பேசும்போது இடையில் பேசுவது அழகாமோ. மிகுதியான உணவுகொண்டு என்னை வருத்துவது நீயல்லவா? நான் உன்னால் அடையும் பாடு நீ அறிவாயோ?"

"இதுவும் ஒரு காலம். பல் பேசாதிருக்கிறாய். உன் குறை என்ன?"

"என் குறை! கேட்கவேண்டுமா! கட்டியானாலும் கல்லானாலும் கடித்து உடைத்து மின்சார யந்திரம் மாதிரி அரைத்துக் கொடுக்கிறது யான். அவை முழுவதும் அபகரிக்கிறது நீ. செக்கடி மாடுபோல் பாடு படுகிற எனக்குப் பலன் கிடையாது?"

"நாளை முதல் அப்படி வேண்டாம். பலன் யாவும் உனக்கே."

இச் சமயம் தெளிவாய் உச்சரித்த மெல்லிய ஓசை ஒன்று கேட்டது. பேசின யாவரும் அடங்கி விட்டார்கள்.

"ஹே நாவு, உனக்கு ஒரு வார்த்தை, உன்னால் எனக்கு எவ்வளவு கெட்ட பெயர் தெரியுமா? பதட்டமாய் அன்பில்லா மொழி பல சொல்லிக் கூச்சல் இடுகிறாய். எதிரில் இருப்பவன் செவிடன் என்பது உன் எண்ணம்போலும். பார்த்தவர் இவனுக்கு மூளையிருக்-

கிறதா என்கிருர்கள். என் கௌர்வம் போய்விடு கிறது.''

“இதெல்லாம் என் கஷ்டகாலத்தின் பயன். மூளை ஆட்டி வைக்க ஆடும் பாம்பு நான். அவர் இட்டதே சட்டமாய் அசைந்து நடக்கும் எனக்கு இத்தனை பேச்சா! போதும் உலக வாழ்வு. நாளைமுதல் உண்ணு விரதம் உறங்கா விரதம் பூண்டு, காற்றையன்றி வேறு யாதும் தொடாது ஒழித்துப் பகீரத சக்கரவர்த்தியின் பெருஞ் செயலைப் பின்பற்றி ஒழுகுவேன்'' என்று சொல்லிப் பொங்கி ஒழுகும் கண்ணீரைத் துடைக்க ஒரு கைத்துண்டும் காணுத அம்மணனுய் நிலை கலங்கி நின்றது.

அப்புறம் பேசியவர் குரல் கேட்டேன். ஆள் இன்னுனென்று அறியவில்லை. சகல அவயவங்களும் கொல்லென்று நகைத்தன. அங்கே தீர்ப்பான வரலாறு சொல்லுகிறேன்.

“நாவு நமது உத்தம ஊழியன். சிறியவனுனபோதி லும் கண்டிப்பான தாக்ஷண்யமற்ற பற்கள் நடுவில் உலாவி விவேகத்துடன் நிதானமாய்க் காரியத்தை முடிக் கும் புத்திசாலி. வன்கண்ணரும் புன்தொழில்காரரும் கூட நாவின் நல் நடக்கையால் நமக்குத் தயை பாராட்டு கிருர்கள்.

நாவு இல்லாமல் கடவுளைப் புகழ்வது எவ்விதம்! மேலும் நாவு கல்யாணச் சோபனம் பாடுகிறது. நீதி மார்க்கம் தவறினவரைத் திருத்துகிறது. பெரியாரைப் போற்றுகிறது. இன்னும் நாவு பல புகழுக்கிடமான

வேலைக்காரன். இரத்தக் குழாய்களே, நாவுக்கு வேண்டிய இரத்தம் விரைந்து கொடுங்கள்..." என்று சொல்லும்பொழுதே வேதவல்லி வந்து அண்ணு அண்ணு என்று கூவி எழுப்பிவிட்டாள்.

## 20. கோலார் — பொற்கேணிகள்

பொன் உலகில் சிறந்த லோகங்களில் ஒன்று. சாமான்ய உஷ்ணத்திணுலும், பிராணவாயுவின் கூட்டுறவாலும் தன்னைக் கறைப்படுத்திக் கொள்ளாது எப்போதும் பிரகாசிக்கும் குணத்தால் உயர்ந்த மதிப்புப் பெற்றது. பலதரத்தாரான மனுமக்களும் அதை நாடித் தேடித் திரிகிருர். அது ஒருசமயம் பூமியில் 7000 அடிக்குக் கீழ் ஒளிந்து கிடந்தாலும் பூமியைக் குடைந்துபோய் அதைக் கொள்ளை கொள்ளும் வாஞ்சை மனிததன்மையில் அமைந்துளது. அமெரிக்கா, ஆஸ்திரேலியா கண்டங்களிலும் ஆசியாவின் சிபேரியாவிலும் இந்தியாவில் சில இடங்களிலும் பொன் விசேஷமாய்க் கிடைக்கிறது. தென் இந்தியாவில் மைசூர் ராஜ்யத்தைச் சேர்ந்த கோலாரில் பொன் சுரங்கங்களிலிருந்து வெளிப்படும் வரலாறு காணலாம்.

மைசூர் தென்பாகம் மேடும் பள்ளமும், கல்லும் காடும், சிறு குன்றுகளும் நிறைந்து, கடல் மட்டத்துக்கு மேல் சுமார் மூவாயிரம் அடி உயரமான குளிர்ந்த பூமி. கோலார் ஜில்லாவில் தரைக்குத் தங்கையாய் இருக்கும் படர்புல்லன்றிக் குத்துச் செடிகள்கூட இல்லை. உழவன் கலப்பை அதைத்தொட விரும்பாது. ஜோலார்

பேட்டையிலிருந்து பெங்களூருக்குப் போகும்வழியில் பௌரிங்பேட்டை ஜங்ஷனில் வண்டிமாறி, பொன் கேணிகளை நாடிச் செல்லுகிறோம். உரிக்கம் என்ற ஊரில் முதலாவது கேணிகளைக் காண்கிறோம். நாம் எதிர் நோக்கியபடி மேடுபள்ளங்கள் காணோம். எல்லாம் விநோதம். வெண்ணிறமான மண் குவியல்கள் செய் குன்றங்கள்போல் திசைக்குத் திசை காண்கிறோம். இது பொன் எடுத்த மண்!

குளிர் காற்று ஜில் என்று வீசுகிறது. நாகரீக மான கடைகளும், அமளி செய்யும் யந்திரசாலைகளும் எளியவர்களின் சிறு குடிசைகளும் கலந்து நிற்கும் இப்பூமி நமக்கு ஒரு புதிய உலகம்தான். பொன்கேணி சம்பந்தமான உழைப்பாளிகளே இங்கே வசிக்கிறார். இந்திய கூலியாள் பெரும்பாலும் வாசிப்பறியாதவன். அவன் கூலி உயிரைக் கையில் வைத்துக்கொண்டு பாதா ளத்தில் இறங்கினாலும் தினம் ஒன்றுக்கு 8 அணாவே. கந்தல் கோலமாய் வெளியே திரிகிறான்.

ஐரோப்பிய வேலையாட்களில் இத்தாலியர் சிலர் சுரங்க வேலையில் நிபுணர்கள். சிலர் சிற்பி சாஸ்திரத் தில் தேர்ந்த நிபுணர்கள். மற்றவர்களும் கைத்தொழில் களில் தேர்ந்த நுண்ணறிவாளர். இவ்விருதிறத்தாருக் கும் இடைவகுப்பினராகக் குமஸ்தா வேலையில் அமைந் துள்ள இந்தியரை மதிக்கலாம். இவர்கள் சொற்ப மாதாந்தரச் சம்பளம் பெற்றுச் சிறிய வீடுகளில் வாசம் செய்கிறார்கள்.

நாம் கண்ட முதல் வகுப்பாரின் நிலைமை பரிதபிக் கத் தகுந்தது. ஏனென்றால் சாராயக் கடைக்காரனும்,

கடும் வட்டிக்குப் பணம் கொடுக்கும் தொழில் தீரனை சௌக்காரும் அவர்களின் அரும்பாட்டுப் பங்காளிகளாய் அருகில் குடியிருக்கிறார்கள். அவர்களுக்குக் குடிக்கும் ஜலம்கூட அரும்பொருள்.

ஐரோப்பியர் சுகமான வீடுகளில் வசித்து ஆனந்தமாய் ஜீவிக்கிறார்கள். இரவிலும் அவர் வாசஸ்தானம் இந்திரப்பிரஸ்தமாய்த் தீபங்களால் பொலிவுற்று விளங்குகிறது. அவர்கள் கச்சேரிகளும் நடனக் களிப்பும் சாட்சி பகர்கின்றன. மாதச் சம்பளம் பெறுவதன்றிப் போஜன பதார்த்தங்கள், விறகு, வேலையாட்கள் முதலிய படி எல்லாம் கிடைக்கிறது. அவர்கள் வீடு ஒவ்வொன்றும் ஒரு அரண்மனை. நிழல் மரங்களும் புஷ்ப ஜாதிகளும் அவற்றைச்சூழ்ந்து நின்று வீட்டில் துக்கம் கவலை நுழையாமல் காவல் காக்கின்றன. விருந்து, விழா, சினிமாவுக்குக் குறை என்ன? கண்ணெட்டும் தூரம் வரையில் குப் குப்பென்று புகை வெளியிட்டு நிற்கும் பல யந்திரங்களின் ஆரவாரம் பெரிது.

கேணிக்குள் போகவேண்டிய வேலையாட்களை ஏற்றி இறக்கிவிட மின்சாரசகாயம்பெற்ற யந்திரங்கள் இயங்கி, சதா கூச்சலிடும் வீடு ஒன்றுக்குள் போகலாம். சுமார் ஆறடிச் சதுரமான பள்ளமும் அதற்குள் இறங்குவதும் ஏறுவதுமாயிருக்கிற சிறந்த பெட்டி ஒன்றும் அங்கே காணலாம். அதில் 8 மனிதர் நிற்க, பிரமாண்டமான சக்கரம் ஒன்று சுழன்று பெட்டியைத் தூக்கும் கயிற்றைக் கேணிக்குள் இறக்கி விடுகிறது. சற்று நேரத்தில் மனிதர் மறைந்துவிடுகிறார்கள். எட்டுமணி நேரம் உள்ளேயிருந்து வேலைசெய்து பின்பு வெளியே வருவார்கள்.

இன்னொரு வீட்டுக்குள் போகலாம். இங்கேயும் மின்சார யந்திரம் வேலை செய்து காற்றை அடக்கிக் கேணிக்குள் அனுப்புகிறது. அங்கே வேலையாட்கள் சுவாசிக்கமட்டுமன்று. பொன் கலந்துள்ள பாறைக ளில் துவாரமிட்டு உடைக்கவும் அது பயன்படுகிறது. கூலிக்காரர் பொன் உள்ள பாறைகளை உடைத்துப் பெரிய தோண்டிகளில் போட்டு நிரப்பினவுடன் அவை மேலே இழுக்கும் தூக்குக் கருவிகளின் வசப்பட்டு மேலேவந்து சேருகின்றன. அதை ஏந்திப் பெற்றுக் கொண்ட வண்டி ஒன்று அந்த இருப்புப்பாதையில் மின் சாரசக்தியால் ஓடி, அதை ஒரு பெரிய உரலில் கொட்டுகிறது. அங்கே எதை நொறுக்கலாம் என்று காத்து இருக்கும் பெரிய இருப்பு உலக்கைகள், 'ஒய்யார மாய் எழும்பி, ஒவிய நடனமிட்டு, நையாண்டித் தாளம் போட்டு' நல்ல மாதிரி இடித்துக் கல்லைக் கடலைமாவு மாதிரி அரைத்துவிடும். கல்லைப் பொடிசெய்து கஞ்சி யாக்கும் யந்திரங்கள் போடும் கூச்சல் மிகுதி. அந்த மாவிலிருந்து பொன்னைப் பிரித்தெடுக்க அதோடு, பாத ரசம் கலப்பார்கள். பாதரசத்தோடு பொன் சேர்ந்து கொள்ளும். அந்தக் கலப்பு உலோகத்தைப் பிரித்தெ டுத்துச் சூடாக்கி, பாதரஸம் ஆவியாகப் போகவிட்டு, மிகுந்து இருக்கும் பொன்னை எடுத்துக் கொள்வார்கள். மறுபடியும் கல்மாவில் ஒருவகைத் திராவகம் ஊற்றி, அதில் பொன் கரைந்து போவதால், திராவகத்தை வடித்து,எடுத்துக் காய்ச்சிப் பொன் அணுவளவும் நஷ்ட மாகாமல் எடுத்துக் கொள்ளுகிறார்கள்.

கேணிக்குள் வேலை இரவு பகல் ஓய்வின்றி நடந்து கொண்டே யிருக்கிறது. வேலையாட்களுக்கு நேரிடும்

ஆபத்து அநேகம். குகைகள் பொதுவாய் ஒரு மைல் இரண்டு மைல் நீளம்கூட இருக்கும். அங்கே மண்கல் விழாதிருக்கும்படி பெரிய தூண்களை நாட்டிச் சட்டங்கள் போட்டுப் பாதுகாப்பார்கள். என்றாலும் பாறைகள் இடிந்துவிழுவதாலும், பெரிய ஊற்றுகள் திறந்துகொள்வதாலும் உயிர்ச் சேதமும் பொருள் நஷ்டமும் சாதாரமாய் நேரிடுவதுண்டு.

## 21. கடவுள் வணக்கம்

கடவுள் ஒருவர் உண்டென்றும், அவர் சராசரம் அனைத்திற்கும் சிருஷ்டி கர்த்தாவென்றும், மனோவாக்குக் கெட்டாத மேலோன் என்பதும் சகல மதத்தாரும் அங்கிகரித்த விஷயம். மனிதன் அவருடைய நிகரற்ற மகிமையினிமித்தம் அவரைப் பணிந்து அளவற்ற அன்புபாராட்டிப் புகழவேண்டும். ஒவ்வொரு மதத்தினரும் தம்தம் ஆசார வழக்கத்தின்படி அவரை ஆராதிக்கிறார்கள். ஒவ்வொருவரும் தமது முறையே மிகச் சிரேஷ்டமானதென்று சாதிக்கிறார்கள்.

தனக்கு நேர்ந்தபடி விக்ரஹம் சமைத்து, அதைக் கடவுளின் தருமசொரூபமென மதித்து அதன்முன் மதுபானம் படைத்து அர்ச்சனை செய்வாரும் உளர். கடவுளிடம் பிரார்த்தனை கூறிப் புகழ்பாடுவது கஷ்டமெனக் கருதி அவற்றை நாடாக்களில் எழுதி உருளைகளில் சுற்றி உருட்டுவாரும், காற்றில் பறந்தாட விடுவாரும் பலர்.

தேவர்கள் மூவர் என்பாரும், அதுவல்ல, முத்தொழில் நடத்தும் மகாதேவன் ஒருவரே இறைவன்

என்பாரும், முப்பத்து முக்கோடி தேவர்கள் என்று சாதிப்பாரும் காண்கிறோம். உயர்குலத்தார் மேலான தேவர்களை வணங்க, இழிகுலத்தாருக்குத் தாழ்ந்த தேவாதிகள் போதுமென்பாரும் காண்பது எளிது.

பூர்வத்தில் இருந்த பேறறிவாளர் எழுதிவைத்த ஆகமவிதிகளை விட்டுத்தாம் அணுவளவும் விலகக் கூடாது என்று சாதிப்பவர் பலகோடி மாந்தர். பலர் இவ்வித நூல்களின் சகாயத்தால், வேலைசெய்ய மன மின்றி வீணே காலங்கழித்து, கடவுள் திருநாமத்தை உச்சரித்து, உழைப்போர் உணவுக்கு இச்சை வைத்து அலைகிறார்கள்.

கமலையில் பிறக்க முத்தி,
காசியில் இறக்க முத்தி
திருப்பதியில் தலைசிரைக்க முத்தி

என்பதுபோல் பல உபாயங்களால் முத்தி பெறுவதா னால் ஆத்துமசுத்தி எதற்கு? ஆத்துமவிசாரம் செய்து மும்மலங்களைப் போக்கி அமலன்பாதம் அடைவது தான் முறை என்பவர் ஒரு சார்பார்.

வேறு கட்சியார் இறைவன் எல்லா ஜீவன்களுக் கும் பிதா; சிருஷ்டி நாயகன்; அன்பின் சொரூபி. அவரை அண்டினோர் பாவம் நீங்கிப் பரிசுத்த நிலையை அடைகிறார் என்பதாய்ச் சாதிக்கிறார்கள். கல்லாலும் பொன்னாலும் செய்த விக்ரஹங்களின் உதவியின்றியே அவர்பாத தரிசனம் காணலாம் என்பது அவரது கொள்கை.

இறைவன் மாதிரி சொரூபம் செய்யவல்லார் யார்? அவர் சர்வவியாபி. ஆலயம் எதுவானாலும் அவருக்கு

இருக்க இடமாமோ? அன்பன் இருதயகமல நாயகன் அவர். அன்பர் பலர்கூடி ஆராதிக்க ஆலயம் இருப்ப தானல், அன்பர் பலரை உள்ளே விடாதிருப்பது சரி யாகுமோ. கடவுள் சொன்ன வண்ணம் செய்கிறவர். ஆசித்தவர் எவரும் அவரைத்தம் உள்ளத்தின் சிங்கா சனத்தில் ஏற்றி அரசிறை செலுத்துகிறூர்.

கடவுளை அடைந்து பயன்பெற்றவர் அவரைத் துதித்து ஏற்ருதிருப்பது கூடியதோ? அவ்விதம் அவர் புகழ் கூறுகின்ற கவிகள் திராவிட மொழியில் மிகுதி யாய் இருக்கின்றன. ஒருவர்,

பொன்னே, மணியே, சுகக்கடலே
மெய்ப்பொருளே அருளே பூரணமே
மன்னே மயிலே தியத்தேனே
வானோர் வாழ்வே உயிர்க்குயிரே - என்ருர்.

வேருெருவர்,

எண்ணுநின்ற எண்ணமெல்லாம்
எய்த அருள் செய்கின்றதனி
தண்ணுரமுதே சிற்சபையில்
தனித்த தலைமைப் பெருவாழ்வே - என்ருர்.

கடவுளை அண்டாதவன் வாணுளை வீணுளாக்குகிருன். அவரைத் துதியாதவன் காவேரிகரையில் நின்று கடுந் தாகத்தால் உயிர்விடும் பேதை யாவான்.

## 22. புத்தர் மதம் - II

கௌதமர் ஞான ஒளி பெற்றுப் புத்தரானபோது மனுஷன் கடவுளோடு சேர்ந்து பரமபதம் அடைவதற்காய் எட்டுப் பிரமாணங்களைப் போதித்தார்.

1. சத்தியத்தை அறிவது.
2. நீதியான கிரியைகள்மேல் ஆவல்.
3. சத்தியவாக்கு.
4. சத்தியம் தவருத நடக்கை.
5. சத்தியத்திற்கிடமான ஜீவியம்.
6. நற்கிரியை செய்யும் இடைவிடா முயற்சி.
7. தருமவழியில் நடக்கும் எண்ணம்.
8. நற்கருமங்களைக் குறித்த சந்தோஷம்.

ஆகிய சத்காரியங்களை யாவரும் கவனித்து நடந்தால் பாவசுபாவம் மாறலாம் என்று விசுவாசித்தார். அவர் ஐந்து வயது முதலே ஆராய்ந்து அறிந்த விஷயங்களைச் சீஷர் சிலநாட்களில் கற்றுணர்ந்து அனுஷ்டானத்தில் கொண்டுவருவது கூடியதாய் இருக்கவில்லை. அவர்களுடைய உபதேசம் எவ்வளவு அரை குறையாய் இருந்தபோதிலும் அக்காலத்து ஜனங்கள் காதுக்கு அது ஜீவாமிர்தமாய் இருந்தது.

கடவுளுக்குப் பலி செலுத்துகிறோம், படைக்கிறோம் என்று இந்து சமய ஆசாரியர் போட்ட வரி சாதாரண ஜனங்களுக்கு மகா பாரமாய் இருந்தது. அதனால் புத்தசமயம், ஜாதிபேதம் இல்லை, சாஸ்திர சடங்குகள் கடவுள் கேட்கவில்லை, பலிகள் கூடவே கூடாது என்று மிக எளிதான உபதேசம் செய்து வந்தது அவருக்கு மிகப் பிரீதியாய் இருந்தது.

கௌதமருடைய சீஷர் தொகை நாளடைவில் பெருகிற்று. அவர்களே தமது குருவுக்குப் புத்தர் என்னும் நாமகரணம் சூட்டினவர்.

பலதரத்தாரான மதத்தினரும் இந்தப் புதிய மார்க்கத்தில் வந்து சேர்ந்தார்கள். அந்த மார்க்கத்தில் கோயில்களும் விக்ரஹங்களும் இல்லை. பூஜை செய்ய ஆசாரியர்களும் பலிகள் காணிக்கைகளும் ஏற்படவில்லை. ஆடுமாடு கோழிகளைக் கொல்லுவதும் திருவிழா நடத்துவதும் நிறுத்தப்பட்டது.

அரசரும் சிலர் புத்தமதத்தைத் தழுவினார்கள். பிராமணர் புதிதாய் எழும்பிய மார்க்கத்தை ஜென்ம பகையாய்ப் பகைத்தார்.

கௌதமர் கி. மு. 482-ல் மரித்தார். அவர் நாட்டின மதம் சாகாமல் நிலைபெற்றது. சீஷருடைய குடிசைகள் உறுதியான கட்டடங்களாய் மாறின. கோவில்களும் தூபதீப ஆராதனைகளும் பழையபடி கிளம்பி எழும்பி விட்டன. விக்ரஹத்துக்குப் பதில் புத்தருடைய சிலையை ஸ்தாபித்தார்கள். கொள்கைகளும் பல தலைகீழாய் மாறிப்போய் விட்டன.

அக்காலங்களில் வட இந்தியாவில் மகத ராஜ்யமானது கல்வி செல்வம் நாகரீகமாகிய மூவகை நலமும் பெற்றுப் பெருங்கியாதியுடையதா யிருந்தது. அந் நாட்டு மன்னரில் சிறந்தவரான அசோகர் புத்தசமயத்தைத் தழுவி, அதை எங்கும் பாவச் செய்யும் கடனையும் தான் வகித்தார். புத்தாது கொள்கைப்படி நல்லெண்ணம், நல்லவார்த்தை, நற்கிரியைகள் அவரிடம் மிகுதியும் காணப்பட்டன.

மனிதனுக்கும் மிருகத்திற்கும் இடர் தவிர்க்க ஆஸ்பத்திரிகள் கட்டினுர். சத்திரம் சாவடிகள் கட்டினுர். நல்ல பாதைகள் சாலைகள் உண்டாக்கித் தாகம்தீர்க்கக் கிணறுகளும் பல வெட்டி வைத்தார். தன் ஜீவியம் இவ்வாறு இருக்க, சகல ஜனங்களும் புத்தருடைய அமிர்த விதிகளை அறிந்துகொள்ள வேண்டுமென ஆசித்து அதற்கு வேண்டிய போதகர்களையும் ஏற்படுத்தினுர். ஜீவனுக்கேதுவான இந்த நல்ல கொள்கைகளை எல்லா ஜனங்களும் அறியவேண்டுமென்று சொல்லிப் பெரும் பாறைகள்மேலும் கல்தூண்கள்மேலும் எழுதி வைத்தார். தகுந்த கல்விமான்களைத் தேர்ந்தெடுத்து திபேத்து சீனு ஜப்பான் தேசங்களில் பிரசங்கிக்க அனுப்பினுர்.

ஆதிமுதலே புத்தர் கொள்கைகள் சாதாரண ஜனங்களுக்குப் புத்திக்கெட்டாததாயினும் சுத்த இருதயமும் தருமச் செயல்களும் பலிகள் காணிக்கைகளைவிட மேலானவை என்ற வரையில் அறிந்து கொண்டார்கள். அசோக மன்னனது பாடுகளின் பலனுகப் பரிசுத்த ஜீவியம் செய்யும் மனிதர் பலர் எழும்பினுர்கள்.

புத்தமதம் ஏற்படுத்தினவர் கௌதமர். அதைப் பரவச்செய்து நிலைநாட்டினவர் அசோக மன்னன் என்று அறிகிறோம்.

# 23. கான்பூர்

இந்தியாவின் சிறந்த பாகம் வட இந்தியா. அதன் பெருமை கங்காநதி. கங்கா நதிக்கரையில் இந்தியாவின் நகர்கள் பல காணப்படுவது ஆச்சரியமல்ல. கங்கை ஆற்றின்மேல் ஏற்பட்ட அபிமானத்தால் அதன் கரைகளில் அமைந்துள்ள கல்கத்தா, காசி, கான்பூர், ஆக்ரா, டில்லி நகர்கள் ஒவ்வொன்றுமே விசேஷமான பெருமை வாய்ந்தவை. தற்கால நாகரீகமும் தொழிற்சாலைகளின் ஆர்ப்பாட்டமும் கடல் வர்த்தகச் சிறப்பும் கல்கத்தாவில் விசேஷம்தான். பம்பாய் கராய்ச்சியும் அவ்விதமே கடல் வர்த்தகமும் தரை வர்த்தகமும் இணைக்கும் பாக்கியம் பெற்றிருக்கின்றன; சம்பல் நதி கங்கையோடு கலக்கும் இடத்தில் வீற்றிருக்கும் பவுசு கான்பூருக்குக் கிடைத்தது. அதனால் இந்நகர் இந்தியாவின் பெருநகர்களில் ஒன்றாகலாம் என்ற நம்பிக்கையுடன் வளர்ந்து வருகிறது.

இன்று நாம் கான்பூர் பார்த்துவரும்படி வீதி வழி நடந்துபோனால் மகத்தான பல வீடுகளையும் நன்முயற்சி பலவற்றிற்கும் இடமான பல பொதுஸ்தலங்களையும் காணலாம். உத்தியோகக் கல்வியைத்தவிர தொழிற் கல்வியும் கொடுக்கும் பெருந்தகைப் பாடசாலைகள் பல அங்கே உள.

பகலில் உழைப்பவருக்கேற்ற இரவுப் பாடசாலைகளும், வியாபாரசங்கங்களும் கலாசாலைகளும் கண்டு களிக்கலாம்.

காலை ஆறுமணியானால் மில்கள் கா, கூ, ஊஸ், உஸ் பூம் கூம் என்று திக்குத்திக்குகளில் கூவி, வேலையாட்

களை அனுசரணையாய் அழைக்கின்றன. ஆகாயமெல்லாம் புகைக்காடு. ஒருபக்கம் நெசவு யந்திரங்கள் வேலை செய்கின்றன. தினமும் நூற்றுக்கணக்கான கஜம் துணி நெய்து மூட்டை கட்டியாகிறது.

வேறு பல மில்களில் பஞ்சு மூட்டைகளை அவிழ்த்துப் பஞ்சை சுத்தம் செய்து நூல் நூற்கும் வேலை நடைபெறுகிறது. சில மில்களில் சணலை நூற்றுக் கித்தான் நெய்கிறார்கள்.

மூக்கைப் பிடித்துக்கொண்டே தோல் பதனிடும் வேலை பார்த்துவிட்டுத் தோலினால் செய்யப்படும் நல்ல சாமான்களையும் பார்க்கலாம். 3000 ஜனங்கள் இந்த வேலை செய்கிறார்கள். இராஜாங்கத்தாருக்கு வேண்டிய சேணம், சிப்பாய்களின் பாதரக்ஷை முதலிய பொருள்கள் செய்யப்படுகின்றன.

இரும்பு உருக்கும் வேலை பார்க்க விநோதம். சர்க்கரைசெய்யும் மில் ஒன்று சோம்பலின்றி உழைக்கிறது. கம்பளி நெசவாகிறது. கூடாரவேலை செய்ய ஒரு தொழிற்சாலை. வேறு இடங்களில் உயர்தர மரச்சாமான்கள் செய்கிறார்கள். நாடாசெய்கிற மில், மூன்று மாவரைக்கும் மில்கள்: மருந்து சாமான் செய்யவும் இடம் உண்டு.

நகரில் பெரும்பாலார் மில் வேலைகளில் சம்பந்தப்பட்டவர், பெருந்தொகைகள் வைத்துக் கையாடுகிறவர்கள். ஆதலின் நிதி வீடுகள் பல அவர்களுக்கு அவசியமே. பல வியாபார சங்கங்கள் இருப்பதோடு அவற்றின் தலைவர்கள் சட்ட நிரூபண சபையிலும் அங்கமாக ஏற்பாடுகள் வைத்திருக்கிறார்கள். நாணய நோட்டுகள் கான்பூரில்தானே அச்சடிக்கப்படுகிறது.

கான்பூரின் கல்விச்சிறப்பைக் கவனிக்கலாம். உயர் தரப் பாடசாலைகள் பன்னிரண்டுவரையில் உண்டு. விவசாயம் போதிக்கும் கலாசாலை மகா விசேஷமானது. அதோடு வியாபார முறைகள் போதிக்கக் கலாசாலை ஒன்று இணையற்று விளங்குகிறது. கிறிஸ்தவர் கலாசாலை வேதசாஸ்திரக் கலாசாலை ஆகிய கல்விக்கழகங்கள் கண்டு மகிழாதவர் உண்டோ. சுதேச பெருமான்கள் ஆதரிக்கும் பலதரப் பாடசாலைகள், பிரதம கல்விச்சாலைகளின் அருமையையும் கவனிப்பது மனதுக்கு இன்பம். அங்கே புஸ்தகசாலைகள், கல்விக் கழகங்கள், வாசகசாலைகள் வேண்டிய மட்டும் காணப்படுகின்றன. இந்தி உருது பாஷைகளில் தினசரிப் பத்திரிகைகளும் வாரப் பத்திரிகைகளும் பல உலாவுகின்றன.

ரெயில்வே ஸ்டேஷன் பார்த்தாலே சந்தோஷப்பட வேண்டும். ஐந்து பெரும்பாதைகள் அங்கே சந்திக்கின்றன. சரக்குகள் வந்து இறங்குவதும் ஏற்றுவதுமான வேலை அவசரம் பெரிது. உப்பு, எண்ணெய், வித்து தானியம் இவைகள் இறக்குமதியாகின்றன. என்ன சாமான்கள் ஏற்றுமதியாகிறதென்று நாம் அறிவோம்.

நகரைவிட்டு வெளியேபோனால் கங்கைக் கால்வாய்களையும் அவற்றின் சார்பால் பொலிவுறும் புலன்களையும் கவனிக்கலாம்.

கல்வியும் கைப்பாடும் கலந்து நிற்கும் இந்நகரில் உள்ள சௌகரியங்களைக் கவனித்து இந்தியாவின் எல்லா இடங்களிலும் முன்னேற்றத்திற்கான நன்முயற்சிகள் உண்டானால் நலம்.

## 24. இன்சொல் கூறல்

சருவ சிருஷ்டி நாயகனின் அற்புதச் செயல்களில் முதன்மையானது மனுஷன். மனுஷனுடைய அங்கங்களில் விசேஷ சக்தி அமைந்த சிறு அவயவம் நாவு. நாவானது இன்சொல் கூறி முடிக்கக்கூடிய அருமையான செயல்களைக் கவனிப்பது நலம். இன்சொல்கூறி நன்மை விளைக்க எல்லாராலும் கூடும். அதற்கு வரவே ஒழியச் செலவில்லை. ஒருவிசை நாவசைந்து பேசுவதால் உண்டாகும் பலனைக் கூட்டவும் குறைக்கவும் கூடாது. அதனால் பிள்ளைகளும் பெரியோரும் எக்காலமும் இன்சொல்லே யன்றி வன்சொல் கூறாது ஒழுகுவது அவசியமென்று அறிவோம்.

அறிவுடையோர், அன்புடையோர் வார்த்தைகள் அற்புதமான கருவிகள்போல் போகும் இடமெல்லாம் வேலை முடிக்கின்றன. இவ்விதம் நற்காரியங்களை முடிக்கும் வார்த்தைகளையே இன்சொல்லாக எடுத்துக் கொள்வோம். இன்சொல் கூறின பெரியார் பலர் அருஞ்செயல்களை முடித்துப் புகழ் பெற்றிருந்த போதிலும், அவரில் சிலருடைய வரலாறுகளை மட்டும் சற்று கவனிப்போம்.

தமிழ் நாட்டில் அநேக நூற்றாண்டுகளுக்கு முன் இருந்த பெரியவர்கள் பேசின இன்சொற்கள் இன்றைக்கும் நமதுமத்தியில் உலாவுகின்றன. அப்படியே மற்றும் அறிவாளர் வெளியிட்ட இன்சொற்கள் உலகமெங்கும் அநேகர் அறிவடைய ஏதுவாயிருக்கின்றன.

முற்காலங்களில் ஸ்திரீகள் குழந்தைகள் அறிவிலும் அந்தஸ்திலும் தாழ்வானவர்களாய் மதிக்கப்

பட்டார்கள். மக்களில் சிறந்தோர் கூறிய இன்சொல் பலனுகச் சீர்திருத்தங்கள் உண்டாகி சகல ஜனங்களுக்கும் ஜெயகாலம் வந்தது.

சுமார் முந்நூறு வருஷங்களுக்குமுன் அமெரிக்காவில் ஐரோப்பியர் குடியேறின காலத்தில் நல்ல விளை நிலங்கள் இருந்தது. வேலைக்கு ஆள் கிடைப்பது அரிதாய் இருந்தது. ஆகவே ஆப்பிரிக்காவில் ஜனங்களை வேட்டையாடிப் பிடித்து அமெரிக்காவின் சந்தைகளில் விற்பதும், அமெரிக்கர் அந்த அடிமைகளை வாங்கி கொடுமையாய் நடத்தி வேலை வாங்குவதும், அடிப்பதும், வேண்டாதபோது விற்பதுமான வழக்கம் இருந்தது. அமெரிக்காவில் அக்காலம் ஸ்டோ பெருமாட்டி என்ற செஞ்சொல் வாசகி ஒருத்தி இருந்தாள். அவள் நிகிரோவர் பட்ட துயர்களைக் காட்டி ஒரு நூல் எழுதி அதைத் "தாமஸ் மாமா சிறு வீடு" என்று பெயரிட்டுப் பிரசுரம் செய்தாள். அதை வாசித்தவர்கள் அடிமை வியாபாரம் ஆகாதென்று சட்டம் உண்டாக்கினார்கள். ஆயிரக்கணக்கான நிகிரோவர் அவளுடைய சொல்லின் பயனுகச் சுயாதீனம் பெற்றுச் சுகம் பெற்றார்கள்.

எலிசபேத் பிரை என்று பெயர்கொண்ட சீமாட்டி ஒருத்தி இங்கிலாந்து தேசத்தில் இருந்தாள். அவள் காலத்தில் ஜெயில்கள் ஐரோப்பா எங்கும் பரிதாபமான நிலைமையில் இருந்தன. கைதிகள் ஒரு அறையில் அடைபட்டுக் கிடந்து, வம்புவளர்த்துக் கூக்குரலிட்டு நாள்போக்கி, முன் தெரியாத பல பாவங்களையும் புதிதாய்க் கற்றுக்கொண்டு திரும்புவார்கள். கைதிகளுக்கு வேறுவேலை கிடையாது. போதிக்கும் வேலை

யில் அமர்ந்த ஆச்சாரியர் கூட அவரண்டை போகத் துணியார். பிரை பெருமாட்டியார், உள்ளத்தின் அன்பே ஆயுதமாகவும் இன்சொல்லே நன்கொடையாக வும் கொண்டு, பெரியோர் விடை பெற்று, ஸ்திரீகள் அடைபட்டிருந்த ஜெயிலில் பிரவேசித்து அவரண்டை பேசினுள். மகா அதிசயமான மாறுதல்கள் அங்கே உண்டாயிற்று. அந்த மாதர் வாசிக்கவும் உடைதைக் கவும் துணி நெய்யவும் கற்றுக்கொண்டார்கள். சண்டை செய்யவும் கூச்சலிடவும் காலம் கிடைக்கவில்லை. பிரை பெருமாட்டியாரின் மதுர மொழியின் பயனுக உலகத் தில் உள்ள சகல ஜெயில்களுக்கும் சீர்திருத்தம் உண் டாகி, குற்றவாளிகளாய் அவற்றிற்குள் அடைபடும் ஏழைகள் நாகரீகமடைந்து நல்ல தொழில்கள் கற்றுக் கொண்டு வீட்டுக்குத் திரும்புகிறுர்கள்.

ஔவையார்,

‘தந்தைதாய்பேண்
ஆறுவது சினம்
பருவத்தே பயிர்செய்’

என்று கூறிய இன் சொல்லின் பயன் மதிப்பிடக் கூடியதோ. அவள் வார்த்தைகளில் முடிமன்னரும் கட்டுப்பட்டார்கள்.

இன்சொல்லின் பயன்காட்ட இன்னும் ஒரு திருஷ் டாந்தம் காட்டுவோம். முற்காலங்களில் இங்கிலாந்து தேசத்தில் தொழிற்சாலைகள் ஏற்பட்டபோது சிறுவர் பெண்கள்கூட அநேக மணிநேரமாய் இருட்டு வீடு களில் வருந்தி உழைக்க நேர்ந்தது. அவர்களின் துயர் களைப் பிரௌனிங் என்ற அம்மை “பாலர் அழுகை”

என்று பெயர் பூண்ட காவியம் ஒன்று எழுதி வெளி யிட்டாள். உடனே தேசத்தின் பெரியோர் அதை வாசித்து மனதுருகிப் பல மேன்மையான சட்டங்களை உண்டாக்கினார்கள். மேற்கூறிய தீமைகள் நீங்கின.

இன்சொல் கூறுவது வெகு லகுவானது. கடுஞ் சொல் கூறுவது கஷ்டம். இருவிதமான மொழிகளுக் கும் கூலி கைமேல் கிடைக்கிறது. இன்சொல்லால் கோபியும் குளிர்ந்த குணவான் ஆவான். கடுஞ்சொற் காரன் குணவானையும் தோஷியாக்கி விடுவான். பெருங் கூச்சலான சண்டையும் மாறாப்பகையும் கடுஞ்சொல் லின் பலன்.

நமக்கு ஒரு தோட்டம் இருந்தால் அதில் முள் விதை தெளிக்கமாட்டோம். அதில் சம்பா நெல்லும் சோளமும் விதைப்போம். தென்னை மா பலா வாழை கரும்பு பயிர்செய்வோம். அதுபோல் வாயின் வார்த்தை களால் சிநேகிதர்களைச் சேர்த்துச் சுகம்பெற விரும்பு வோம். வீணே சத்துருக்களைச் சேர்த்து மனநோவு சம்பாதிக்க விரும்போம்.

இன்சொல்கூறி எல்லாருக்கும் நலம் செய்வது கஷ்டமான வேலையல்ல. சிறிய சுக்கான் பெரிய கப் பலையும் திருப்பும்: சிறிய இன்சொற்கள் பெரிய துக் கத்தை நீக்கும். கொடிய துஷ்டனைச் சீர்திருத்தும். நாம் எல்லோரும் மகாபயனுக்கு ஏதுவான இன்சொல் கூறி, எதிர்ப்பட்டவர் எவருக்கும் நன்மைசெய்வோம்.

## 25. பண்டிதை ராமாபாய் - I

இந்தியாவின் மண்ணில் உதித்து அழியாப் புகழ் பெற்ற பெருமக்களில் ஒருத்தி பண்டிதை ராமாபாய் அம்மை. அவளது சரித்திரச் சுருக்கம் பலபேர் எழுதினபோதிலும் ஒவ்வொருவருமே தாம் பூரணமாய்க் கூறவில்லை என்று மயங்கினர். நாம் அவள் யாரென்று சற்று கண்டறிவோம்.

மங்களூரில் கல்வியும் நல்லொழுக்கமும் பொருந்திய பிராமண உத்தமர் அநந்த சாஸ்திரியார் என்பவர் கடந்த பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியில் இருந்தார். அவரது வித்வ மகிமையை மதித்து மைசூர் மகாராஜா 25000 ரூபாய் பரிசு அளிக்க, அநந்த சாஸ்திரிகள் சுகமாய் வாழும் நாளில் அவர் குடும்பத்தில் பலவித சம்பவங்கள் நேரிட்டன. அவர் மனையாள் அவருடைய நாற்பத்து நான்காம் வயதில் மரிக்கவே, சாஸ்திரிகள் ஒரு ஒன்பது வயதுச் சிறுமியை விவாகம் செய்து அவளுக்கு அனுதினம் கல்வி புகட்டித் தமது ஜனத்தார் பகைக்கு ஆளானர். மேலும் அவர் தீன தயாளுவானதால் விருந்தினர் நாள் தவருமல் வந்து உண்டு அவர் செல்வத்தின் பாரத்தைக் குறைத்தார்கள். அவர் இடம் பெயர்ந்து பதினறு வருஷ காலமாய் புண்ணிய க்ஷேத்திரங்களை நாடி அலேந்தார். அவருடைய பத்தினியும் குமாரனும் இரண்டு பெண் மக்களும் அவரோடு இருந்தார்கள்.

ஆதியில் அவர் பிரசங்கங்கள் நிகழ்த்தி வந்த வரும்படியில் சுகமாய் இருந்தவர்கள். பிற்காலம் சாஸ்திரியார் கண்பார்வை போய்விட்டதாலும் தேசத்தின்

கொடிய பஞ்சத்தாலும் வருந்த நேர்ந்தது. அக்காலங்களிலும் அவர் குழந்தைகளுக்குத் தவறாமல் கல்வி புகட்டி வந்தார்.

அவர் குமாரனையும் இளைய குமாரத்தி ராமாபாயையும் விட்டு, சாஸ்திரியாரும் மனைவியும் முதல் குமாரத்தியும் ஒவ்வொருவராய்ப் பரகதியடைந்தார். தனித்து விடப்பட்ட குழந்தைகள் இருவருக்கும் கைப்பொருள் இல்லாவிட்டாலும் கல்விப்பொருள் களஞ்சியமாக இருந்தது. புராணங்கள் இதிகாசங்கள் சமஸ்கிருத சுலோகங்கள் தீர அறிந்தவர்கள். என்றாலும் பல சமயங்களில் பசிதாகம் குளிரின் கொடுமை அனுபவித்துக் கொண்டே புண்ணிய ஸ்தலங்கள் தேடி யாத்திரைக்காரராய் அலைந்தார்கள். இவ்விதமாய் ஆறுவருஷம்கழிந்தது.

ராமாபாய் அம்மைக்கு வயது 22 ஆகி அவர்கள் பூரி நகரில் ஜெகநாதரைத் தொழும் கருத்துடன் போய்க் கொண்டிருக்கும்பொழுது வழியில் கல்கத்தாவில் தங்கினார்கள். அம்மையின் கல்வித்திறம் நகரெங்கும் அதிதீவிரம் பரவிச் சொல்லிக் கொள்ளப் பட்டது. மகா பண்டிதர்கள் அவளைச் சூழ்ந்து கூடினார்கள். கல்வி சங்கங்கள் பலமுறை அவள் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டாடினார்கள். அவளுக்குச் "சரஸ்வதி" என்ற பட்டம் கொடுத்தார்கள். சமாச்சாரப் பத்திரிகைகள் அவள் புகழை ஓயாத்தொனியாய்க் கூறின. பெண் கல்வியின் மேன்மையைக் குறித்துப் பல பிரசங்கங்கள் செய்தாள்.

அக் காலங்களில் முதல் தடவையாகக் கிறிஸ்தவரோடு பழகி, இவரென்ன, விக்ரஹம் வைத்துப் பூஜை

செய்யக் காணேம்: மேசை நாற்காலிதான் வணங்கு வாரோ என்று எண்ணமிட்டாள். அவர்கள் நடவடிக்கை ஒழுக்கம் யாவும் கண்டு மிகவும் ஆச்சரியப்பட்டாள்.

அக்காலங்களில் ஐரோப்பியமாது ஒருவள் சிநேக மானுள். அவள் ஸ்ரீ இயேசுக்கிறிஸ்து பெருமானைக் குறித்து அவளிடம் சொன்னுள். பிறந்த நாள்முதல் இருபத்திரண்டு வருஷகாலமாய் யாத்திரை பண்ணி அனுபோகசாலியான அம்மைக்கு இந்து மார்க்கத்தின் மேல் பற்றுதல் குறைந்தது.

அவள் சகோதரன் மரித்துப் போனுன். அவ ளுடைய 23-ம் பிராயத்தில் பிரபல்ய வக்கீல் ஒருவரை விவாகம் செய்து சிக்கீம் நாட்டுக்குப்போய்ச் சொற்ப காலம் இனிது வாழ்ந்தாள். உருவில் சிறந்த பெண் மகவு ஒன்று பெற்றெடுத்து அதற்கு மனோமாபாய் என நாமகரணம் சூட்டி மகிழ்ந்திருக்கும் நாளில், வக் கீல் மறுலோகம் சென்ருர். தனது பழைய பிரசங்க வேலையை மேற்கொண்டாள்.

மஹாராஷ்டிர நாட்டார் தம்மிடம் வந்து அவள் பிரசங்கம் செய்ய வேண்டுமென விரும்பினபடியால் பம்பாய்ராஜதானிக்குப்போய் ஊர் ஊராய்த் திரிந்து ஜன சமூக சீர்திருத்தங்கள் அத்தியந்த அவசியமென்றும், விசேஷமாய்ப் பெண்கள் கல்விகற்றுக் கண்பெற்று அவர் நிர்ப்பந்தம் நீங்கவேண்டுமென்றும் போதித்தாள். மேலும் மாதருக்குச் சர்வ சுதந்திரமும் கொடாவிட் டால் அவர்கள் செய்யக்கூடிய கடமைகளைச் சரிவர நிறைவேற்றுவது அசாத்தியம் என்று வற்புறுத்தி னுள். அவளுக்குப் பல நல்லோரும் அறிமுகமானுர்.

கள். பம்பாய் நகரில் 1883-ம் வருஷம் ஆரிய மஹிலா சமாஜம் ஏற்பட்டது. மாதர் கலி நீங்கிப் பலவித சுதந்திரங்கள் கிடைக்கலாயிற்று.

சகலவித அரும்பாடுகளோடு ஆங்கிலம் கற்று, கிறிஸ்துமத நூல் ஆராய்ச்சியும் செய்து வந்தாள். 'விதவை' என்ற பட்டம் பெற்று வீணே துயர்களை அடையும் பெண்களின் குறையைத் தவிர்க்க அவருக்குக் கல்விபுகட்ட வேண்டுமென்ற அவாக்கொண்டாள். ராஜாங்கத்தார் 1882-ம் வருஷம் மாதர் கல்வியை அபிவிர்த்தி செய்யும் முறைகளைக் கவனிக்குமாறு அனுப்பிய சங்கத்தலைவர் அவள் ஆலோசனைப் படியே டப்பரின் பெருமாட்டி நிதி ஏற்படுத்தினார்கள். அதன் சகாயத்தினால் இந்தியமாதர் பலர் வைத்தியத் தொழில் தேர்ந்து வருகிறார்கள்.

1883-ம் வருஷம் மாதர் ஒழுக்கம் என்ற நூல் மஹாராட்டிய பாஷையில் வெளியிட்டாள். அதனால் கிடைத்த பொருளோடு, சிநேகிதர் பலர் உதாரத்துவமாய்க் கொடுத்த பொருளும் சேர்த்து, இங்கிலாந்து தேசம் பார்த்துவரத் தன் குழந்தையோடு புறப்பட்டாள்.

இங்கிலாந்தில் சில அரிய குணசீலிகள் அவளுக்குச் சிநேகமானார். அவர்கள் அவளை ஆதரித்துக் கல்வி புகட்டினார்கள். அவர்களோடு கூடிக்கொண்டு அத்தேசத்தில் குடி, களவு, சூதாட்டம் முதலிய துர்ச்செயல்களால் வறிஞரானவர்களின் இருப்பிடங்களுக்குப் போய், அங்கே பரோபகாரிகள் செய்யும் அன்பின் ஊழிதைக் கண்டாள். 'ஐயோ, என் தேசத்தில் இம்மாதிரி

உழைப்பாளர் இருந்தால் நல்லது ; ஒருதாம் கெட்டுப் போன மாதர் பன்மடங்கு கெட்டலைய வேண்டியதே யன்றி அவருக்கு வேறு கதியில்லையே ; அப்படிப் பட்டவருக்காக உழைப்பேன் என்று தீர்மானித்துக் கொண்டாள்.

அவளுடைய கல்வி மகிமையால் அவளுக்குக் கலா சாலை ஒன்றில் சமஸ்கிருதம் போதிக்கும் உத்தியோகம் கிடைத்தது. அதில் வேலை செய்து, சிறிது காலம் சென்று அமெரிக்கா பார்க்கப்போனுள்.

இங்கிலாந்தில் இருக்கும்பொழுது ஆரம்பத்தில் கிறிஸ்து சமயத்திற்கு விரோதமாய் பத்திரிகைகளுக்கு எழுதினவள் கொஞ்ச காலத்திற்குப் பிறகு அம்மதத் தைத் தழுவிக்கொண்டாள்.

## 26. மண் எண்ணெய் அல்லது கெரோஸின் எண்ணெய்

பகலவன் சலியாத உழைப்பாளி. நமக்கு ஓயாமல் வெளிச்சங் கொடுக்கிருனு? கிடையாது. அந்திப் பொழுது ஆனவுடன் குடதிசையில் புகுந்து மறைந்து கொள்ளுகிருன். அப்போது கெரோஸின் எண்ணெய் பல தீபங்களின் மூலமாய் நமக்கு ஒளியைத் தரு கின்றது. பாடகக்காலி வந்தால் பத்தெட்டு ஜனம் பிழைக்கும். கெரோஸின் விளக்குகளுக்கன்றி வேறு பல காரியங்களுக்கும் உதவுகிறது. விறகாய் உப யோகப் படுவதால் சிறிதும் பெரிதுமான பலவகை

போட்டி போடும் காந்த விளக்குகள் போட உதவுகிறது. படகு ஓட்டவும் கப்பல் ஓட்டவும், மோட்டார் ஓட்டவும் உதவிபுரிகின்ற கெரோஸின் எண்ணெய் எப்படிக் கிடைக்கிறதென்று தெரிந்து கொள்ளலாம்.

ஸ்ரீ கிறிஸ்து பெருமானின் அவதார காலத்திற்கு நாலாயிரம் வருஷங்களுக்கு முன்பே கிரேக்கு தேசத்தை அடுத்த சில இடங்களில் மண் எண்ணெய்க் கிணறுகள் இருந்ததாகக் கிரேக்க சரித்திரக்காரன் கூறினபோதிலும், கடந்த நூறு வருஷங்களாகவே அதன் உபயோகம் விருத்தியாகி வருகிறது. 1830-ம் வருஷ முதல் தற்காலக் கிணறுகள் ஏற்பட்டு வருகின்றன. உப்புக்கொடுக்கும் ஜலத்திற்காக அரை மைல் ஆழமான கிணறுகள் பூமியில் துளைபோட்டு உண்டாக்கி அவற்றிலிருந்து உப்பு ஜலம் எடுத்து அதைக் காய்ச்சி உப்பு எடுக்கிறதுண்டு. அவ்விதமாய் 1830-ம் வருஷத்தில் ஒருவன் உப்புநீருக்காய் கிணறு வெட்ட, அதிலிருந்து எண்ணெய் தண்ணீர் கலந்து சில சமயம் வருவதுபோலன்றி, சுத்தமான எண்ணெய் பொங்கி வந்தது. சற்றுநேரம் நிறுத்தி நிறுத்திப் பிரவாகமாய் வெளிப்பட்டது. சிலகாலம் தினமும் 150 டன் எண்ணெய் அதில் கிடைத்தது. மறுபடி முப்பது வருஷ காலமாய் நாள்தோறும் பல பீப்பாய் நிறைய எண்ணெய் எடுத்தார்கள்.

கி. பி. 1850 வரையில் நிலக்கரியில் எண்ணெய் எடுத்து மேல்நாட்டார் விளக்கு எரித்து வந்தார்கள். அதற்குப் பின் கெரோஸின் எண்ணெயின் மேலான தன்மையைக்கண்டு பல இடங்களில் கெரோஸின் கிணறு யந்திரங்கள் வேலை செய்கின்றன. மின்சார விளக்கோடு

121919 1009

றுகள் எடுக்கத் தலைப்பட்டார்கள். ருஷியாவிலும் வட அமெரிக்காவிலும் விசேஷமான கிணறுகள் ஏற்பட்டன. கி. பி. 1875ம் வருஷமுதல் சிறிய யந்திரங்கள் மண் எண்ணெய் சகாயத்தால் இயங்கி வேலை செய்யத் தலைப்பட்டன. நாளடைவில் அவை மிகுதியும் அபிவிருத்தியடைந்து மின்சார யந்திரங்களுக்கு வலக்கையாயிருக்கின்றன.

கெரோஸின் கிணறுபார்க்க நமக்கு அதிகப்பிரியம். உலகத்தில் அநேக தேசங்களில் அதைக் காணலாம். பர்மா, பாரஸீகம், பென்சில்வானியா முதலிய பல இடங்களில் கிணறுகள் ஏராளமாய் இருக்கின்றன. படங்களில் எண்ணெய் இறைக்கச் செய்திருக்கும் கட்டுமானத்தின் மேற்கோப்புக் காணலாம்.

பூமியில் அரைமைல் ஆழமான துவாரம் இறக்கி அதில் குழாய் பதித்து விடுகிறார்கள். அவ்வளவு ஆழம் போனவுடன் எண்ணெய் மணலுடன் கலந்து வெகு வேகமாய்ப் பாய்வதுண்டு. அல்லது எண்ணெயை உறிஞ்சு வெளிப்படுத்தும் கருவிகளாகிய பம்புகளைக் கொண்டு இறைப்பார்கள். அல்லது வெடித்து மணலை வெளிப்படுத்தி, தரையை மெதுவாக்கிச் சுலபமாய் எண்ணெய்வாரதை உண்டாக்குவார்கள். என்ன செய்தாலும் கிணற்றுவேலையில் என்ன நேரிடுமென்று சொல்ல யாராலும் ஆகாது. ருஷியாவில் பாக்கு என்னும் இடத்தில் ஒரு கிணற்றில் எண்ணெய் பொங்கிப் பாய்ந்தவேகத்தில் கிணறு சம்பந்தமாய் ஏற்பட்ட சாரங்கள் கட்டுமானங்களெல்லாம் பறந்து விட்டன. 24-மணி நேரத்தில் ஒரு ஆள் உயரமான மணல்மேடு எழும்பி விட்டது.

எண்ணெய் பலவித வஸ்துக்கள் கலந்து வெளிப் படுவதால் பலதரமாய் இருக்கும். பலதரமான காரியங் களுக்கும் உபயோகப்படும். அதைச் சுத்தீகரிக்கவும் நாலாவித முறைகள் உண்டு.

முதலாவது எண்ணெய்த்தொட்டியில் நீராவிவிட்டு எண்ணெயை ஆவியாக்கி வேறொரு பாத்திரத்தில் எடுத் துக்குளிர வைக்கிறார்கள். அது முதல்தர எண்ணெய்.

மீந்திருக்கும் எண்ணெய் கனத்தது. அதையும் ஆவியாக்கி வெளிப்படுத்திக் குளிரச்செய்து இரண்டாம் தரத்து எண்ணெய் எடுக்கிறார்கள். மீந்ததை ஆவி யாக்கி மட்டமான எண்ணெய் எடுக்கிறார்கள்.

இன்னும் மீந்திருக்கும் பதார்த்தத்திலிருந்து பேர பின் மெழுகும் வேஸலின் என்ற அருமையான வஸ்து வும் கிடைக்கின்றன. அதிலுள்ள துர்வாசனையை நீக்கிச் செவ்வை பண்ணுகிறார்கள். இன்னும் மீந்த வஸ்து கட்டிப்பொருளாய் இருக்கிறது. அது பெரிய மரக் கலங்களில் நிலக்கரிபோல் உபயோகப்படுகிறது.

## 27. பண்டிதை ராமாபாய் - II

பண்டிதை அம்மை அமெரிக்காவில் பல சங்கங் களில் பேசிய சொற்பொழிவின் பலனாக அநேக அன் புள்ள தோழர்களைச் சம்பாதித்தாள். மேலும் "உயர்குல இந்து மாதர்" என்ற தலைப்புடன் நூல் ஒன்று எழுதி வெளியிட்டாள். அதன் மூலமாகவும் மிகப் பிரபல மான மனுஷியானாள். இந்திய அநாதை ஸ்திரீகளுக் காகத் தன்விருப்பம்போல் வீடு ஏற்படுத்தத் தேவை யான பொருள் சகாயம் பெற்றாள்.

கி. பி. 1888-ம் வருஷம் கனடா தேசம்போய் அங்கும் தன் கருத்துக்கு இசைந்த பல உத்தமர் உதவியைத் தேடிக்கொண்டாள், சங்கங்கள்கூடி அவளுக்குப் பொருள்உதவி கொடுப்பதாய் வாக்குறுதி செய்தார்கள். பின்பு கண்டத்தை ஊடுருவிக் கடந்து பஸிபிக் சமுத்திரக்கரையில் இருக்கும் பிரான்ஸிஸ்கோ நகருக்குப் போய் அங்கிருந்து கப்பல் ஏறிச் சீனுவுக்குப்போய் அங்கிருந்து பம்பாய் நகர் வந்து சேர்ந்தாள். பூச்சக்கரத்தைச் சுற்றிவந்து விட்டாள். குழந்தை மனோரமாபாயைக் கல்விகற்க இங்கிலாந்தில் விட்டுவந்தாள்.

பம்பாய் வந்தவுடன் கடற்கரை அடுத்த சொப்பாட்டி என்ற இடத்தில் ஒரு வாடகை வீடு அமர்த்தி அதில் பால்ய விதவைகளுக்காக இருப்பிடமும் பாடசாலையும் ஏற்படுத்தினுள். அப்பாடசாலைக்குச் சாரதா சதான் எனப்பெயர் கொடுத்தாள். பம்பாயிலும் பூனுவிலுமுள்ள ஆசார சீர்திருத்த சங்கத்தார் அவளுக்கு நல்வரவு கூறி மகிழ்ந்தனர். மதக்கோட்பாடுகளில் தலையிடுவதில்லையென வாக்குமொழிந்ததின் பேரில் கல்விச் சாலைக்கு மாணவர் வந்து கூடினுர். அவர்களுக்கு ஆங்கிலம் சமஸ்கிருதம் மஹாராஷ்டிரம் ஆகியமூன்று பாஷைகளும் போதித்தாள்.

சுந்தராபாய் பவர் அம்மை அவளுக்கு உதவியாக வந்து சேர்ந்தாள்.

1892-ம் வருஷம் பூனுவில் இடம் வாங்கிச் சாரதா சதான் என்ற பாடசாலை ஸ்தாபித்தாள். வீட்டைச் சுற்றிப் புஷ்பப்பாத்திகள் உண்டாக்கி, பழமும் நிழலும் உதவும் பெரிய மரங்களை நாட்டிச் சிங்காரச் சோலை ஏற்

படுத்தினாள். அது பால்ய விதவைகள், குழந்தை அமங்கிலிகள் கூடிக்குலாவித் தமது குடும்பங்களில் வீணே அனுபவித்த துயர்களை எடுத்துப் பேசும் இடமாயிற்று. ராமாபாய் அவர்களிடம் அதிகாரியைப்போல் இராமல் தாயாராக இருந்தாள். அதே வருஷத்தில் ஏழுமுதல் நாற்பதுவரை பிராயமுள்ள 40 பெண்கள் அங்கேவந்து இடம் பெற்றார்கள்.

அதிகாலையில் பண்டிதை கடவுளை ஆராதிப்பபதை யும் வேதபாராயணம் செய்வதையும் கண்ட பெண்கள் தாமும் அவளோடு சேர்ந்துகொண்டார்கள். பெற்றோ ரும் சகாயம் செய்த பெரியோரும் அவள்மேல் வெறுப் புற்று, பல பெண்களை நிறுத்திக்கொண்டதோடு பாட சாலைக்கும் இன்னல் விளைத்தார்கள். பல மாதர் திரும்ப வும் வந்து சேர்ந்து கொண்டார்கள்.

இதுகாறும் கைகொடுத்து வருகிற அமெரிக்க உப காரிகளின் சகாயம் ஒன்றையே நம்பிப் பாடசாலை நடத்துவது சரியன்று என்ற எண்ணத்துடன் கெட் கான் என்ற இடத்தில் 100 ஏக்கர் நிலம் வாங்கி அங்கே காய்கனி தானியங்கள் பயிர்செய்து மூன்று மாதத்தில் போதுமான பலன் எடுத்தாள்.

சாரதாசதானில் சேர்ந்த மாதரில் பலர் கிறிஸ்து சமயம் தழுவிக்கொண்டார்கள். அவர்கள் உபாத்தினி களாய் உழைத்து உபகாரிகளாய் ஜீவிக்கும்படி போதனை கொடுத்து அனுப்பிவிட்டாள். இந்து சிநேகிதர் அன்பு இதனால் அடியோடு நீங்கிப்போயிற்று. அவர்கள் வேறு பாடசாலை ஒன்று ஏற்படுத்தினார்கள். அது அபி விருத்தியடையவில்லை.

1897-ம் வருஷம் மத்திய இந்தியாவில் கொடும் பஞ்சம் உண்டாயிற்று. அவள் உள்ளம் நொந்து வாடினது; கையில் பணமில்லை. ஒரு நண்பர் அதை அறிந்து வேண்டிய பொருள் உதவி புரிவதாய் வாக்களித்தார். வேறொருவர் 100 ரூபாய் கொடுத்தார். வேறுபலர் பொருட்சகாயம் செய்தார். அவள் புறப்பட்டுப்போய் பஞ்சத்தில் சிறுமைப்பட்டுப் பசி பிணியால் வருந்தின 60 விதவைகளைக் கொண்டுவந்து சேர்த்தாள். அவர்கள் அசுத்தராய் உணவின்மேல் ஏக்கமுற்றவராய் இருந்தார்கள். அவரைக் கழுவி, உணவூட்டி நோய்க்குப் பரிகாரம் செய்து கல்விபுகட்டும் வேலையைத்தானே தேடிக் கொண்ட அன்னையின் பெருந்தகைக்கு நிகர் ஏதேனும் உண்டோ! அமெரிக்காவில் தனக்கிருந்த குணநிதிகளான தோழருக்கு எழுதி வேண்டிய திரவியம் பெற்றுக்கொண்டாள். பஞ்சம் அதிகரித்தது. மறுபடி போய் 300 விதவைகளைக் கொண்டுவரப் புறப்பட்டாள். பம்பாயில் பிளேக்நோய் ஆரம்பிக்கவே திரும்பிவிட நேர்ந்தது.

மேலும் மேலும் விதவை அநாதைகள் வந்து சேர்ந்ததால் பாடசாலையும் இருப்பிடமும் விஸ்தாரமாய்க் கட்டினாள். பஞ்சகாலம் இந்தவேலை நடந்தது வேலையாட்களுக்கு ஒரு பேருபகாரமாயிற்று. தினம் ஒன்பது மணிநேரம் செய்யவேண்டியதிருக்க, ஒரு மணிநேர வேலையை நிறுத்தி வேலையாட்களுக்குச் சன்மார்க்கபோதனை புகட்டினாள். அவர்களுடைய புதிய வீட்டுக்கு முக்திசதான் என்ற பெயர் கொடுத்தாள். அங்கே நடந்த வேலையின் மகிமை பெரிது, பசுக்களை வாங்கி, வெண்ணெய் எடுக்கும் யந்திரம் தருவித்து

இரண்டு பாடசாலைகளுக்கும் போதுமான வெண்ணெய் தயாரித்து வந்தாள். செக்கு வாங்கி எண்ணெய் ஆட்டினார்கள். நெசவுத்தறிகள் வைத்துத் துணி நெய்தார்கள். காய்கறித் தோட்டங்களைச் சொல்லவும் வேண்டுமா?

துன்மார்க்க ஜீவியத்தில் இறங்கி அலசடிப்பட்ட பெண்களுக்காக ஒரு வீடுகட்டிப் புகலிடம் ஏற்படுத்தினாள். 1900 வருஷம் மத்திய மாகாணம், குஜராத், ராஜபுதனம் என்ற இடங்களில் ஒரு கொடிய பஞ்சம் உண்டானது. அவ்விடங்களுக்குப் போகச் செலவுக்காக 272 ரூபாயும் மனதிற்குகந்த பல சிஷப்பிள்ளைகளும் கிடைத்தார்கள். 300 பெண்கள் பலவிதப் பிணித் துயருடன் கொண்டுவரப் பட்டார்கள். அக்கூட்டத்தில் சில சிறுபையன்களும் ரக்ஷிக்கப்பட்டார்கள். அவர்கள் வளர்ந்து விவசாயவேலை, தச்சுவேலை, கொல்லத்துவேலை, அச்சுக்கூட வேலை முதலான தொழில்களைக் கற்று அருமையான உதவிக்காரரானார். ஒவ்வொருவருக்கும் இரண்டுமூன்றுவித வேலைகள் பாடமாயிருந்தது.

குருட்டுப் பிள்ளைகளுக்குப் பாடசாலை; மருத்துவ வேலையில் 30 ஸ்திரீகள் பழகினார்கள். உபாத்திமைத் தொழில் போதிக்கப் பாடசாலை; எண்ணும் எழுத்தும் போதிக்கப் பாடசாலை!

ஒரு தருணத்தில் அங்கே 2000 பெண்கள்வரை இருந்தார்கள். அவர்களுக்குத் தினம் மூன்று வேளை பிசகாமல் உணவளித்து, உடை கொடுத்து, கலைகள் புகட்டி, பண்டிகை தவறாமல் கொண்டாட்டங்கள் நடத்திப் பராமரித்த அன்னைக்குச் சரஸ்வதி என்றபட்டம் போதுமா!

அவள் எழுதிய நூல்களின் தன்மை, தெய்வபக்தி யின் சிறப்பு எடுத்துக் கூறல் அரிது. கிறிஸ்தவர்களின் வேதாகமத்தை அது எழுதப்பட்டுள்ள எபிரேயு கிரேக்கு என்னும் மூலபாஷைகளிலிருந்து மொழி பெயர்த்து வேறுபாஷைகளில் எழுதப் பொதுவாய் நாலு ஐந்து பண்டிதர் கூடிச் செய்வார்கள். இவளோ தனது கணக்கற்ற சோலிகள் நடுவில் அவ்விரண்டு பாஷைகளும் கற்று வேதாகமத்தில் அடங்கிய 66 நூல்களையும் மராட்டிய பாஷையில் எழுதி முடித்தாள்! அவள் சங்கீதசாஸ்திரி: பல கீர்த்தனைகளும் எழுதினுள்.

அவளுடைய அருந்தவப் புதல்வி கதை கூறினுல் அதின் இன்பம் பெரிதாயினும் இடம் இன்றியே நிறுத்துகிறோம். அவள் 1921-ம் வருஷம் வரை பல விஷயங்களிலும் அரிய சோலிகள் முடித்துப் பரலோக வாசியானுள். தன் செல்வியின் பிரிவைச் சகிக்காத வளாய் அன்னை மறுவருஷமே பரலோகம் சென்றுள். அவள் ஆரம்பித்த வேலைகள் இன்னும் நடைபெறுகின் றன. பண்டிதை அம்மை தன்பூலோக ஜீவியம் முடியு மென்று முன்னமே அறிந்து தன் அரிய விஸ்வாச சிஷரை அழைத்துத் தன் மரணத்தைக்கூறி, கட்டளை பலவும் கொடுத்து, சகல காரியாதிகளையும் ஒழுங்கு பண்ணினுள்.

ஆடுமாடு முயல் பக்ஷிகள் வளர்க்கிறுர்கள். ஒவ் வொன்று பன்னிரண்டு குதிரை வன்மையுள்ள ஆறு நீராவியந்திரங்கள் அச்சிடும் வேலை செய்கின்றன. 80 பெண்கள் அவ்வேலையை நடப்பிக்கிறுர்கள். அநா தைப் பிள்ளைகளுக்காக ஆண்பாடசாலை. குழந்தைகள் வீடு ஒன்று. பாலர் ஆட்டின் மடியில் பால் உண்கிறுர்.

குருடருக்குப் பள்ளிக்கூடம். வண்ணுன் வேலே, சித்தி ரத்தையல் வேலே, நெசவுவேலே! எந்த வேலேயைப் புகழலாம்! வேலேயாட்கள் உத்தியோகஸ்தர் இருப்பிடங்கள், போஜனசாலே, 5000 பேர் உட்கார இடம் கொண்ட தேவாலயம், ஆஹா என்ன வேலேக்காரி!

தோட்டத்தில் 14 கிணறுகள்! அவற்றிற்கு அன்பு பொறுமை, சாந்தம் என்பதுபோன்ற இனிய நாமங்கள். விளேநிலங்களின் அருமைபெருமை கண்டோர் அறிவார்.

மேலும் இவரது பாடுகளின் பலனுக, இவள் மாதிரி பார்த்து ஏற்பட்ட தயாஸ்தலங்கள் இரக்ஷண்ய வீடுகள் பற்பல இடங்களில் உண்டாகி இருக்கின்றன.

## 28. லீலாவதி

### நாடக பாத்திரங்கள்

1. லீலாவதி — மகததேசத்து ராஜகுமாரி
2. புருஷோத்தமன் } மகததேசத்து ராஜகுமாரர்
3. ஜெயசீலன் }
4. மதுபாலன் — மந்திரவாதி
5. மாடப்பன் — இடையன்

மதுபாலன் சிஷ்ர்.

### முதற் களம்

இடம் - காடு: காலம் - இரவு.

[இரண்டு சகோதரர்கள் புருஷோத்தமன் ஜெயசீலனும், லீலாவதியும் வருகிருர்கள்]

லீலாவதி — அண்ணு இந்தக் காடு எவ்வளவு இருட்டாயிருக்கிறது! எனக்குப் பயமாயிருக்கிறது.

புருஷோத்தமன் — இன்று நாள்முழுவதும் பாதை தெரியாமல் அலைகிறோம்.

ஜெயசீலன் — தாய், செல்வத்தங்காய், பாதை சீக்கிரம் காண்போம் அஞ்சாதே.

லீலாவதி — தைரியமாய் இருக்கிறேன், கால்நோகிறதே.

புருஷோத்தமன் — இது என்ன காடு! செடி கொடிகள் பாதை இருக்க இடம் கொடுப்பதில்லை.

ஜெயசீலன் — புஷ்பங்கள் பகலில் சற்றுநேரம் கண்ணைத் திறக்கின்றன:

லீலாவதி — கொசுக்கூட்டங்கள் திரிவது மேகங்கள் உலாவுவதுபோல் இருக்கிறது. அண்ணா, யானைகள், வேங்கைகள் வருமோ?

புருஷோத்தமன் — அம்மை, பயப்படாதே. துப்பாக்கி வைத்திருக்கிறோம்.

லீலாவதி — திருடர்தாமும் இங்கேவர நடுங்குவார். அண்ணா பசிக்கிறது, தாகத்தால் நாவு வாளுகிறது.

ஜெயசீலன் — சற்று தூரத்தில் ஒரு செடியில் திராக்ஷைக்குலைகள் தொங்கக்கண்டேன்.

புருஷோத்தமன்—நாம் அதைப்பறித்து வருவோம் வா.

ஜெயசீலன்—தங்கையைத் தனியாய் விட்டுப்போகவா? இது கள்வர் உலாவும் காடு. பொன்னைவிட மாதரைக் களவாடும் தன்மையர் அவர்.

லீலாவதி — நான் இனிமேல் ஒரு அடியாவது நடக்கக் கூடாது. ஆயாசம் மேலிடுகிறது.

[உட்கார்ந்து கொள்கிறாள்]

புருஷோத்தமன் — தாய், இங்கே இரு. நாங்கள் உனக்குக் காய்கனிகள் கொண்டுவருவோம். வனதேவதைகள் உனக்குத் துணைநிற்பார்.

ஜெயசீலன் — நாங்கள் சீக்கிரம் வருவோம், நீ இங்கே இரு.

[சகோதரர் போய்விட]

---

## இரண்டாங் களம்

இடம் - காடு :

மதுபாலனும் சீஷரும் வருகிறார்கள்

மதுபாலன் — சீஷர்காள்.

சீஷர் — சுவாமி.

மதுபாலன் — ஊழியரே.

சீஷர் — புத்தி, புத்தி, இதோ இருக்கிறோம்.

மதுபாலன் — நாம் மகிழ்ந்து களிப்பாய் இருக்கும் காலம் இது. உலகின் குடிகள் நித்திரை செய்கிறார், பயமில்லை. நம்மைக் குடிகாரரென்று இகழ்வாரில்லை. சூரியன் தன் சிவப்புத் தலையைக்காட்டி நமது விளையாட்டைக் கெடுக்குமுன் ஆடிப்பாடலாம் வாருங்கள்.

சீஷர் — துரைகளே, புத்தி.

மதுபாலன் — வாருங்கள் வெறிக்கும் வரை குடிக்கலாம்.

சீஷன் — 1. சாமி, கரும்புதின்னக் கைக்கூலியா.

சீஷன் — 2. சாராயவாசனை வருகிறது.

மதுபாலன் — தூக்கம் மந்தர்களுக்கேற்றது. நமக்கோ விருந்து.

சீஷன் — 3. சாமி, நீரே எங்கள் குலதெய்வம். இந்த வயதில் மனுஷன் சந்தோஷமாய் இராவிட்டால் எப்போ அது வரப்போகிறது ?

சீஷன் — 4. ஐயனே, எனக்கு மார்நோவு குலேநோவு உண்டு. என்றாலும், சாமி, எவ்வளவு சாராயமானாலும் குடிப்பேன்; உங்கள் சொல் தவற மாட்டேன்.

மற்றசீஷர் — டே, நீதான் அப்படியா; ரொம்பப் பேசுகிறாய் !

மதுபாலன் — நமக்குள் சச்சரவு வேண்டாம். புசியுங்கள், குடியுங்கள், ஆடுங்கள், பாடுங்கள், சுடுமூஞ்சி கவலை நமது சங்கத்தில் வேண்டாம்.

[அவர்களெல்லாரும் மதுபானம் செய்கிறார்கள். ஆளுக்கொரு பாட்டு சொல்லி ஆடுகிறார்கள்; வேடிக்கைப் பாட்டுகளும் ஆடல்களும்]

மதுபாலன் — ஒஹோ, நிறுத்துங்கள் ஓடிப்போங்கள். சந்து பொந்துகளில் ஒளித்துக் கொள்ளுங்கள். வெளியே தலைகாட்ட வேண்டாம். உங்கள் அழகை நான் பார்ப்பதே போதும். இங்கே கற்புள்ள பெண்மயிலின் காலடி ஓசை கேட்கிறேன். நான் அவளை என் மாந்தரீக வித்தையால் மயக்கி, என் மதுபானம் கொடுத்து, என் இஷ்டம்போல் நடந்துகொள்ள வைப்பேன்.

[சீஷர் ஓடிப் பதுங்குகிறார்.]

சிநேகம் காட்டி மோசம் செய்வேன். அப்படி யல்லவா இத்தனை மேன்மக்களைக் கீழ்மக்களாக்கி னேன். நானும் இங்கே ஒளித்திருந்து இவள் யார், எப்படி இவ்விடம் வந்தாள் என்று கவனிப் பேன். என் வேஷம் மாற்றிக் கஷ்டவாளியான குடியானவன்போல் அவளிடம் பேசுவேன்.

[மதுபாலன் போய்விட, லீலாவதி வருகிறாள்.]

லீலா — ஐயோ, அண்ணன்மாரைக் காணோமே! என் செய்வேன்! கீதவோசை கேட்கிறதே! என்ன அலங்கோலத் தொனி; கூத்தாடிகள் சங்கமோ? குடியர் மகா சங்கமோ? கொலைஞர் சண்டாளர் குழுவோ! என்ன என்ன விபரீதக் கூச்சல்கள்! யாதுசெய்வேன்? பயமாயிருக்கிறதே! என் சகோ தரரை எவ்விதம் கூவி அழைக்கலாம். உன்னை விட்டு விலகுவதில்லை. உன்னைக் கைவிடுவதில்லை என்ற தீனதயாளு இருக்கிறார். இப்போது ஒரு கீதம் பாடுவேன். என் சகோதரர் அதனால் நான் இருக்குமிடம் அறிந்து வருவார்கள். வள்ளலைத் துதித்தால் வாழ்வெல்லாம் வரும். [பாடுகிறாள்.]

[இங்கே நடிப்பவர் தமக்குப் பிரியமான ஸ்தோத்திரக் கீர்த்தனை எதுவாகிலும் பாடலாம்.]

பாட்டு முடியும்போது மதுபாலன் வேஷம் மாறி வருகிறான். அவளை வணங்கி, ஹா! இது என்ன அற்புதக்கீதம்! இது கனவோ, நனவோ! மானிட ரூபந்தானா இது! இந்த சுந்தரி யாரோ! காந்தர்வ மாதோ! வன தேவதையோ! தேவலோக தீபமாய் ஜொலிக்கின்ற இவளைக் காண கண்கள் நாணுகின்

றன. இவள் உதடுகள் அருள்மாரி பொழிகின்றன. இவள் இருதயத்தில் சத்தியம் குடிகொண்டது. இளைஞயிருந்தேன், நரைத்த கிழவனுமானேன், இப்படிப்பட்ட ஒரு காட்சி நான் கண்டதில்லை. தேவி, நமஸ்கரிக்கிறேன்.

லீலாவதி — நீ யார்? தப்பிதமான அபிப்பிராயம் கொண்டாய். நான் அவ்வளவு ஸ்துதிக்குப் பாத்திரமல்ல.

மதுபாலன் — நான் இங்கே வாழும் எளிய குடித்தனக்காரன். மாதர்க்கணிகலமே, அனிச்சமலரினும் மென்மையான உமது பாதங்கள் இவ்வனத்தில் வந்த தெவ்விதம்? எப்படி இங்கே தனித்து வந்தீர்?

லீலாவதி—என் சகோதரருடன் இன்பமாய்ப் பொழுது போக்க வந்தேன்.

மதுபாலன் — மின்னல் கொடியே, உம்மை அவர் தனியே விட்டுப்போனதேன்?

லீலாவதி — இவ்வனத்தின் இருளே காரணம். வழிதப் பித் திரிந்தோம். பின்பு எனக்காகக் காய் கனி சம் பாதிக்கப் போயிருக்கிறுர்கள்.

மதுபாலன் — மாதர் திலகமே, உமது சகோதரர் எப்படிப்பட்டவர்? நான் அவர்களைத் தேடி அழைத்து வரலாமா?

லீலாவதி — அவர்கள் மன்மதனைப் பழிக்கும் கம்பீர சொரூபிகள். சத்திய விரோதிகளை மேற்கொள்ளும் திறமை வாய்ந்தோர். தமக்குத்தாமே நிகரானவர். அவரைக் கண்டால் கலி நீங்கும். அழைத்துவருவாயா?

**மதுபாலன்** — மாலே மங்கும் வேளையில் காணமல்போன என் பசுவைத் தேடும்போது அவர்களைக் கண்டேன். என் பசு வேளைக்கு இரண்டுபடி பால் கறக்கும். பிரபுக்களிடம் பேசக் கடையேனுக்கு என்ன இருக்கிறது? அதனால் அவரோடு நான் பேசவில்லை.

**லீலாவதி** — சரிதான் அவர்களைக் கண்டுபிடிப்பாயா?

**மதுபாலன்** — அதற்கென்ன சந்தேகம். தற்சமயம் ஏழையின் குடிசைக்கு வந்து சற்று இளைப்பாருங்கள். என்மனைவி மக்கள் உமக்குத் தொண்டு செய்வார். யான் பெற்றதே பாக்கியம்.

**லீலாவதி** — உன் பெயர் என்ன?

**மதுபாலன்** — என் பெயர் சொள்ளைமாடன். என் அப்பன் பெயர் புலேமாடன்.

**லீலாவதி** — சொள்ளைமாடா, இதோ வருகிறேன். நீ நல்லவன்போல் தோன்றுகிறது.

[போய் விட]

## மூன்றும் களம்

[ஜெயசீலனும் புருஷோத்தமனும் வருகிறார்கள்]

**ஜெயசீலன்** — அண்ணா! லீலாவைக் காணேமே!

**புருஷோத்தமன்** — இதுவே நாம் விட்டுப்போன இடம். இந்தக் கல்லின்மேல் படுத்திருந்தாள்.

**ஜெயசீலன்**—அவளுக்கு என்னமோசம் நேரிட்டதோ!

**புருஷோத்தமன்** — பயப்படாதே; இன்பமும் துன்பமும் இவ்வுடம் பெடுத்தவர் பங்கு. ஆபத்துக் காலத்தில் பயந்தவன் அபஜெயமடைவான்.

ஜெயசீலன் — மெய்தான். தங்கையைக் காணுமல் என் உள்ளம் பதைக்கிறது.

புருஷோத்தமன் — வனவிலங்குகள்கூட அவளை அணுகித் தீங்கு செய்யா.

ஜெயசீலன் — கள்வர் சூழ்ந்து கொண்டால் அவள் என்ன செய்வாள்? வேதாந்தம் பேசுகிறீர்.

புருஷோத்தமன் — பார், சிறிய சுக்கான் பெரிய கப்பலைத் திருப்புகிறது. சிறிய தேனீ சிறந்த மாளிகை கட்டுகிறது. லீலா சின்னப் பெண்ணுகிலும் ஞானி.

[ஒரு இடையன் வருகிறுன். இருவரும் ஒதுங்கி நிற்க]

ஜெயசீலன் — சங்கீத ஓசை! ஒரு இடையன் புல்லாங் குழல் கையில் வைத்துக்கொண்டு வருகிறுன்.

மாடப்பன் — என் காலெல்லாம் ஒஞ்சிபோவுது. இண்ணைக்கெல்லாம் அலேகிறேன். மொட்டக் கிடாயைக் காணேம். இந்தப் புல்லாங்குழல் இல்லாட்டா செத்தேபோவேன். [பாடுகிறுன்]

**மோரேசுபோக என்றமெட்டு**

பிளேக்க வகையறியாமலே நான்
கல்லேப் பிளக்கப் போனேன்
கல்லேப் பிளக்க வகையறியாமலே
கையைப் பிளந்து கொண்டேன்
மோரேசுபோக நான் உற்றுநினேத்தாலும்
முற்றும் கெடலாச்சுதே
மோரேசுபோனல் மொந்தைமொந்தைப் பணம்
மோரா விளேயுமங்கே.

புருஷோத்தமன் — இதோ மாடப்பன்! மாடப்பா! எது இங்நேரம் இங்கே? ஆட்டைத் தேடுகிறுயா?

மாடப்பன் — இல்லிங்கச்சாமி! சாமி, கும்பிடு வருது துரைகளே, உங்கதெரிசனம் எப்படி அடிமைக்குக் கிடச்சிது? அம்மணி எங்கே?

ஜெயசீலன்—அம்மணி இங்கே வந்தாளென்று உனக்கு எப்படித் தெரியும்?

மாடப்பன்—நானுங்க அந்த மலக்கிட்ட ஆடு மேச்சிகினு இருந்தனுங்க. எனக்கிண்ணு பசி காதடைக்கிறது. எம்மடசம்சாரம் சாதம் போட்டா இல்லே. கோவம் பொறுக்காம இரண்டு அடிபோட்டேன். அவ திருப்பிக்கினு......

ஜெயசீலன் — அடே, கேட்ட சங்கதி சொல்லு.

புருஷோத்தமன் — மாடப்பா, வீட்டுக்காரியம் அப்புறம் சொல்லு. அம்மணி இங்கே வந்தது உனக்கு எப்படித் தெரியும்?

மாடப்பன் — சொல்ரன் கம்மினு இருங்க. ஆடு மனம் போல தழேமேய்து; பசிணுக்கொல்றது.....

ஜெயசீலன் — எய் முட்டாள் — அம்மணியைப் பற்றிச் சொல்லு.

மாடப்பன் — சாமி, சொல்ரேன் - கம்மினு இருங்க.

புருஷோத்தமன் — லீலாவைக் கண்டாயா?

மாடப்பன் — நானுங்க அப்படியே பாறைமேல் இருந்தேன். புல்லாங்குழல் மாதிரி இனியகீத ஒலிகேட்டேன். கேட்டதும் குயில், மயில், வானம்பாடி எல்லாப் பறவைகளும் கூடுகளில் பதுங்கிக்கொண்டன. புலி, ஆடு, மான் எல்லாம் நின்ற நிலையில் அசையாது......

ஜெயசீலன் — கம்பரும் காளிதாசனும் உன்னைக் கண்டால் என்ன செய்வார்?

மாடப்பன் — நானு, ஆட்டைப் பட்டியில் அடச்சிட்டு, அம்மணி குரல் கேட்டதிசையில் போனேன், எனக்கிண்ணு மயிர் சிலுத்துக்கிச்சி.

புருஷோத்தமன் — ஏன் அவ்வளவு பயம்.

மாடப்பன் — இங்கே ஒரு மந்திரவாதி அலேகிருன்...

ஜெயசீலன் — அண்ணு, நான் சொன்னேன் பார்!

புருஷோத்தமன் — கேள், பதருதவன் காரியம் சிதருது. மனக் காவலேக்கடக்க மாந்திரீகனுலும் ஆகாது.

மாடப்பன் — நானு நீங்க அம்மணிகூட இருக்கிறதாகவே எண்ணிக்கொண்டேன், அப்புறம் பார்த்தால் மதுபாலன் அம்மணிகிட்டப் பேசுகிருன். அவன் கையில் இருப்பது மாந்திரீகக்கோல். நான் ஒண்டிக்காரன்.

ஜெயசீலன் — (இடையனைப் பிடித்துக் குலுக்கி) மனுஷப்பதரே, பார்த்துக் கொண்டு கருடஸ்தம்பம் போல் நின்ருயா? [இரண்டு சகோதாரும் புலம்புகிருர்]

**(அழகுடைய ஜானகியை என்றமெட்டு)**

1. அழகுடைய லீலாவை யார்கொண்டு போனுரோ
அன்புடைய லீலாவை யார்கொலே செய்தாரோ.

2. கொடிய சண்டாளர்களே கூடி உலாவுகின்ற
கூர் இருள்கானகத்தில் கூடஇராமல் விட்டோம்.

3 கானகத்துமக்களே காட்டில் வாழும் புள்ளினங்காள்
இனிக்காணப் போமுேமோ இனியகுண பெண்ணரசை

4. மான்போன்ற விழியுடையாள் மட்டற்ற அன்புடையாள் இச்சணமே அழைத்துவாரும் இனியகுண லீலாவை.

ஜேயசீலன் — மலைகளே, சிற்ருறுகளே, வனங்களே, வனவிலங்குகளே, பஞ்ச பூதங்களே சத்தியம் தலை காப்பது மெய்யாயின் செல்லத்தங்கை லீலாவுக்கு அனுகூலமாய் நில்லும்.

மாடப்பன் — மாந்திரீகன் குடிசையை அறிவேன். உங்களை அழைத்துப் போவேன். நீங்கள் அவனை வென்று, காவலில் வைத்து உலகோர் உய்யும் வழி தேடுவீர். மேலோர் வருந்திஞலும் கோபித்தாலும் உலகம் சீரடையும்.

[எல்லாம் போய்விட]

## நான்காம் களம்

இடம்: ஒரு அரண்மனை.

[லீலா, மதுபாலன் தனி ஆசனங்களிலும், மதுபாலன் சீஷர் வரிசையாயும் வீற்றிருக்க.]

மதுபாலன்—(கையில் மதுநிறைந்த பாத்திரம்). இதைச் சாப்பிடு மாதே, கற்பகமே. இதைக் குடிப்போர் மனக்கவலை நீங்கிச் சுகமடைவார்.

லீலாவதி — மூடனே, மதுபானம் பருகுவோருக்குச் சுகமேது? அது ஞானியைப் பேதையாக்கி, வீரனைத் தள்ளாடச் செய்யும்.

மதுபாலன் — நாயகமே, இது உன் ஆயாசத்தை மாற்ற வல்ல மருந்து. ருசி பார். பிரிய மில்லாவிடில் கொடுத்துவிடு; இதனல் அளவற்ற இன்பமடைவாய்.

லீலாவதி — மது உண்போர் சகல இன்பங்களையும் இழந்து துயருக்குத் தோழராவார். கவலை அவருக்குச் சொந்தம்.

மதுபாலன் — நன்மை தீமை இன்னதென்று அறியாத பெண்ணே, இதெல்லாம் உனக்கு யார் கற்பித்தார்? மதுபானம் கெட்டது, நல்லதல்ல, என்று கூச்சலிடும் அரை வைத்தியரிடம் கற்ருயோ? நல்ல குரு, நல்ல சிஷன்! சுந்தரியே, இந்த அமிர்த பானம் உண்டு உன் தவிப்பை மாற்று.

லீலாவதி — கொஞ்சம் சுத்தஜலம் கிடைத்தால் அது களையை நீக்கும். நீ காட்டுவதாய்ச் சொன்ன குடிசை இதுவோ? மது, அமிர்தமல்ல, நஞ்சு; அதை விற்கிறவன் பஞ்சமா பாதகன். அது துக்கத்தின் தாய்; நோய்களின் தந்தை, மரணத்தின் தூதன்.

மதுபாலன் — அவசரப்படாதே, பேதாய், இது மகிழ்ச்சியின் பூமி. கோபமும் விசனமும் இங்கே வருவதில்லை. நான் உனக்குக் குற்றேவல் செய்யக் காத்திருக்கிறேன். இந்தப் பானம் கொஞ்சம் சாப்பிடு, என்னை நம்பு.

லீலாவதி — மாயக்காரா, நான் போகவேண்டும். உன்னை நம்பினவர்களுக்கு வரும் பலன் என்ன? தரித்திரம், அவமானம், அகாலமரணம்!

மதுபாலன் — அவசரப்படாதே, இன்னமுதே. இந்தப் பானமானது சுவை மிகுந்த திராக்ஷக்கனியின் ரசம். சுந்தரியே, நீ இதை விஷமென்று எப்படிச் சொல்வாய்? என்னைச் சந்தேகிப்பது சகல சற்குணமும் பொருந்திய உனக்கு அடாது.

லீலாவதி — நல்ல பாம்பு பால் உண்டு விஷம் கொடுக்கிறது. மாதுரியமான கனிகளை அழித்து விஷம் எடுக்கிறாய். இது வெட்கமான காரியம். பெரும் பாவம்.

மதுபாலன் — மாதரசே, உனது அறிவை மெச்சினேம். ஆயினும் ஆராய்ச்சி செய்து பார். கடவுள் உலகில் பழங்கள் முத்து ரத்நங்கள் ஏன் உண்டாக்கினார். நூல் நூற்க எண்ணிறந்த பட்டுப் பூச்சிகள் நெற்றி வேர்வை சிந்த உழைப்பதேன். நாம் உண்டு உடுத்து, மகிழ்வாய் இருக்கவல்லோ. நாம் அவற்றை அனுபவியாதிருந்தால் அந்த ஈவுகளை அசட்டை பண்ணுவதாகுமே.

லீலாவதி — அம்மம்ம, இதென்ன குதர்க்கம்! சிருஷ்டியில் பலர் கந்தல் உடுத்து உணவின்றிவாட, மற்றவர் பெருந்திண்டிக்காரராய் வெறிக்கக் குடித்து மதிமயங்கித் திரியவேண்டுமா?

மதுபாலன் — பூங்கொடியே, நீ இப்படி வீண்காலம் கடத்துகிறாய். பால்யத்திற்குரிய இன்பம் கடந்து போகிறது. என்னை மணந்து இங்கே இன்பமாய் இரு.

லீலாவதி — ஆஹா! நல்ல ஆலோசனை சொன்னாய். அறத்தின்வழி நடந்தால் முதிர்வயதிலும் சந்தோஷம் உண்டு.

மதுபாலன் — (தனக்குள்) எல்லாக் காவலோடும் உன் இருதயத்தைக் காத்துக்கொள். அதிலிருந்து ஜீவ ஊற்றுப் பிறக்கும் என மொழிந்தார் ஒரு ஞானி. கேவலம், ஒரு பெண்! இவள் என்னை வெல்லவா?

சீஷன் — 1. அம்மணி, இவ்வளவு பிடிவாதமா.

சீஷன் — 2. இந்த மதுபானப் பிரீதியால் என் செல்வ மெல்லாம் இழந்தேன், அது அத்தனை ருசி.

சீஷன் — 3. நீ பிடிவாதம் பண்ணினாலும் எஜமான் விடார்.

சீஷன் — 4. என் சம்சாரம் நான் குடிக்கத் தடை பண்ணுகிறதில்லை. சும்மா குடி, அதில் என்ன கெட்டுப்போகும்?

லீலாவதி — ஆஹா, என்ன விபரீதம்! ......

[சேவகர், சகோதரர் வருகிறார். மாடன் பின் வருகிறான். சீஷர் ஓடிப்போகிறார்.]

ஜெயசீலன் மதுவோடு பாத்திரத்தைத் தரையில் மோதி அடிக்கிறான். புருஷோத்தமன் மாந்திரீகக் கோலை எடுத்துக்கொள்ளுகிறான்.

[ராஜாவின் ஆட்கள் மதுபாலனைக் கைதியாக்கி விலங்கிட எல்லாரும் போய் விடுகிறார்கள்.]

[நியாயவிசாரணை 5-ம் களம் நிறுத்திவிட்டோம்.]

## 29. திருவள்ளுவ நாயனார்

உலகத்தில் நூற்றுக்கணக்கான பாஷைகள் வழங்கி வரினும் நல்ல நூல்கள் அடங்கியுள்ள பாஷைகளே முதன்மையானவைகளாக மதிக்கிறோம். பூர்வத்தில் வழங்கித் தற்காலம் உபயோகப்படாத கிரேக் லத்தீன் சமஸ்கிருதம்போன்ற பாஷைகளில் நல்ல நூல்கள் இருக்கும் காரணத்தால் அவற்றை மறப்பது அரிது. அறிஞர்

அவற்றைக் கற்றுவருகிறுர். தமிழ்ப் பாஷையானது பழைய காலங்களில் பேரறிவாளர் எழுதிய பலவித கிரந்தங்களை உடையது. இன்றைக்கும் அதின் அழகு மங்கவில்லை. குறள் என்பது தமிழ் நூல்களில் சிறந்ததோர் நூல். அதை எழுதினவர் திருவள்ளுவர்.

சிருஷ்டிகர்த்தாவான பிரம்மா அவதாரம் எடுத்துத் திருவள்ளுவர் என்னும் நாமத்தோடு உலகில் ஜீவித்துப் பல கலைகளைப் புகட்டினுர். அவர் ஔவையாரின் சகோதரன். அவருடைய வரலாறு பூரணமாய்க் கூறும் நல்ல நூல்கள் உள. ஆதலின் சில விஷயங்கள் மட்டுமே இங்கு சொல்லுவோம்.

அக்காலங்களில் பகவன் எனப் பெயர்கொண்ட ஸ்தல யாத்திரை செய்யும் பிராமணன் ஒருவர் இருந்தார். அவர் ஒரு சத்திரத்தில் தங்கியிருக்கும்பொழுது அயல்கிராமத்திலுள்ள இளம் பெண் ஒருத்தி, ஆதியென்னும் பெயர்கொண்டவள் அவர் பக்கம்வந்து நின்றுள். பகவன் அவளை ஈனஜாதிப் பெண் என நினைத்து விவாகம்செய்ய மறுத்தார். பின்பு அவள் பெறும் குழந்தைகளைப் பெற்றவிடத்தே விட்டுப்போக இணங்குவாளாணுல் மணம் புரிவதாய்ச் சொன்னுர். அப்படியே சம்மதித்து விவாகம்செய்து உலகோர் புகழுக்கிசைந்த ஏழு மக்களைப் பெற்றுர்கள். முருகக்கடவுளுடைய துணைவியான வள்ளியும், கவிக்கரசியான ஔவையும், தெய்வப் புலவரான திருவள்ளுவரும் அவரில் சிறந்தவர்.

ஆதிபெற்ற அருமைக் குழந்தைகள் ஒவ்வொருவருமே தமது நிலைமைக்கேற்றபடி நடந்துகொண்டார்கள். அவர்கள் அன்னையின் அளவுக்கடங்காத அன்பை

யும் ஆதாரவையும் பெற்று இன்புறவேண்டிய நாளில் அகதியாய் விட்டுவிடப்பட நேர்ந்தபோது மயங்கிப் பிரலாபிக்கும் தாயைத் தைரியப்படுத்தி பகவான் கிருபைப் பிரவாகத்தின்மேல் தமக்கு இருக்கும் விசுவாசத்தையும் வெளியிட்டார்கள். அவற்றில் ஔவையார் சொன்ன கவியும் நாயனர் சொன்ன கவியும் இங்கு காண்போம்.

ஔவை :

இட்டமுடன் என் தலையில் இன்னபடி என்றெழுதி
விட்ட சிவனுஞ் செத்துவிட்டானே — முட்டமுட்ட
பஞ்சமேயானாலும் பாரமவனுக்கன்னாய்
நெஞ்சமே அஞ்சாதே நீ.

திருவள்ளுவர் :

எவ்வுயிரும் காக்க ஒரு ஈசனுண்டோ இல்லையோ
அவ்வுயிரில் யாமொருவன் அல்லவோ — வவ்வி
அருகுவ்து கொண்டிங் கலைவதேன் அன்றாய்
வருகுவது தானே வரும்.

ஆதிபெற்ற அரும்புதல்வர் ஒவ்வொருவருமே அவர்கள் நம்பிக்கை வீண்போகாது, காதலுடன் காக்கப்பட்டு மகா புருஷராயும் பேர்பெற்ற மாதராயும் விளங்கினார்கள்.

ஔவை ஒரு சேரியில் பாணர் அகத்தில் வளர்ந்து மங்காப்புகழ்பெற்ற கவிக்கரசியானாள். உப்பை வண்ணார் வீட்டில் வளர்ந்து மாரியம்மன் ஆனாள்.

அதிகமான் என்ற குமாரன் கலைகளில் தேர்ந்து, காவியங்கள் பல எழுதினார்.

உறுவை என்னும் பெண்மணியைக் கள் விற்போர் வளர்த்தார்கள். அவள் பத்திரகாளி தேவதையாகிப் பல பெருஞ் செயல்கள் நிறைவேற்றினாள்.

கபிலர் ஒரு பிராமணன் வீட்டில் வளர்ந்தார். ஏழு வயதுச் சிறுவனாய் இருக்கும்போதே ஒரு அகவல் சொல்லி நற்கருமத்தால் உயருவதே மேல்ஜாதியன்றிப் பிறப்பினால் வருவதல்லவென்று யாவரும் அங்கீகாரம் செய்யுமாறு புகட்டினார். வள்ளியம்மை குறவர் மனையில் வளர்ந்து சுப்பிரமணியக்கடவுளை விவாகம் செய்து மேன்மை பெற்றாள்.

கடைசிப்பிள்ளை திருவள்ளுவர் மயிலாப்பூரில் உள்ள இலுப்பைத் தோப்பில் பிறந்து இலுப்பை மலர்களின் தேனை உண்டு சிலகாலம் வளர்ந்தார். பின்பு பிள்ளையில்லாமல் பெருந்தவம் செய்த ஒரு வேளாளன் வீட்டில் எடுத்துக்கொள்ளப்பட்டார். அவரது செவிலித் தந்தையர் அவருக்குத் திருவள்ளுவர் என நாமகரணம் சூட்டினார்கள். வேளாளனது சுற்றத்தார் அவரை இகழ்ச்சி செய்தமையின் அவர் அவர்களுடைய மனநோவுக்குச் சமாதானம் சொல்லி சிலநாள் ஊருக்கருகில் இருந்த ஒரு பனைமரத்தின் நிழலில் இருந்தார். அவ்விடம் விட்டு திருமூலர், மகா வித்வான்களாகிய போகர்கள், சித்தர்கள் வசிக்கும் மலைக்குப்போய் வாசம் செய்து தானும் சிறந்த வித்வானாகிக் கல்விக்களஞ்சியமாய் விளங்கினார். அக்காலங்களில் தொண்டை மண்டலத்தில் மகா கெடுதிகள் விளைத்த ஒரு வேதாளத்தை ஜெயித்தார். அதனால் நலம்பெற்ற சீமானாகிய வேளாளன் மகள், வாசுகி என்னும் பெண்ணை விவாகம் செய்து கொண்டார். அவள் பெருமையைப் பின் கூறுவோம்.

திருவள்ளுவநாயனர் அறிவும் அருளும் பொருந்தியவரென்று புகழ்பெற்றதோடு அற்புதச் செயல் பல முடித்து அடைந்தார்க்கும் அயலார்க்கும் ஆதரவாய் இருந்தார். அவர் மயிலேயில் (மயிலாப்பூர்) தமக்கு ஒரு வீடமைத்து, நெசவுத் தொழில் செய்து, எவருக்கும் மாதிரியான இல்லறம் நடத்திவந்தார். அவருக்குச் சீஷராயிருக்க விரும்பின பலரில் ஏலேலசிங் என்பவரை மிகவும் ஆதரித்தார். பின்னவரின் பிள்ளையில்லாக்குறை நீக்கினர். பின்பு நாட்டில் உண்டான பஞ்சகாலத்தில் அவரை நெல் விற்கச்சொல்லி அற்புதமாய் ஜனங்களை இரட்சித்ததோடு சீஷனையும் சீமானாக்கினர்.

தம்மைச் சூழ்ந்திருந்த பலருடைய வேண்டுகோளின்படி திருக்குறள் என்னும் பிரசித்திபெற்ற காவியத்தை 1330 கவிகளில் எழுதினர். இதில் கவி ஒவ்வொன்றும் இரண்டு வரி வெண்பாக்களானதால் நூலுக்குக் குறள் என்ற பெயர் உண்டாயிற்று.

நாயனர் நூலைப் புகழாதவர் இல்லை. என்றாலும் அதை வித்வான்கள் பலரும் அங்கீகாரம் செய்யவேண்டியது நியமம். அதற்காக மதுரை தமிழ் சங்கத்தார் 49 பேர் முன் அது வாசிக்கப்பட்டபோது, அதன் பொருள் விஸ்தாரத்தையும் எவ்விதக் குற்றத்திற்கும் நீங்கலாய் இருக்கும் பெருந்தன்மையையும் கவனித்து வியப்புற்றனர். என்றாலும் அச்சங்கத்தார் பெரியார் பலரையும் இகழ்ந்த தமது வழக்கத்தின்படி நாயனரையும் அவர் இயற்றிய அரிய நூலையும் அவமதிக்கும் நோக்கமாயிருந்தார்கள். நாயனர் நூல் அவர்களையும் வென்றது. தோல்வியடைந்த புலவர் 49 பேரும்

ஆளுக்கு ஒரு சாற்றுக்கவி கொடுத்து நாயனர் மேன்மையை அங்கீகாரம் செய்தார்கள். அக்கவிகளே திருவள்ளுவமாலை என்னும் நூலாகும். இடைக்காடர் என்னும் கவிராயரும் ஔவையாரும் கொடுத்த கவிகள் மட்டும் இங்கு சொல்லுவோம்.

இடைக்காடர் கவி,

கடுகைத் துளைத்தேழ் கடலைப்புகட்டி
குறுகத் தரித்த குறள்.

ஔவையார் மேற்படி கவியை மாற்றி, 'அணுவைத் துளைத்தேழ் கடலைப்புகட்டி, குறுகத்தரித்த குறள்,' என்று சொல்லி இடைக்காடர் கருத்தைப் பன்மடங்கு அழுத்தமாக்கிச் சொன்னுள்.

இக்குறள் நூலானது மொத்தம் 1330 கவிகளை 133 அதிகாரங்களில் அடக்கியுள்ளது. எந்த மதத்தாரும் வாஞ்சையோடு வாசிக்கக்கூடியது. கடவுள் வாழ்த்து, மழை, தவம், தருமம், இல்லறம், பொருள் தேடல் முதலிய சகலவிதப் பொருள் அடக்கமும் அதில் காணலாம். பரிமேலழகர் என்பவர் குறளுக்குக் கருத்துரை எழுதியிருக்கிறுர். வேறுபலர் எழுதிய உரைகளும் உண்டு.

வாசுகி அம்மையார் தன் பர்த்தாவுக்கு இசைந்த உத்தமியாய் இருந்தமையில் அவள் ஜீவியமே ஓர் உத்தம நூலுக்குச் சமமாய் விளங்கினது. அவள் இறந்து சில காலத்துக்குப் பின் நாயனர் பரமபதம் அடைந்தார்.

## 30. இலக்கண பாடம்

### புணரியல்

உதாரணம் : ண் + ந = ண      ன் + ந = ன

| | | | | |
|---|---|---|---|---|
| அரசன் | + | நல்லவன் | = | அரசனல்லவன் |
| அரண் | + | நல்லது | = | அரணல்லது |
| கந்தன் | + | நடித்தான் | = | கந்தனடித்தான் |
| கவண் | + | நன்று | = | கவணன்று |
| வேலவன் | + | நாட்டினன் | = | வேலவனாட்டினன் |
| அண்ணன் | + | நட்பு | = | அண்ணனட்பு |
| வீண் | + | நாள் | = | வீணாள் |

மேல்கண்ட நிலைமொழிகள் ண், ன் எழுத்துக்களில் முடிகின்றன ; வருமொழிகள் நடுவில் துடங்குகின்றன.

ன் + ந<br>ண் + ந    சேரும்போது ண் கெட்டு ந, ண வாகிறது.

அப்படியே ன் கெட்டு ந, ன வாகிறது.

நிலைமொழியில் ன், ண் தனி குற்றெழுத்தோடு கூடியிருக்கக் கூடாது.

விதி : குற்றெழுத்தைச் சேராத ன், ண், நவோடு கூடும்பொழுது ந வானது னகரம் ணகரமாய் மாறி, ன் ண் கெட்டுப்போகும்.

வினாக்கள் :

1. ன், ண், ஈற்றிலுள்ள பதங்கள் 10 - எழுது. நவில் துடங்கும் பதம் 10 எழுது.

2. ண் + ந<br>ன் + ந    புணரும்படி பத்து உதாரணம் எழுது.

3. குற்றெழுத்தோடு சேர்ந்த ண், ன் எப்படிப் புணரும்? உதாரணம் எழுதிக்காண்க.

(a) உயிரோடு, (b) வல்லினத்தோடு, (c) நவோடு.

# செய்யுள் பாடம்

குமர குருபரசுவாமிகள் அருளிச் செய்த

## I. நீதிநெறி விளக்கம்

### கல்வியின் பயன்

அறம்பொருள் இன்பம் வீடும் பயக்கும்
புறங்கடை நல்லிசையும் நாட்டும் உறுங்கவலொன்
றுற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க் குற்ற துணை. (1)

### கல்விக்கு இருக்கவேண்டிய சிறப்பு

எத்துணைய வாயினும் கல்வியிட மறிந்து
உய்த்துணர் விலெனின் இல்லாகும்—உய்த்துணர்ந்தும்
சொன்வன்மை இன்றெனின் என்னாகும் அஃதுண்டேல்
பொன்மலர் நாற்றம் உடைத்து. (2)

### சபையில் பேசும் விதம் : தருமம் செய்யும் முறை

அவையஞ்சி மெய்விதிர்ப்பார் கல்வியும் கல்லார்
அவையஞ்சா ஆகுலச் சொல்லும் — நவையஞ்சி
ஈத்துண்ணார் செல்வமும் நல்கூர்ந்தார் இன்னலமும்
பூத்தலில் பூவாமை நன்று. (3)

### கல்வி ஓர் அரிய ஆபரணம்

கற்ருேர்க்குக் கல்விநலனே கலன் அல்லால்
மற்ருேர் அணிகலம் வேண்டாவாம் — முற்ற
முழுமணி பூணுக்குப் பூண்வேண்டா ; யாரே
அழகுக் கழகு செய்வார். (4)

### கல்விமிகக் கற்றேன் என்ற கர்வம் வேண்டாம்

முற்றும் உணர்ந்தவர் இல்லை முழுவதூஉம்
கற்றனம் என்று களியற்க — சிற்றுளியால்
கல்லும் தகரும் ; தகரா கனங்குழாய்
கொல்லுலைக் கூடத்திஞல். (5)

### தருமத்தின் சிறப்பு

கல்வியுடைமை பொருளுடைமை என்றிரண்டு
செல்வமும் செல்வ மெனப்படும் — இல்லார்
குறையிரந்து தம்முன்னர்நிற்ப போல் தாமும்
தலைவணங்கித் தாழப் பெறின். (6)

### உயிர் மாட்சிமை

வாங்குங் கவளத் தொருசிறிது வாய்தப்பின்
தூங்குங்களிறேே துயருரு ; — ஆங்கது கொண்(டு)
ஊரும் எறும்பு இங்(கு) ஒருகோடி யுய்யுமால்
ஆரும் கிளையோடு அயின்று. (7)

### எடுத்தநல் முயற்சியைத் தொடுத்து முடிக்கவேண்டும்

உறுதி பயப்ப கடைபோகா வேனும்
இறுவரை காறும் முயல்ப — இறுமுயிர்க்கும்
ஆயுள் மருந்தொழுக்கல் தீதன்ருல் அன்னபோல்
ஆவனவும் உண்டு சில. (8)

## II. அறப்பளீசுர சதகம்

### செய்யவொண்ணாதவை

வஞ்சகர் தமைக்கூடி மருவொணா தன்பிலார்
வாசலிற் செல்லொணாது
வாதெவ ரிடத்தினும் புரியொணா தறிவிலா
மடையர்முன் நிற்கொணாது
கொஞ்சமேனுந் தீதுசெய்யொணா தொருவர்மேற்
குற்றஞ்சொ லொண்ணாதயல்
கோதையர்களோடு பரிகாசஞ் செயொண்ணாது
கோளுரைகள் பேசொணாது
நஞ்சுதரும் அரவொடும் பழகொணா திருள்வழி
நடந்துதனி ஏகொணாது
நதிபெருக் காகின் அதில் நீஞ்சல்செய் யொண்ணாது
நல்வழி மறக்கொணாது
அஞ்சாமல் அரசர்முன் பேசொணா திவையெலாம்
அறியும்எம தருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுர தேவனே. (1)

### ஒன்றற்கொன்று அழகு செய்வன

வாழ்மனை தனக்கழகு குலமங்கை குலமங்கை
வாழ்வினுக் கழகுசிறுவர்
வளர்சிறுவ ருக்கழகு கல்விகல் விக்கழகு
மாநிலம் துதிசெய் குணமாம்
சூழ்குண மதற்கழகு பேரறிவு பேரறிவு
தோன்றிடில் அதற்கழகுதான்
தூயதவ மேன்மை உபகாரம் விரதம்பொறுமை
சொல்லரிய பெரியோர்களைத்

தாழ்தல்பணி விடைபுரிதல் சீலநேசம் கருணை
சாற்றும்இவை அழகென்பர்காண்
சௌரிமல ரோன்அமரர் முனிவர்முச் சுடரெலாம்
சரணம்எமை ரட்சியெனவே

ஆழ்கடல் உதித்துவரு விடமுண்ட கண்டனே
அண்ணல்எம தருமைமதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீசுர தேவனே. (2)

பொருள் தேடிச் செலவு செய்யும் வகை

புண்ணிய வசத்தினுல் செல்வமது வரவேண்டும்
பொருளை ரட்சிக்க வேண்டும்
புத்தியுடன் அதுவொன்று நூருகவே செய்து
போதவும் வளர்க்க வேண்டும்

உண்ணவேண் டும் பின்பு நல்ல வஸ்த் ராபரணம்
உடலில் தரிக்க வேண்டும்
உற்ற பெரி யோர் கவிஞர் தமர் ஆ துலர்க்குதவி
ஓங்குபுகழ் தேடவேண்டும்

மண்ணில்வெகு தருமங்கள் செயவேண்டும் உயர்மோக்ஷ
வழிதேட வேண்டும் அன்றி
வறிதிற் புதைத்துவைத் தீயாத பேர்களே
மார்க்கம் அறியாக்குருடராம்

அண்ணலே கங்கா குலத்தலைவன் மோழைதரும்
அழகன் எமதருமை மதவேள்
அனுதினமும் மனதில்நினை தருசதுர கிரிவளர்
அறப்பளீ சுரதேவனே. (3)

அரும்பதவுரை :

1. மருவொண்ணாது (மருவ ஒண்ணாது) - கலத்தல் கூடாது, புரியொண்ணாது - செய்தல் கூடாது, அயல் கோதையர் - வேறு பெண்கள் ; அயலார் மனைவியர், கோதை - மாலை, கோதையர்- மாலையை அணிந்தவர், நஞ்சு-விஷம், நீஞ்சல்-நீந்தல் என்பதன் போலி, இவையெலாம் அறியும்-இவற்றையெல்லாம் தெரிந்து நடக்கும், ஒண்ணாது என்பது ஒன்றாது என்பதன் மரூஉ.

2. மனை - வீடு, குலமங்கை - நற்குடியிற் பிறந்தவள், மா நிலம் - பெரிய உலகத்தி லுள்ளவர் ; ஆகு பெயர், தவம் மேன்மை - தவத்தினாலுண்டாகும் மேன்மை, தாழ்தல்-வணங்கல், பணிவிடை புரிதல் - தொண்டு செய்தல், சீலம் - நல்லொழுக்கம், நேசம் - அன்பு, கருணை - அருள், சாற்றும் - சொல்லுகின்ற, சௌரி - சூரசேனன் வம்சத்திற் பிறந்தவன், கிருஷ்ணன் ; ஈண்டுத் திருமாலைக் குறித்தது, மலரோன் - தாமரை மலரி லிருப்பவன்; பிரமன், அமரர்-மரணமில்லாதவர்; தேவர்- முச்சுடர் - சூரியன், சந்திரன், அக்கினி, சரணம் - அடைக்கலம், ரட்சி - காப்பாற்றுவாய், என-என்று வேண்ட, விடம்- விஷம்.

3. வசம் - சார்பு, ரக்ஷித்தல் - காத்தல், போதவும் - மிகவும், வஸ்திரம் - உடை, கவிஞர் - பாவாணர், தமர் - தம்மவர்; உறவினர், ஆதுலர்-வறியவர், ஓங்கு புகழ்-மிக்க புகழ், அன்றி- அல்லாமல், வறிது - வீணே, ஈயாதபேர்கள் - கொடாதவர்கள், மார்க்கம் - நல்வழி, கங்காகுலம்-வேளாண்குலம், கங்கை நதி - வேளாண் குலத்திற்கு உரிய நதி.

## III. கடவுள் வாழ்த்து

1. திருவேயென் செல்வமே, தேனே, வானோர்
செழுஞ்சுடரே, செழுஞ்சுடர் நற்சோதி, மிக்க
உருவேயென் உறவேயென் ஊனே, ஊனின்
உள்ளமே உள்ளத்தின் உள்ளே நின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே, மணியாடுபாவாய் காவாய். — அப்பர்

2. அப்பன்நீ அம்மைநீ ஐயனும்நீ
அன்புடைய மாமனும் மாமியும்நீ
ஒப்புடைய மாதரும் ஒண்பொருளும்நீ
ஒருகுலமும் சுற்றமும் ஒரூரும்நீ
துய்ப்பனவும் உய்ப்பனவும் தோற்றுவாய்நீ
துணையாய் என்னெஞ்சம் துறப்பிப்பாய்நீ
இப்பொன்நீ, இம்மணிநீ, இம்முத்துநீ
இறைவன்நீ ஏறூர்ந்த செல்வன்நீ. — அப்பர்

3. அன்புமயமே கருணை யானந்த வாரியே
அருள்மொழி மழைக் கொண்டலே
ஆருயிர்க் குயிரான அமிர்த சஞ்சீவியே
அடியர் இதயாம் பரத்தில்
இன்புற உதித்திலகு மெய்ஞ்ஞான பானுவே
ஏத்தருஞ் சுகுண நிதியே,
இதரசம யாதீத நிலையமே வானிழிந்(து)
இம்பர்வரு ஜீவ நதியே. — கிருஷ்ணபிள்ளை

அரும்பதவுரை :

1. திரு - அழகு, செல்வம் கொடுக்கும் லக்ஷ்மி ; ஊன் - மாமிசம் ; கற்பகம் - சகல நலமும் கொடுப்பது.

2. துய்ப்பன - அனுபவிக்குமின்பம் ; உய்ப்பன - ஜீவனின் விருப்பம் ; துறப்பிப்பாய் - வீணான விருப்பங்களை விடச்செய்.

3 வாரி - கடல் ; பானு - சூரியன்; ஏத்தரும் - துதிக்கு அடங்காத (மகத்துவம்) ; இம்பர் - இவ்விடம்.

பெருமாள் திருமொழி

# IV. தசரத சக்கரவர்த்தித் திருமகனைக் கௌசலையார் தாலாட்டும்

பாசுரம்

மன்னுபுகழ்க் கௌசலைதன்
மணிவயிறு வாய்த்தவனே!
தென்னிலங்கைக் கோன்முடிகள்
சிந்துவித்தாய்! செம்பொன்சேர்
கன்னிநன்மா மதில்புடைசூழ்
கணபுரத்தென் கருமணியே
என்னுடைய இன்னமுதே!
இராகவனே! தாலேலோ. (1)

புண்டரிக மலரதன்மேல்
புவனியெல்லாம் படைத்தவனே!
திண்திறலாள் தாடகைதன்
உரமுருவச் சிலைவளைத்தாய்
கண்டவர்தம் மனம்வழங்கும்
கணபுரத்தென் கருமணியே
எண்திசையும் ஆளுடையாய்
இராகவனே! தாலேலோ. (2)

கொங்குமலிக் கருங்குழலாள்
கௌசலைதன் குலமதலாய்!
தங்குபெரும் புகழ்ச்சனகன்
திருமருகா! தாசரதீ!
கங்கையிலும் தீர்த்தமலி
கணபுரத்தென் கருமணியே!
எங்கள் குலத்தின்னமுதே!
இராகவனே! தாலேலோ. (3)

தாமரைமேல் அயனவனைப்
படைத்தவனே தயரதன்தன்
மாமதலாய்! மைதிலிதன்
மணவாளா வண்டினங்கள்
காமரங்க ளிசைபாடும்
கணபுரத்தென் கருமணியே!
ஏமருவுஞ் சிலைவலவா!
இராகவனே! தாலேலோ. (4)

பாராளும் படர்செல்வம் பரதநம்பிக் கேயருளி
ஆராவன் பினையவனோ டருங்கானம் அடைந்தவனே!
சீராளும் வரைமார்பா! திருக்கண்ண புரத்தரசே!
தாராளும் நீண்முடிஎன் தாசரதீ! தாலேலோ. (5)

---

அரும்பதவுரை:

1. தசரத சக்கரவர்த்தியின் மனைவிமாரில், ஸ்ரீராமர் தாயார் பெயர் கௌசலை. இலங்கையில் போர்செய்து ஜெயிப் போன்; கணபுரம் - கருமணி - இராமர் நிறம் கறுப்பு, இராகவன் - ராமர் ரகுவம்சத்தில் உதித்தவர்.

2. புண்டரீகம் - தாமரை; புவனி - உலகம்; ஆளுடையாய் - அரசாட்சி செய்பவனே.

3. சனகன் - ஜனகமகாராஜன்.

4. அயன் - பிரமா; மாமதலாய் - பெருமைபெற்ற குமாரன். ஏமருவும் - காக்கும்; சிலை - வில்.

5. படர் - திரண்ட; பரதநம்பி - பரதனுகிய தம்பி; பினையவன் - இளையவன் இலக்குமணன்.

ராமர் குழந்தையாயிருக்கும்போதே கௌசலை பின்வருங் காரியங்களை அறிந்து பேசினதுபோல் பெருமாள் பாடுகிறார்.

# V. இனியது நாற்பது

(சுருக்கம்)

பிச்சை புக்காயினுங் கற்றன் மிகவினிதே
கற்றவை கைகொடுத்தல் சாலவு முன்னினிதே
முத்தேர் முறுவலார் சொல்லினி தாங்கினிதே
தெற்றவு மேலாயார்ச் சேர்வு. (1)

யானை யுடைய படைகாண்டன் மிகவினிதே
ஊனைத்தின் றூனைப் பெருக்காமை முன்னினிதே
கான்யாற் றடைகரை யூரினி தாங்கினிதே
மான முடையார் மதிப்பு. (2)

கொல்லாமை முன்னினிது கோல்கோடி மாராயன்
செய்யாமை முன்னினிது செங்கோல னுகுதல்
எய்துந் திறத்தா லினிதென்ப யார்மாட்டும்
பொல்லாங் குரையாமை நன்கு. (3)

ஆற்றுந் துணையா லறஞ்செய்கை முன்னினிதே
பாற்பட்டார் கூறும் பயமொழி மாண்பினிதே
வாய்ப்புடைய ராகி வலவைக ளல்லாரைக்
காப்படைக் கோட லினிது. (4)

தங்க ணமர்வுடையார் தாம்வாழ்தன் முன்னினிதே
அங்கண் விசும்பி னகனிலாக் காண்பினிதே
பங்கமில் செய்கைய ராகிப் பரிந்தியார்க்கு
மன்புடைய ராத லினிது. (5)

கடமுண்டு வாழாமை காண்ட லினிதே
நிறைமாண்பில் பெண்டிரை நீக்க லினிதே
மனமாண்பி லாதாரை யஞ்சி யகற
லெனைமாண்பு தானினிது நன்கு. (6)

குழவி பிணியின்றி வாழ்த லினிதே
கழறு மவையஞ்சான் கல்வி யினிதே
மயலிக ளல்லராய் மாண்புடையார்ச் சேரும்
திருவுந் தீர்வின்றே லினிது. (7)

---

அரும்பதவுரை :

இக்கவிகளில் இன்பம் தரக்கூடிய காரியங்கள் மாத்திரம் சொல்லியிருக்கிறது.

1. கற்றவை கைகொடுத்தல் - கல்வி உபயோகப்படுவது; முத்தேர் - முத்துப்போல் அழகான; முறுவல் - பல். முத்தேர்- பெண்கள் புன்னகையோடு பேசும்சொல், தெற்றவு மேலாயார்- தெளிந்த அறிவுள்ள மேன்மக்கள்.

2. ஊன் - மாமிசம் ; கான்யாறு - காட்டாறு.

3. மாராயன் - பெரிய ராஜன் ; முன் இனிது - மிகவும் நல்லது, செய்யாமை - ஆட்சி செய்யாமை ; கோல்கோடி - அநீதியாய் நியாயவிரோதமாய், எய்துந்திறம்-தம்மால் கூடியவரையில்; யார் மாட்டும் - யாரைக் குறித்தும்.

4. ஆற்றுந்துணை - (தம்மால்) கூடியமட்டும் ; பாற்பட்டார் - குணசாலிகள் ; பயமொழி - உபயோகமான வார்த்தை ; வாய்ப்பு - உயர்குணம் ; அலவைகள் - பேய்போன்ற கெட்ட குணம் உடையவர்கள்.

5. தம்கண் அமர்வுடையார் - சாந்தகுணமுள்ளவர் ; அம்- அழகிய ; விசும்பு - ஆகாயவிரிவு; பரிந்து - இரங்கி.

6. நிறைமாண்பு மகிமைக்கு ஆதாரமான கற்பு.

7. கழறும் அவை - பேசும் சபை ; மயலி - செல்வச் செருக்குள்ளவன் ; திரு - செல்வம் ; தீர்வின்றேல் - நீங்காதிருக்குமாயின்.

சாலச்செய் வாரே ...
கிடந்தா னெழுத லரிதான்மற ...
அறங்காலே செய்யாத வாறு.

### எப்போதும் நன்முயற்சியைக் கைவிடாதிரு

சென்ற நாளெல்லாஞ் சிறுவிரல்வைத் தெண்ணலாம்
நின்றநாள் யார்க்கு முணர்வரி — தென்றொருவன்
நன்மை புரியாது நாளுலப்ப விட்டிருக்கும்
புன்மை பெரிது புறம். (2)

### எல்லாம் கற்றவர் ஒருவருமில்லை

பலகற்றோம் யாமென்று தற்புகழ வேண்டாம்
அலர்கதிர் ஞாயிற்றைக் கைக்குடையுங் காக்கும்
சிலகற்றார் கண்ணு முளவாம் பலகற்றார்க்
கச்சாணி யன்னதோர் சொல். (3)

### மனச்சாட்சிக்கு அடங்கு

தன்னைத்தா னெஞ்சங் கரியாகத் தானடங்கின்
பின்னைத்தான் எய்தாப் பயனில்லை — தன்னைக்
குடிகெடுக்கும் நெஞ்சிற்குக் குற்றேவல் செய்யின்
பிடிபடுக்கப் பட்ட களிறு. (4)

### மனதை அடக்கினவன் மோட்சம் சேரவகை கண்டவன்

நின்னை யறப்பெறு கிற்கிலேன் நன்னெஞ்சே
பின்னையான் யாரைப் பெறுகிற்பேன் — நின்னை
அறப்பெறு கிற்பனேற் பெற்றேன்மற் றீண்டு
துறக்கந் திறப்பதோர் தாள். (5)

. ககருமத்தையும் ஆராய்ந்தறிக

காய்த லுவத்த லகற்றியொரு பொருட்கண்
ஆய்த லறிவுடையார் கண்ணதே — காய்வதன்கண்
உற்றகுணந் தோன்றா தாகு முவப்பதன்கண்
குற்றமுந் தோன்றாக் கெடும். (7)

---

அரும்பதவுரை :

தரும மார்க்கத்தின் சுருக்கமான பொருள் புணர்ச்சிகளைக் கவனித்து அருத்தம் சொல்லுக.

1. காலை - சிறுவயது; சால - அதிகமாய்; தலைப்படுவார்- சித்தியடைவார் ; மாலை - முதிர்வயது ; கிடந்தான் - வியாதியில் படுத்தவன்.

2. சென்ற நாள் - கடந்தகாலம் ; நின்றநாள் - வருங்காலம் ; நாள் உலப்ப - நாளை வீணாக்கி ; புன்மை - அறிவீனம்.

3. அலர் - விரிந்த, கதிர் - கிரணம். ஞாயிறு - சூரியன்.

4. கரி - சாட்சி ; களிறு - யானை. எய்தா - அடையாத.

5. நல் + நெஞ்சு - நன்னெஞ்சு ; துறக்கம் - மோட்சம்.

6. கள் - தேன், காட்டுளார் - தவசிகள்.

7. காய்தல் - வெறுத்தல் ; உவத்தல் - விரும்புதல் ; ஆய்தல் - ஆராய்தல் ; உற்றகுணம் - உள்ள தன்மை.

Printed at the 'Caxton Press', Madras — 1933.

13919
சென்னை-600 008

Caxton Press
MADRAS